


# உயிர்மெய்






சிறுகதை, வானொலிநாடக எழுத்தாளரும் ஒளியோவியக் கலைஞருமான **மேகவர்ணன்** அவர்களால் 33ஆண்டுகளுக்குமுன் (1974) மட்டுநகரில் எடுக்கப்பட்ட ஒளியோவியம். தன்னோடு பாதுகாத்து வைத்திருக்கும் சில அரிய படைப்புக்களுடன் இன்னமும் இதனைப் பாதுகாத்து வருகிறார். அவரது ஆவணக்கோப்பிலிருந்து உயிர்மெய் வாசகர்களுக்காக.

# உள்ளிருப்பவை



## கட்டுரைகள்



05

"ஆண்களுக்காகவே இருக்கிறோம் நாம்" என்று எந்த ஜீவபட்சியாவது இருக்கிறதா?

–பெரியார்–

06

ஏ.ஜே! ஒரு விவாதம் தந்த உறவு –சமுத்திரன்–

அந்த மனிதர் சுருக்கமாகவும் தெளிவாகவும் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்– யாழ்ப்பாணத்தில் அறிவாளர்களின் நிலமை பற்றிக் கேட்டபோது *Intellectuals are an endangered species here* எனக் கூறினார்.





12

தமிழ் கற்பித்தலின் பின்னணி?

–என்.சரவணன்–

பிள்ளைகள் தமது எதிர்காலத்துக்காக அந்தந்த நாட்டுச் சூழலுக்குள் ஒன்றவும் வேண்டும். அதே வேளை தமக்கு அடங்கியவர்களாக இருக்கவேண்டும். தாமும் விரும்புகிற ஒருவரிடம் தாரைவார்க்கும்வரை இது தொடர வேண்டும் என்கிற எதிர்பார்ப்பே இதன் பின்னணியில் உள்ள தாற்பரியம்.


20

தோழர் கே.டானியலின் தணிக்கை செய்யப்பட்ட கட்டுரை

–சமுத்திரனின் ஒரு முன்மொழிவுடன்–

இந்தக் கட்டுரையில் யாழ்ப்பாணத்தில் சாதியத்திற்கெதிரான போராட்டங்களின் வரலாற்றுப் பின்னணியைத் தெளிவாக்கி 1960களில் இடம்பெற்ற வெகுஜனப் போராட்டத்தின் முக்கியத்துவம் பற்றி ஆயப்பட்டுள்ளது.





32

கறுப்பாகிக்கிடந்த ஈழமண்ணில் புதிதாய் எழுந்து வீழ்ந்த விதை!

–கரவைதாசன்–

வடமராட்சி துன்னாலை மேற்கு சின்னத்தம்பி செல்லையா. சமூகச் சீர்திருத்த எண்ணமும் அடக்குமுறைக்கெதிரான போராட்டச் சிந்தனையும் இவரை கம்யூனிசக் கட்சியிலும் அதனைத் தொடர்ந்து சிறுபான்மைத் தமிழர் மகாசபையிலும் இணைந்து செயற்பட வைத்தது.

## தகவல்கள்.. 09 40

## கவிதைகள்


| | |
|---|---|
| பானுபாரதி | பக். 10, 11 |
| சகி | பக். 28 |
| சின்னக்கண்ணம்மா | பக். 28 |
| தமயந்தி | பக். 29, 43 |
| குட்டியன் | பக். 39 |
| பூகம்பன் | பக். 38 |
| றஞ்சினி | பக். 42 |
| சாரங்கா | பக். 57 |
| வே. சசிகலா | பக். 57 |


## சிறுகதை

விழிகள் –நக்கீரனார்–

36

தயவுசெய்து மனிதர்களை நாயே என்று திட்டாதீர்கள். இது நாய்களை அவமானப் படுத்துவதாகிவிடும்.



## விமர்சனம்

44

நந்திபோல் ஒரு இடைமறிப்பு!

–பானுபாரதி–

தனது அடையாளத்தையும், ஆளுமைகளையும் தொலைத்துவிட்டு, தன்னைச் சூழவுள்ளவர்களுக்காகவும், மற்றவர்களின் நலன்களுக்காகவும்; சமூகத்துக்காகவும் தன்னை விட்டுக் கொடுப்பவளாகவும், அனுசரித்துப் போபவளாகவும் இருக்க நிர்ப்பந்திக்கப் படுகிறாள். பொருளாதார ரீதியாக ஆண்களில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை இல்லாத இந்த நாடுகளில்கூட ஆணில் பெண் தங்கிருக்கத்தான் வேண்டுமென்ற மறைமுக, நேரடி நிர்ப்பந்தங்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன.




கவிதாவின் கவிதைத் தொகுப்பு அறிமுகம்

## நினைவில் நிறுத்தி

உயிர்மெய் அல்பம்

தோழர் பரா –தமயந்தி–

18



மறக்காத மனமுகமாய்...

–பிரியங்கா–

30



**கலைச்செல்வன்**

அழியாத் தோழமையின் 2ம் ஆண்டின் நினைவுகள்

## ஓளியோவியம், ஓவியம்


| | |
|---|---|
| இலக்கியா | பக். 01, 52 |
| மேகவர்ணன் | பக். 02 |
| தமயந்தி | பக். 28, 29, 44 |
| Ole Aasen | பக். 28, 39 |




## நேர்காணல்

48

தமிழன் என்று சொல்வது வெட்டிப்பெருமை

–ஆதவன் தீட்சண்யா–



# உயிர்மெய்

*பெண்கள் காலண்டிதழ்*

இதழ் -4

ஐப்பசி - மார்கழி 2007

தொகுப்பாசிரியர்கள்:

பானுபாரதி

தமயந்தி

*முன், பின் அட்டைப்படங்கள்:*

*இலக்கியா*

*உள்ளட்டைப்படம்:*

*மேகவர்ணன்*

வருடசந்தா

நோர்வே, 200குரோணர்கள்

ஏனைய நாடுகள், 20யூரோ

ஆசிய நாடுகளுக்கு இலவசம்

வங்கி கணக்கிலக்கம்:

0539 4365272 Postbank



தொடர்புகளுக்கு:

UYIRMEI

Kaptein Linges vei 9a

6006 Aalesund

Norway

E-Mail:

editor.uyirmei@hotmail.com


எம் தோழமைக்குரிய வாசகர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் வணக்கம்!

தாமதத்திற்கு வருந்தியும், மன்னிப்புக் கோரியுமே பழக்கப்பட்ட வெளியீட்டுலகம் நம்மது. எப்படிப் பிரயத்தனப் பட்டேனும் உயிர்மெய்யை தாமதிக்காது, நிறுத்தாது வெளிக்கொணர வேண்டுமென எப்படித்தான் நாம் திடசங்கர்ப்பம் பூணினும், எல்லா வெங்காயத்தையும் மீறி தடைகளும் தடங்கல்களும் எம்மை தடுமாற வைத்துத்தான் விடுகின்றன.

ஆயிரமாயிரமாய் இணையத்தளங்கள் வந்தாலும் பதிப்பின் தேவையும் பிரதானமெனக் கருதியதால் பொருளாதார நெருக்கடி எம்மைத் திணறச் செய்யுமெனத் தெரிந்தும் வெளியீட்டு முயற்சியை மேற்கொண்டோம். நாம் அச்சப்பட்டதுபோலவே நான்காவது இதழிலேயே நெருக்கவாரம் எம்மைத் திணறடிக்கச் செய்துதான் விட்டது.

சரியாக ஒருவருட இடைவெளியின் பின் உயிர்மெய் நான்காவது இதழை உங்களிடம் சமர்ப்பிக்கின்றோம். கடந்த ஒரு வருட காலத்துள் எமக்குக் கிடைக்கப்பெற்ற பல பயனுள்ள கட்டுரைகள் காலத்தாற் பிந்தியதால் பிரசுரிக்க முடியவில்லை. அது மட்டுமல்ல, உயிர்நிழல் ஆசிரியரின் வீட்டில் கதவை உடைத்து பெறுமதிமிக்க வரலாற்று ஆவணங்களை பரீஸ் புலிகள் கொள்ளையிட்டதற்கான எமது நீண்ட கண்டனத்தை தொகுப்பாளர் தலையங்கத்தில் எழுதியிருந்தோம். காலதாமதமானதால் அதனையும் இந்த இதழிலிருந்து அகற்றினாலும்கூட, அந்தக் கொள்ளை நடவடிக்கைக்கான எமது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதில் நாம் பின் நிற்கப் போவதில்லை. இந்த நடவடிக்கை தனியொரு நபர் மீதானதென நாம் பார்க்க முடியாது. மாற்றுக் கருத்துக் கொண்ட அனைத்து சக்திகளுக்குமான ஒரு எச்சரிக்கையும் மிரட்டலும்தான். இற்றைவரை காலமும் புலம்பெயர்ந்த சூழலில் இப்படியான பல அடாவடித் தனங்கள் புலிகளால் மேற் கொள்ளப்பட்டுக் கொண்டுதான் வருகின்றது. இனியும் வாய் மூடி மவுனிகளாய் யாரும் இருக்க முடியாது. பக்கத்து வீட்டுப் படலையை உடைக்கும் பேய்க்குஞ்சுகள், ஒரு எட்டு வைத்து நாளை நம் வீட்டுக் கூரையைப் பிரித்தெறியாது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. உரிய நேரத்தில், உரியவிடத்தில் அனைத்து அராஜகங்களுக்கும் எதிராக நாம் நமது குரல்களை உயர்த்தவில்லையெனில் எப்போதும் குரலறுந்தவர்களாகவே போய் விடுவோம்.

கடந்த வருடம் ஏ.ஜே. கனகரட்ணா அவர்கள் இறந்த சில தினங்களிலேயே அவரது நினைவுக் குறிப்பொன்றை சமுத்திரன் அவர்கள் உயிர்மெய்க்கு அனுப்பி வைத்திருந்தார். கால தாமதமாயினும் அந்த நினைவுக் குறிப்பின் பதிவுத் தேவை கருதி ஒரு வருடத்தின் பின் இந்த இதழில் பிரசுரிக்கின்றோம்.

அதே கால கட்டத்தில் எழுத்தாளர் கே.டானியல் அவர்களின் 1979ம் ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட கட்டுரை ஒன்றையும் அன்றைய அதன் பிரசுர முக்கியத்துவம் கருதி சமுத்திரன் அவர்கள் அனுப்பி வைத்திருந்தார்கள். அக்கட்டுரையும் இந்த இதழில் வெளியிடப் படுகின்றது. இதுவரை அக் கட்டுரை அச்சில் வெளிவரவில்லையென அறியப்பட்ட போதும், சில தினங்களின்முன் தோழர் கரவைதாசன் அவர்களின் கருத்தின்படி டானியல் நினைவு மலரில் கடந்த ஆண்டு வெளிவந்ததாக அறியப் படுகின்றது.

கடந்த மூன்று இதழ்கள் தொடர்பாக நிறையவே வாசகர் கடிதங்களும், காட்டமான விமர்சனங்களும் கிடைக்கப் பெற்ற போதும் அவற்றை இந்த இதழில் பிரசுரிப்பது சாத்தியமற்றதாகின்றது. ஆயினும் வாசக, படைப்பாளர்களது கருத்துக்கள் கரிசனைப்படற்குரியவை. அவை கருத்திலும் கொள்ளப்படும்.

தோழமையுடன்

-பானுபாரதி, தமயந்தி-



# "ஆண்களுக்காகவே இருக்கிறோம் நாம்" என்று எந்த ஜீவபட்சியாவது இருக்கிறதா?

*பெரியார் 1958*

எல்லாத் துறைகளிலும் எல்லோர்களுக்குள்ளும் மாற்ற உணர்ச்சி ஏற்பட்டாலொழிய, நம் நாட்டைப் போன்ற, நம் சமுதாயத்தைப் போன்ற தாழ்த்தப்பட்ட, அடிமையாக்கப்பட்ட நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் விமோசனமில்லை. பெண்கள், சமுதாயத்தில் சரி பகுதி எண்ணிக்கை கொண்டவர்கள். இரண்டொரு உறுப்பில் மாற்றமேயல்லாமல், மற்றப்படி பெண்கள் மனித சமுதாயத்தில் ஆண்களுக்கு முழு ஒப்பும் உவமையும் கொண்டவர்கள் ஆவார்களென்பேன்.

நாமும் அவர்களை சிசு, குழந்தைப் பருவம் முதல் ஓடி ஆடி விளையாடும் பருவம் வரையில் கொஞ்சி முத்தங்கள் கொடுத்துப் பலவிதத்தும் பேத உணர்ச்சியற்று ஒன்றுபோலவே கருதி நடக்கின்றோம்; பழகுகின்றோம். அப்படிப்பட்ட மனித ஜீவன்கள் அறிவும் பக்குவமும் அடைந்தவுடன், அவர்களைப் பற்றி இயற்கைக்கு மாறான கவலை கொண்டு, மனித சமுதாயத்தில் வேறாக்கி கடைசியாக ஒரு பொம்மையாக்கிப் பயனற்ற ஜீவனாக மாத்திரமல்லாமல், அதைப் பெற்றோருக்கு ஒரு தொல்லையான பண்டமாக ஆக்கிக் கொண்டு, அவர்களது வாழ்வில் அவர்களை, அவர்களுக்கும் மற்றும் உள்ளவர்களுக்கும் கவலைப்படத்தக்க ஒரு சாதனமாகச் செய்து கொண்டு, அவர்களைக் காப்பாற்றவும், திருப்திப் படுத்தவும் பெருமையும் அடையச் செய்ய வேண்டியதான ஒரு அஃறிணைப் பொருளாகவே ஆக்கி வருகின்றோம்.

இன்று பெண்கள் வேலை என்ன? ஒரு ஆணுக்கு, ஒரு பெண்ணாக அமைவது. அது எதற்கு? ஆணின் நலத்திற்குப் பயன் படுவதற்கும், ஆணின் திருப்திக்கும், ஆணின் பெருமைக்கும், ஒரு கருவி என்பதல்லாமல் வேறு என்ன சிந்தித்துப் பாருங்கள். ஒரு ஆணுக்கு ஒரு சமையல்காரி; ஒரு ஆணின் வீட்டுக்கு ஒரு காவல்க்காரி; ஒரு ஆணின் குடும்பப் பெருக்கிற்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை; ஒரு ஆணின் கண் அழகிற்கும் மனப் புளகாங்கிதத்திற்கும் ஓர் அழகிய அலங்கரிக்கப்பட்ட பொம்மை என்பதல்லாமல், பெண்கள் பெரிதும் எதற்குப் பயன் படுகிறார்கள், பயன் படுத்தப் படுகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!


இது என்ன நியாயம்? மனித சமுதாயம் தவிர மற்றப்படி மிருகம், பட்சி, பூச்சி, ஐந்து முதலியவைகளில் வேறு எந்த ஜீவனாவது, "ஆண்களாகவே இருக்கிறோம் நாம்" என்ற கருத்துடன், நடத்தையுடன் இருக்கிறதா என்று பாருங்கள்! இந்த இழி நிலையில் பெண்களுக்கு அவமானமாய்த் தோன்றவில்லை என்பதற்காகவே ஆண்கள், பெண்களை இவ்வளவு அட்டூழியமாக நடத்தலாமா என்று கேட்கிறேன்.

நான் சொல்வது இங்குள்ள பல ஆண்களுக்கும் ஏன் பெண்களுக்கும்கூட வெறுப்பாய், குறைவுமாய், சகிக்க முடியாதபடியுமாய்த் தோன்றலாம் என்பது எனக்குத் தெரியும். இந்த வியாதி கடினமானது. தழை அடித்துப் பாட மந்திரம் போடுவதாலும், பூச்சுப் பூசிப் பற்றுப் போடுவதாலும் விலக்கக்கூடிய வியாதியல்ல இது. கூர்மையான ஆயுதத்தால் ஆழப்பட அறுத்துக் கிளறி காரம் (எரிச்சல் மருந்து) போட்டுப் போக்கடிக்க வேண்டிய வியாதி! அழுத்திப் பிடித்துக் கண்டித்து, அதட்டி அறுத்துத் தீர வேண்டியதாகும்.

நம் பெண்கள் உலகம், பெரிதும் மாற்றமடைய வேண்டும். நம் பெண்களைப்போல் பூமிக்குப் பாரமானவர்கள், மனிதனுக்குத் தொல்லையானவர்கள் நல்ல நாகரிகமான வேறு நாடுகளில் கிடையாது. இங்கு படித்த பெண், படியாத பெண் எல்லோரும் பொம்மைகளாகவே இருக்கிறார்கள். அவர்கள் பெற்றோர்களும் கணவன்மார்களும் அவர்களது (பெண்ணை) அழகிய பெண்மைத் தன்மையைக் கொண்டே திருப்தியடைகிறார்கள்; பெருமையடைகிறார்கள். பெண்களைத் திருப்தி செய்ய, அவர்களை நல்ல பெண்களாக ஆக்க விலையுயர்ந்த நகையும் துணியும் கொடுத்து அழகிய சிங்காரப் பொம்மைகளாக (பதுமைகளாக) ஆக்கிவிட்டால் போதும் என்று நினைக்கிறார்கள்.

நம் பெண்கள் நாட்டுக்கு சமூகத்திற்குப் பயன்படாமல் அலங்காரப் பொம்மைகளானதற்கு, ஆண்கள் கண்களுக்கு விருந்தானதற்குக் காரணம் இந்தப் பாழாய்போன, ஒழுக்கமற்ற சினிமாப் படங்களையும், சினிமா நட்சத்திரங்களையும் பார்த்து தினம் ஒரு "பேஷன்"நகை, துணிக்கட்டு, வெட்டு சாயல் ஏற்பட்டதுவே என்பேன். அந்தப் பெண்கள் தன்மை என்ன? ஒழுக்கம் என்ன? இவை எல்லாவற்றையும் நம்குலப் பெண்கள் என்பவர்கள் கருதாமல், புகழ், வீரம், பொதுநலத் தொண்டு முதலியவற்றால் கீர்த்தி பெற்ற ஆண்களைப்போல் தாங்களும் ஆக வேண்டும் என்றில்லாமல் இப்படி அலங்கரித்துக்கொண்டு திரிவது, பெண்கள் சமுதாயத்தின் கீழ்ப் போக்குக்குத்தான் பயன்படும் என்று வருந்தகின்றேன்.

எனவே, பெற்றோர்கள் பெண்களைப் பெண் என்றே அழைக்காமல் ஆண் என்றே அழைக்க வேண்டும். பெயர்களும் ஆண்கள் பெயர்களையே இடவேண்டும். பெண்களைப் புருஷனுக்கு நல்ல பண்டமாக மாத்திரம் ஆக்காமல், மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றவும் கீர்த்தி புகழ் பெறும் பெண்மணியாகவும் ஆக்க வேண்டும். பெண்ணும், தன்னைப் பெண்ணினம் என்று கருத இடமும் எண்ணமும் உண்டாகும்படியாக நடக்கக்கூடாது. ஒவ்வொரு பெண்ணுக்கும், நமக்கும் ஆணுக்கும் ஏன் பேதம்? ஏன் நிபந்தனை? உயர்வு-தாழ்வு என்ற எண்ணம் எழ வேண்டும். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், நம் பெண்கள் வெறும் போகப் பொருளாக ஆக்கப்படக்கூடாது. அவர்கள் புது உலகம் சித்தரிக்க வேண்டும்.■



# ஏ.ஜே- ஒரு விவாதம் தந்த உறவு

இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு சர்வதேச அரசு சாரா நிறுவனத்தைச் சார்ந்தவர் தான் யாழ்ப்பாணம் செல்லவிருப்பதாகவும் அங்கு மனந்திறந்து கருத்துப்பரிமாறவல்ல சிலரைச் சந்திக்க விரும்புவதாகவும் என்னிடம் கூறி எனக்குத் தெரிந்த அத்தகையோர் யாராவது யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்களா எனக் கேட்டார். அவரிடம் நான் யாழ்ப்பாணத்தில் ஏ.ஜே கனகரட்ணா என்பவரைச் சந்திக்கும்படி கூறினேன். யாழ் சென்றபோது அவர் ஏ.ஜே யைச் சந்தித்தார். அந்த சந்திப்பைப் பற்றி அவர் கூறிய வார்த்தைகளை நான் மறக்கவில்லை.

"அந்த மனிதர் சுருக்கமாகவும் தெளிவாகவும் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்- யாழ்ப்பாணத்தில் அறிவாளர்களின் நிலமை பற்றிக் கேட்டபோது Intellectuals are an endangered species here" (இங்கே அறிவாளர்கள் ஆபத்துக்குள்ளாகி விட்ட ஒரு வகையினர்) எனக் கூறினார்.

ஏ.ஜேயின் மறைவு பாரிய இழப்பாகும். மிகக் குறிப்பாகத் தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு பேரிழப்பாகும். இறுதிவரை சுதந்திரமான அறிவாளராக, கூர்மை மிகு விமர்சகராக வாழ்ந்தவர் அவர். அவருடன் நெருங்கிப் பழகியவர்கள், அவரது நீண்டகால நண்பர்கள் அவருடைய மனிதப் பண்புகள் பற்றி, அவர் தானாகத் தேர்ந்து வாழ்ந்த "புறத்தியான்" வாழ்பாங்கு பற்றி எழுதியுள்ளனர். பேராசிரியர் சிவத்தம்பி, எழுத்தாளர் மு.பொன்னம்பலம் போன்றோர் ஏ.ஜேயுடன் நீண்ட கால உறவு கொண்டோர் என்பதை அவர்களின் சமீபத்திய கட்டுரைகள் காட்டுகின்றன.

மு.பொவின் கட்டுரையில் ஏ.ஜேயின் நகைச்சுவை பற்றியும் அறியக் கூடியதாக இருந்தது. ஏ.ஜேயுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டவில்லை. அவருடன் தொடர்பு ஏற்பட்ட சில காலத்தில் நான் வெளிநாடுகள் சென்று வாழ நேர்ந்ததும் இதற்கு ஒரு காரணம். ஆயினும் நம்மிடையே ஒரு பண்புமிகு உறவு இருந்தது என்பேன்.

அந்த உறவுக்கு வழி வகுத்தது கருத்து ரீதியில் காரசாரமாக மாறியு ஒரு விவாதமாகும். 1980ல் Lanka Guardian (LG) எனும் சஞ்சிகையில் தமிழ் முற்போக்கு இலக்கியம் பற்றி நான் எழுதிய ஒரு கட்டுரை என்னை ஒரு பெரிய விவாதத்திற்குள் எடுத்துச் செல்லும் என நான் எதிர்பார்த்திருக்கவில்லை. அந்தக் கட்டுரையை நான் எழுதியதற்கான காரணம் அரசியல். அப்பொழுது நான் கொழும்பில் வாழ்ந்து வந்தேன். ஒரு தடவை யாழ் சென்றிருந்தபோது பேராசிரியர் கைலாசபதி எழுத்தாளர்கள் டானியல், இரகுநாதன் போன்ற பல நண்பர்களுடன் வழமை போன்று பல உரையாடல்களில் ஈடுபட்டேன். யாழில் இலக்கிய விமர்சனங்கள் சற்று வலுப்பெற்றிருந்தன போல் இருந்தது. அன்றைய பல்கலைக்கழக சூழலும் இதற்கு உதவியாக இருந்தது எனலாம். நண்பர்கள் நு.்.ஹ்மான், சித்திரலேகா மௌனகுரு போன்றோருடன் உரையாடியபோதும் இது தெளிவாயிற்று. இந்த விவாதங்கள் பல மட்டங்களில் வேறுபட்ட வடிவங்களில் இடம் பெற்றன. அப்பொழுது ஏ.ஜேயுடன் எனக்குத் தொடர்பு இருக்கவில்லை. அவரை ஓரிரு தடவை கண்டிருக்கிறேன். அவருடைய சில கட்டுரைகளையும் படித்திருக்கிறேன். ஆனால் அவருடன் ஒரு சம்பாசனையில் ஈடுபடும் சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை.

நான் கொழும்பு திரும்பிய பின்னர் யாழில் அறிந்தவற்றைப் பற்றி சில நண்பர்களுடன் உரையாடினேன். அந்த நாட்களில் கொழும்பிலும் மலையகத்திலும் ஒத்த கருத்துடைய பல இடதுசாரி நண்பர்களுடன் மார்க்சிசத்தின் சமகால செல்நெறிகள் பற்றி, தமிழ் கலை இலக்கியப் போக்குகள் பற்றி கலந்துரையாடல்களை நடத்தி வந்தோம். கைலாசபதி கொழும்பு வரும்போது என்னுடன் தொடர்பு கொள்வார். நாமிருவரும் பல பொழுதுகளை பயனுள்ள உரையாடல்களில் கழித்திருக்கிறோம். எனக்கு இடதுசாரி அரசியலிலும் மார்க்சிய அரசியல் பொருளாதாரத்திலும் ஆழமான ஈடுபாடு. கைலாஸ் ஒரு மார்க்சிய அறிஞர். அவருடனான நட்பு எனக்கு அறிவு ரீதியில் பயனுள்ளதாக இருந்தது. இதையெல்லாம் நானிங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் LGல் நான் எழுதிய கட்டுரையின் பின்னணியின் சில அம்சங்களைக் காட்டவே.



நான் எழுதிய கட்டுரை கைலாசின் நிலைப்பாட்டிற்கு சார்பானதாகவும் அப்போது நான் சுயமாக ஏற்றிருந்த சோசலிச யதார்த்தவாதத்தின் போக்குடன் இணைந்ததாகவும் இருந்தது. கட்டுரையின் பிரதான நோக்கம் உருவ

வாதத்தை விமர்சிப்பதாக இருந்தது. இடதுசாரி அரசியல் போக்குகளுடன் தம்மை இனங்காணாத சில எழுத்தாளர்களும் வெளிப்படையான வலதுசாரிப் போக்குடைய சிலரும் தமிழ் முற்போக்கு இலக்கிய ஆக்கங்களை அழகியலற்ற வெறும் அரசியல் சுலோகங்கள் எனும் வகையில் சாடி விமர்சிக்கும் போக்கை மனதில் கொண்டே எனது முதலாவது கட்டுரை எழுதப்பட்டது. ஆயினும் அது பற்றிய விமர்சனம் நான் மேலே குறிப்பிட்ட வட்டங்களிலிருந்து வரவில்லை. பொதுவாக இடதுசாரி அரசியலுக்கு சார்பான சில விமர்சகர்களிடமிருந்தே வந்தது.




எனது கட்டுரை பற்றிய ஒரு காரமான விமர்சனத்தைத் தனக்கே உரிய பாணியில் ஏஜே எழுதியிருந்தார். அவருடைய கட்டுரையுடன் அவருடைய நெருங்கிய நண்பரும் இலங்கையின் தலைசிறந்த இலக்கிய விமர்சகர்களில் ஒருவருமான றெஜி சிறிவர்த்தனா எனது கருத்துக்களை விமர்சித்து விவாதத்திற்கு அழைத்த ஒரு நீண்ட கட்டுரையும் LGல் பிரசுரமாயின. ஏஜேயின் கட்டுரையில் நான் உருவவாதிகளைத் தாக்கியது பற்றி ஆக்க இலக்கியத்தின் சமூக உள்ளடக்கத்தின் முக்கியத்துவம் பற்றி கூறியது பற்றி மட்டுமன்றி மறைமுகமாக கைலாசபதியையும் தாக்கி எழுதியிருந்தார். "சரிந்து வரும் பிம்பங்களுக்கு சமுத்திரன் முண்டு கொடுக்கிறார்" எனக் கிண்டல் பாணியில் அவர் எழுதியது நான் கைலாசை ஆதரித்து எழுதியது பற்றியே என்பது தெளிவாயிற்று. தொடர்ந்த விவாதத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் உள்ளார்ந்த அரசியலினதும் தனி நபர்களுக்கிடையிலான முரண்பாடுகளின் தாக்கங்களும் இருந்திருக்கலாம் என நம்புகின்றேன். கைலாசபதியை விமர்சித்த சிலர் அவருடைய கருத்துக்களை மாத்திரமன்றி தனிப்பட்ட தாக்குதல்களிலும் ஈடுபடுவது அப்போது ஒரு வழக்கமாயிருந்ததை பலர் அறிவர்.

றெஜியின் கட்டுரை முழுக்க முழுக்க கோட்பாட்டுரீதியானது. இலக்கியத் துறையில் நீண்ட கால அனுபவமும் ஆழ்ந்த அறிவும் கொண்ட றெஜியுடனும் "யாழ்ப்பாணத்தின் றெஜி சிறிவர்த்தனா" என்று சிலரால் அழைக்கப்பட்ட ஏஜேயுடனும் மோதுவது என்பது எனக்கு ஒரு சவாலாயிற்று. ஆனால் அதிலிருந்து பின்வாங்குவதில்லை என முடிவெடுத்தேன். அதன் பயன் அந்த விவாதம் பலரை ஈர்த்த அதேவேளை எனது அறிவு வளர்ச்சிக்கும் ஒரு உந்துதலாக உதவியது. விவாதத்தின்போது கொழும்பு சமூக விஞ்ஞானிகள் சங்கத்தில் நான் தீவிரமாக இயங்கி வந்தேன். அப்போது கலை இலக்கியத்துறையில் மிகவும் ஈடுபாடுள்ள சார்ள்ஸ் அபேசேகரவும் எனது நீண்ட கால நண்பனும் தோழனுமாகிய கலாநிதி நியூட்டன் குணசிங்கவும் றெஜிக்கு நான் பதில் கொடுப்பதற்கு சில நூல்களையும், கட்டுரைகளையும் தந்துதவினார். சார்ள்ஸ் அபேசேகரா அவர்கள் றெஜியின் சந்ததியினர் மாத்திரமன்றி அவரது நிலைப்பாடு சார்ந்தவராகவும் இருந்தார். அதேவேளை எனது கருத்துக்களுக்காக நான் வாதாடுவதை மிகவும் ஊக்குவித்தார். நியூட்டன் எனது நிலைப்பாட்டை ஆதரித்தார். சமவேளையில் இந்த விவாதம் LGல் பங்கு பெறாதவர் மத்தியிலும் இடம் பெற்றதெனலாம். சமூக விஞ்ஞானிகள் சங்கத்தில் இந்த விவாதம் பல தடவைகள் இடம் பெற்றது. ஒரு கட்டத்தில் எனதும் கைலாசினதும் நண்பரான பேராசிரியர் செனக பண்டாரநாயக்க தானும் LGல் இடம்பெறும் விவாதத்தில் பங்கு பற்றப் போவதாக என்னிடம் கூறி ஒரு கட்டுரையையும் எழுதி அதை "சாகர" எனும் புனைபெயரில் பிரசுரிக்க முடிவு செய்தார். அந்தப் புனைபெயரில் அவர் எழுதியது அதுதான் முதல்தடவை. சிங்களத்தில் "சாகர" எனும் சொல்லுக்கு சமுத்திரம் எனும் அர்த்தமாகும்.

மொத்தத்தில் LG விவாதம் ஆக்கபூர்வமாக இருந்தது என்பதே எனது கணிப்பீடாகும். விவாதம் இடம்பெற்ற காலம், அன்றைய அரசியல் பின்புலம், மாக்சியம் பற்றிய அன்றைய சர்வதேச ரீதியான விவாதங்கள், குறிப்பாக 1960கள்-1970களின் செல்நெறிகளைக் கணக்கிலெடுக்காது நமது அன்றைய நிலைப்பாடுகளையோ LGல் இடம்பெற்ற கருத்து மோதல்களையோ சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. எனது அரசியல் சிந்தனா விருத்தியில் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு பலமாக இருந்தது. 1980ல் நான் கட்சி அரசியலில் ஈடுபடாத போதிலும் 1960- 1970களில் ஒரு மாஓயிஸ்டாக இருந்தேன். கலைஇலக்கியம் பற்றிய எனது பார்வையின் உருவாக்கத்தில் போல்ஸ்விக் கட்சியின் சோசலிச யதார்த்தக் கொள்கையும் மாஓவின் கருத்துக்களும் முக்கிய பங்கு வகித்தன என்பது உண்மை. ஏஜேயின் நிலைப்பாடோ






இந்தப் போக்கின் விமர்சனத்தில் நிராகரிப்பில் வேரூன்றி இருந்தது. இது அன்றைய நிலை.

விவாதம் ஓய்ந்தபின் ஏஜேயை நேரில் சந்திக்க விரும்பினேன். நான் 1982 முற்பகுதியில் வெளிநாடு செல்வதற்கு முன் ஒருதடவை யாழ்ப்பாணத்தில் அவரைச் சந்தித்தேன். அந்தச் சந்திப்பில் LG விவாதம் பற்றி அவரும் பேசவில்லை. நானும் அதை எமது முதலாவது சந்திப்பிலேயே எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. இலங்கை அரசியல் பற்றிப் பேசினோம். அதில் நம்மிடையே கணிசமான ஒருமைப்பாடு இருந்ததை உணர்ந்தேன். அந்தச் சந்திப்பிற்கு பின்னர்தான் அவர் தொகுத்த அலை வெளியீடான "மார்க்சியமும் இலக்கியமும் சில நோக்குகள்" என்ற நூலைப் பார்க்க நேரிட்டது. அதை வாசித்தபோது என் மனதில் தோன்றியதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நான் ஏஜேயைச் சந்திக்க முன் அந்த நூலைப் படித்திருந்தால் அநேகமாக நமது LG விவாதம் விட்ட இடத்திலிருந்து தொடங்கியிருக்கும். அது எப்படிப் போயிருக்கும் என்று சொல்வது கடினம். ஆனால் அது நடைபெறவில்லை. காலம் மார்க்சிச அறிவுத் துறையிலும் இடதுசாரி அரசியல் போக்குகளிலும் பலவிதமான மாற்றங்களைக் கண்டது. இன்றைய எனது நோக்கில் அந்த விவாதத்தின் சட்டக மயமாக்கலிலேயே பல மாற்றங்கள் தேவைப்படலாம்.

அடுத்ததடவை நான் ஏஜேயைக் கண்டபோது துரதிஷ்டவசமாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். 1989ல் ஒரு ஐரோப்பிய நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்டத்தை மதிப்பீடு செய்யும் ஆலோசகராக யாழ் சென்றேன். அப்போ அங்கு நிலமை மிகவும் மோசமாகவே இருந்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக வந்த இந்திய அமைதிப்படையுடன் தமிழ் மக்கள் உறவு கொண்டாடிய காலம் போய் யாழ்ப்பாணத்தில் மக்கள் பல இன்னல்களை அனுபவித்த காலம் அது. அங்கு எனக்குக் கிடைத்த அனுபவங்களையும் நான் கண்டவற்றையும் ஒரு நீண்ட கட்டுரையாக எழுதியிருந்தேன். (Seven days in Jaffna: Life under Indian Occupation, Race & Class, 1989) நான் அங்கிருந்தவேளை ஏஜேயைச் சந்திக்க முயன்றேன். அப்போதான் அவர் திடீரென நோய்வாய்ப்பட்டாரென அறிந்தேன். நான் கொழும்புக்குத் திரும்பிய அதே விமானத்தில் அவரை அவருடைய சில நண்பர்கள் சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டு சென்றனர். அந்த நண்பர்களில் ஒருவர் குகமூர்த்தியாகும். இவர் பின்னர் கடத்தப்பட்டுக் காணாமல் போய்விட்டார். அவருடைய அன்பு கலந்த சிரித்த முகமும் அழகான பல்வரிசையும் சுருண்ட கேசமும் என்மனதில் நன்றாகப் பதிந்துள்ளன. மிகவும் சுகவீனமுற்றிருந்த நிலையிலிருந்த ஏஜேக்கு என்னைச் சரியாக அடையாளம் காண முடியவில்லை.



LANKA
GUARDIAN

Vol. 12 No. 13 November 1, 1989 Price Rs. 7.50 Registered at the GPO, Sri Lanka QJ/32/NEWS/89

**Sir Ivor, Sir Ukwatte and the Language Issue**
— *Jeyaratnam Wilson*

**The JVP and the L.I.C. Challenge**
— *Mervyn de Silva*

**One Week Under the IPKF**
— *N. Shanmugaratnam*

**Women Workers in the "Open Economy"**
— *Asoka Bandarage*

**Roots of the South Asian Crisis**
— *Ponna Wignaraja*

1994க்குப் பின்னர் பல தடவைகள் யாழ் செல்லும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இந்தக்காலத்திலேயே ஏஜேயைக் கண்டு கலந்துரையாடும் வாய்ப்புக்கள் கிடைத்தன. எனக்கு நன்கு அறிமுகமான கிருஷ்ணகுமார் குடும்பத்துடன் ஏஜே வாழ்ந்து வந்தார். என்னை முதலில் அங்கு அழைத்துச் சென்றவர் இன்னொரு நீண்டகால நண்பரான பேராசிரியர் சிவச்சந்திரனாகும். ஏஜேயைச் சந்தித்தபோதெல்லாம் இலங்கை மற்றும் உலக அரசியல் பற்றிப் பேசினோம். பல வருடங்களாக எனது ஈடுபாடு அரசியல் பொருளாதாரத் துறையிலேயே ஆழமாகப்ப திந்து விட்டது. இன்றைய மாக்சிய விவாதங்கள் மற்றும் உலக மயமாகல் பற்றிய வியாக்கியானங்களும் நமது உரையாடல்களில் இடம்பெற்றன. காலம் எமக்கிடையில் ஒரு பொதுவான புரிந்துணர்வுள்ள பரப்பினைக் கொடுத்து விட்டது போலும்.

LG ல் இடம்பெற்ற விவாதம் ஒரு மறக்க முடியாத அனுபவம். இன்று அதை மீள் உருவாக்க முடியாது. அதேவேளை அன்று நான் கொண்டிருந்த நிலைப்பாடு பற்றி நான் வருந்தவுமில்லை.

கடைசியாக நான் ஏஜேயை 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இரு தடவைகள் சந்தித்தேன். 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி யாழ் பல்கலைக்கழகத்தில் கலாநிதி M.நித்தியானந்தம் எழுதிய "இலங்கையின் பொருளாதார வரலாறு: வடக்குக் கிழக்குப் பரிமாணம்" எனும் நூலின் வெளியீட்டு விழாவில் நாமிருவரும் நூல் விமர்சகர்களாகக் கலந்து கொண்டோம். எனக்கு முன்னர் உரையாற்றிய ஏஜே தனது கருத்துக்களை மிகச் சுருக்கமாக ஒரு சில நிமிடங்களில் கூறிவிட்டு அமர்ந்து விட்டார். ஆனால் அந்தச் சிறிய உரையில் மிகவும் தாக்கமான கருத்துக்களை முன்வைத்தார். எனது உரை சற்று நீண்டதாகவே இருந்தது. விமர்சனத்தைப் பொறுத்தவரை நம்மிடையே சில ஒருமைப்பாடுகளும், வேறுபாடுகளும் இருந்தன. மறுநாள் ஏஜேயைச் சந்தித்தபோது நித்தியின் நூல் பற்றிய எனது மதிப்பீட்டைத் தான் விரும்பிக் கேட்டதாகவும் அதைக் கட்டுரையாக எழுதி கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவரும் ஒரு சஞ்சிகைக்கு அனுப்பினால் என்ன என்று கேட்டார். அதுவே நமது கடைசிச் சந்திப்பு. அதுவரையிலான நமது சந்திப்புக்களை விரல்விட்டு எண்ணி விடலாம்.

ஏஜேயின் மரணம் பற்றிக் கேள்விப்பட்டபோது அந்தக் கடைசிச் சந்திப்பும், அவரைச் சந்தித்த எனது நண்பரிடம் அவர் யாழ்ப்பாணத்தில் அறிவாளர்களின் நிலை பற்றிக் கூறிய வார்த்தைகளும் நினைக்கு வந்தன. ஏஜேயும் நானும் மீண்டும் சந்தித்தால் நம்மிடையே ஒரு பயனுள்ள கலந்துரையாடல் இடம் பெறும். ஒரு விவாதம் கூடத் தொடங்கியிருக்கலாம். அது காரசாரமாகவும் மாறியிருக்கலாம். ஆனால் நிச்சயமாக அது நாகரீகமான கருத்து மோதல்களின் வரையறைக்குள்ளேயே இடம் பெற்றிருக்கும். இது கற்பனைதான். ஆனால் நமது சமுகத்தில் சுதந்திரமான திறந்த விவாதங்களுக்கு உதவும் இடம் சுருங்கி மறைந்த துன்பியல்பற்றி அவர் கூறியது கற்பனையல்ல.❑

## நோர்வே RED YOUTH விடுக்கும் எச்சரிக்கை!

கடந்த இளவேனிற் காலப் பகுதியில் நோர்வே நாஸிகள் தங்களது அரசியல் நடவடிக்கைகளை மக்கள் மத்தியில் கூர்மைப்படுத்தும் பொருட்டு 'நோர்வே தேசிய வாதிகள்' என்னும் அமைப்பினைத் தோற்றுவித்துள்ளார்கள்.

இந்த நடவடிக்கையைக் கண்டித்தும், நோர்வேயிய அரசியல்வாதிகள், காவல் துறையினர் போன்றோரின் அசட்டுத்தனங்களை விமர்சித்தும் *நோர்வே Red Youth* என்ற இடதுசாரிய இளைஞர் அமைப்பு எச்சரிக்கை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. மேற்படி அறிக்கையில்:

''நாஸிக்குழுக்கள் எப்பொழுதுமே குற்றவாளிக் குழுக்களின் சட்ட விரோதமான செயல்களின் மூலம் இயக்கப்படும் அமைப்பாகவே இருந்து வந்துள்ளார்கள்.

உள்நாட்டு அரசியல்வாதிகளும் காவல்துறையும் 'கருத்துச் சுதந்திரம்' என்ற சாட்டுப்போக்கைச் சொல்லிக்கொண்டு, இத்தகைய அமைப்புக்களுக்கெதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்கு பின் நிற்கிறார்கள்.

கருத்துச் சுதந்திரம் என்ற போர்வைக்குள் இந்த நாஸிக்குழுக்கள் மறைந்து கொள்ள முடியாதென்பதை இந்த அரசியல் வாதிகளும், காவல்துறையினரும் விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

இந்தக் கிரிமினல்கள் (நாஸிகள்) தமது கொடியுடன் வீதியில் நடந்து செல்லும்வரை நாம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எல்லோரும் ஒன்றிணைந்து அமைப்புரீதியாக இத்தகைய குழுக்களுக்கெதிராகக் குரல் கொடுக்க வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்ந்த பாடல்



-பானுபாரதி - மூலம், நோர்வேஜிய மொழியில்: *Helge Vatsend (1928)*

என் சிநேகிதனே
என் காதலனே
நான் சொல்வதைக் கேள்.

நான் உன்னுடைய பெண்.

என்னை ரோஜாவென்றும்
உனது வாழ்வின்
வெளிச்சமென்றும் அழைக்காதே

எனது கண்களை
புறாவுக்கு ஒப்பிடாதே
எனது கூந்தலை
மலையடிவாரத்தில் சயனிக்கும்
மந்தைகளுக்கு உவமையாக்காதே
இந்தப் பூமியின்
ஒரு மனிதமாக என்னை உலவவிடு
நாமிருவரும் இணைந்து
மனிதர்களுக்குரிய வாழ்வை வாழ்வோம்

நண்ப,
என்னை நேராக முகங்கொள்
எதற்காகவும் அச்சப்படாதே
சுற்றிலுமாக மூடி அடைக்கப்பட்ட
பூங்காவனமாக என்னை ஆக்கிவிடாதே. அல்லது
உனக்கு தாகம் ஏற்படும் வேளைகளில்
அதைத் தணிப்பதற்கான ஊற்றாய் மட்டுமெண்ணி
உனதென்ற முத்திரையையிட்டெனை மூடாதே.

கடவுளின் பலிபீடத்தில்
பலிக்கடா ஆக்குவதற்கு
என்னை
வெள்ளை ஆடைகளால் அலங்கரிக்காதே.

எனது உடலை
சேனைகளின் தாணையம் என்றும்
எனது நிலம்
சோளமும்
லில்லி மலர்களுக்குமானதுமென்றும்
அழைக்காதே

வார்த்தை சிலம்பத்துள் சிக்கித் திணறாதே

ஆடைகளற்ற இயற்கை மனிதர்களாய்
நாம் ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளுதல்போல்
வார்த்தைகளும் நிதர்சனங்களும்
ஒன்றையொன்று தழுவிக்கொள்ளட்டும்

எனது உதடுகள் சிரிக்கின்றன
எனது கண்கள் அழுகின்றன
இது மனிதர்களுக்கான புன்னகையும் கண்ணீரும்.
இதனை ஒரு விலையுயர்ந்த உடமை போன்று
நீயும் நானும் தொடர்ந்து காவிச்செல்வோம்

என் வார்த்தைக்கு செவிசாய் என் நண்பனே,
என் நேசமானவனே!
மத்தளம் முழங்க, எக்காளம் ஒலிக்க
காதலின் புதிய மொழியொன்று
சீயோன் மலையுச்சிகளின்மேலாய் உரத்து ஒலிக்கட்டும்

உனது ரோஜாவென்று என்னை அழைக்காதே.
குளிருறைந்த இருளில்
உனது ஒளியென்று என்னை அழைக்காதே

நாமிருவரும் இணைந்திருப்போம்.

நிபந்தனையற்று,
மனிதர்களாக மட்டும்
நாம் இணைந்திருப்போம்.

பானுபாரதி கவிதைகள்

## வலிவுடைய மனுக்கள்

விமானம் நங்கூரமிட்டது
என் தலைமேல் வந்து

அச்சுகள் சறுகிய
இரத்த எழுத்தகளில்
நாட்காட்டி கூறிய
நல்ல நேரமொன்றில்
பனங்கூடையுள் நான்
பேரீச்சைப் பழங்கள்
பிதுங்கியதைப் போல்
உணர்வுகளும் கனவுகளும்
பீறிப் பிதுங்கிட

எனைச் சுமந்த,
பனங்கூடையைச் சுமந்த
விமானம்
மாட்டு முதுகில் குந்திய
கரிக்குருவி போல்
பனிமுதுகில் குந்தியது வந்து

பனங்கூடையுள்ளிருந்து ஒழுகிய
எனது கனவுகளை
மதுக் கோப்பையிலிட்டு
சுவைத்துக் குடித்தானொருவன்

சக்கையாய் கொட்டுண்ட
எனது உணர்வுகளை
பனிக் குவியலுக்குள்
போட்டு மிதித்தான்

எருச் சாம்பலுக்குள்
நடப்பட்டிருந்த
நத்தார் மரமொன்றுடன்
மஞ்சள் தடவிய கயிற்றால்
நான்
கட்டப்பட்டேன்

ஆரூடமல்ல,
ஆணித்தரமானது.
எனது
கனவுகளும் உணர்வுகளும்
வலிவுடையன.
அவற்றையேந்தி
நானெழும்போது
பிரபஞ்சமறியும்
நானும் மனுவென்று,
வலிவுடைய மனுவென்று.

(அறுபதாவது சுவடுகள் 18.11.1994)

## மீண்டும் எனதுலகம்

எல்லாக் கதவுகளும்
அடைக்கப்பட்டு விட்டன

கதவுகள் அடைக்கப்பட்ட சுவரினுள்
சிறைப்பட்டுப் போனோமேயென்று
வருந்தி அண்ணார்ந்தவேளை
திறந்துகிடந்த கூரையினூடாக
ககனவெளி கண்களைக் கவ்வின

பறவைக்கூட்டம்
சுதந்திரமாய் லாவகமாய்
நீலத்திடலின் முகிற்திரளை
அலகுகளால் குடைந்தும்
சிறகுகளால் தூக்கியெறிந்தும்
உன்னத காதலோடு
குலாவித் திரிந்தன

எனது
சிறிய சிறகுகளை விரித்தேன்
எனது குஞ்சுகளும்
தாவிக்கொண்டன என்
தோளின்மீது

சுதந்திர வானில்
எங்கள் பயணம் தொடங்கியது

நாம்
உயரே எழுந்தபொழுது
கைச்சிறங்கை அளவேயானது பூமி


புதிய தென்றல்
எம்மை வருடி
கைகளைக் குலுக்கிக் கொண்டது

சுதந்திரமான பாடல்கள்
வரவேற்றுக்கொண்டன

வாழ்வு
எம்மை
தனது தலையில் சுமந்துகொண்டது
நான் இழந்ததாய் எண்ணிய எனதுலகம்
இப்போ
முன்றலில் பரந்து
விரிந்து கிடந்தது
பசுமை விரவி.

ஒக்டோபர் 2006

# புலப்பெயர்வின் மாறுஉற்பத்தியும், அடையாள அளவுகோல்களும்.



## (தமிழ் கற்பித்தலின் பின்னணி?)

என்.சரவணன்
படங்கள்:தமயந்தி

இலங்கையில் ஐந்து வருடங்களுக்கு முன் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் உத்தியோகபூர்வமற்ற முறையில் முடிவுக்கு வந்ததாகவே கொள்ளப்படுகிறது. அறிவிக்கப்படாத யுத்தம் இவ்வாறு இடம்பெற்றுக்கொண்டு இருக்கும் நிலையில் முன்னைய காலங்களை விட மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவது அனைத்துலகத்தின் கவனத்தையும் அதன்மீது திருப்பியுள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து தமது ஆத்ம தொடர்பை பேணுவதற்காக சென்றோர் கூட காணாமல் போவதும், கடத்தப்படுவதும், வன்முறைகளுக்கு உள்ளாவதுமாக நிலைமைகள் தொடர்ந்தவண்ணமுள்ளது. இந்நிலையில் வருடாவருடம் கோடைகால விடுமுறைக்கு தாய்நாட்டை காணச் செல்லும் புலம்பெயர்ந்த தமிழர்களின் எண்ணிக்கை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதனை கண்கூட காணக்கூடியதாகவும் உள்ளது. தமது கோடைகால விடுமுறைப் பயணத்தை இரத்து செய்தவர்கள் அதிகம். பயணத்துக்காக இவ்வருடம் வேறு நாடுகளை தெரிவு செய்தவர்களின் வீதம் மிகவும் அதிகம்.

என்றாவது ஒரு நாள் நாட்டுக்கு மீளத் திரும்பி வாழலாம் என்கிற கனவு ஏற்கெனவே பொய்த்துவிட்டது என்பதை படிப்படியாக நம்பத்தொடங்கியவர்கள், அவ்வப்போது நாட்டுக்கு விடுமுறை காலங்களில் திரும்பி ஊரையும், உறவினர்களையும் சந்தித்துவிட்டு வருவதில் திருப்தி காண்பவர்களாகவே இருந்து வந்தனர். இந்த நிலையில் அதுவும் எதிர்காலங்களில் வெறுங்கனவாகிப் போவிடுமோ என்கிற ஏக்கமும் பீதியும் இப்போது ஏற்படத் தொடங்கியுள்ளது.

இந்த பின்புலத்தை அடியொற்றியே புலம்பெயர் பண்பாட்டுச் சூழல் பற்றிய ஆய்வுகளை இன்றைய நிலையில் மேற்கொள்ள முடியும்.

இக்கட்டுரையானது இந்த பின்புலத்தின் அடியொற்றிய புலம்பெயர் தமிழ்வழிக்கல்வி குறித்த குறிப்புகள் முன்வைக்கப்படுகின்றன.

### பின்புலம் அறுகின்ற காலம்?

1. 80களிலிலேயே அரசியல் நிலைமைகள் காரணமாக அதிக புலப்பெயர்வு நிகழ்ந்தன. பாதுகாப்பு உழைப்புமே பிரதான குறிக்கோளாக அப்போது இருந்தது. ஆனால் போகப்போக சொத்துக்கள். பிரஜை அந்தஸ்து, மனைவி பிள்ளைகள் என குடும்பமாதல், நாட்டின் சூழலிருந்து அந்நியப்பாடு, அந்தந்த நாட்டு வழக்கங்களுடன் ஒன்றிப்பு என்பன போன்ற காரணங்களால் மீண்டும் நாடு திரும்புகை கேள்விக்குள்ளாகியுள்ளது.

2. புதிய தலைமுறையினர் அந்தந்த நாடுகளில் ஒன்றித்துப்போயுள்ளனர். இன்னும் சொல்லப்போனால், தம்மை உறுதியாக நிலைநிறுத்திவிட்டனர் என்கிற நிலை இன்று ஸ்தூலமாக தெரிகிறது. (அதாவது அவர்களை மீண்டும் நாட்டுக்குப் பெயர்ப்பது என்பதானது தாம் தமது மண்ணிலிருந்து பிடுங்கப்பட்ட வேதனைக்கும் இடர்பாடுகளுக்கும் ஒப்பானது)

தமது நெருங்கிய உறவினர்களை சந்திப்பதற்கும், மண்ணை பார்ப்பதற்காகவும் நாடு திரும்பியவர்கள் இன்று பல உறவினர்களையும் வெளிநாடுகளுக்கு கொண்டு வந்து சேர்த்த நிலையில் ஊருக்கு போகத் தேவையில்லை. "எல்லாரும் இஞ்சையெல்லே இருக்கினம்" என்ற குரல்களைக் கேட்கக்கூடியதாக இருக்கிறது.

முதலாம் தலைமுறையினருக்கு தமது "மண்ணையும் மக்களையும்" பார்க்கக் கிடைக்கிற சந்தர்ப்பத்தில் பார்த்துவிட்டு வந்தால் அது பெரும் உளப்பலமாக இருக்குமென்கிறார்கள்.

யுத்த நிலைமை தொடர்ந்தாலும் வடக்கு கிழக்குக்கு வெளியில் எங்காவது வீடு வாங்கி வைத்தால் விரும்பிய போது வந்து போகலாம். என்கிற குரல்களும். எப்படியாவது பணத்தை கொண்டுபோய் ஏதாவது துறையில் முதலிட்டால் நாளை பிரயோசனமாக இருக்கும் என்ன செய்யலாம் என்கிற விசாரிப்புகள் என எத்தனையோ குரல்கள்.

(இதில் ஒரு வேடிக்கை) எதிர்காலத்தில் இப்படிப் புலம்பெயர்ந்தவர்கள் நாடு திரும்பப்போவதில்லை என்பதை போராட்டத்தின் தரப்பில் விளங்கிக்கொண்டாலும் அதேவேளை இவர்களின் முதலீடு தேசத்தை கட்டியெழுப்ப பெரும் துணையாக இருக்கும் என்கிற நம்பிக்கை உறுதியாக உண்டு.

நான் சமீபத்தில் இலங்கை சென்றிருந்த போது இந்த

நிலைமை நேரில் காண கிடைத்தது. பலரும் பல துறைகளில் முதலிடுவதானது நாளுக்கு நாள் பெருகத் தான் செய்கிறது. ஆனால் முக்கியமாக கவனிக்கத்தக்க வேண்டிய விடயம், அத்தனையும் வடக்கு கிழக்குக்கு வெளியில்... அதாவது ஸ்ரீலங்காவில்தான் முதலிடப்படுகிறது. இந்த நிலைமையில் எதிர்காலத்தில் ஓர் நிரந்தர அமைதிச் சூழலில் மாற்றங்கள் வரலாம். ஆனால் இடம்பெயர்ந்து கொழும்பிலேயே வாழ்ந்த எத்தனையோ பேரைக் கண்டபோது "எங்களுக்கு அங்கு வீடு காணி எல்லாம் இருக்கிறதுதான். ஆனால் இனி பழைய நிலைமை திரும்பினாலும், ஏன் பழைய அதே நண்பர்களும், ஏன் அதே சூழலும் கிடைத்தால் கூட, போய் வாழும் நிலையில் நாங்கள் இல்லை. இங்கேயே இருக்கப்போகிறோம். அது தான் இன்றைய யதார்த்தம்" என்கிறார்கள். இது தான் நிலைமை என்றால் "முதலீடுகள்" கொழும்பில் கணிசமான அளவு நிலைபெற்றுவிடக்கூடிய சாத்தியங்கள் நிறையவே உண்டு.

இந்த நிலைமைகளை இனங்கண்டு கொள்வதானது புலம்பெயர்ந்தவர்களின் எதிர்காலம் குறித்த முன்னைய இன்றைய கனவுகளுக்கும் - யதார்த்தத்துக்கும் உள்ள இடைவெளியை உணர்ந்துகொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

தமது எதிர்கால வாழ்வு இனி இலங்கையில் இல்லை அது தாம் புலம்பெயர்ந்த இடங்களில் தான் எனும் கருதுகோளிலிருந்து, அடுத்த சந்ததியினரின் எதிர்காலம், தமது எதிர்காலம் இதில் தமது பண்பாட்டு பாரம்பரிய, மரபுகள், வழக்கங்கள் என்பனவற்றின் பேணுகை எந்த மட்டத்திலானது என்கிற விடயத்துக்கு வரவேண்டியுள்ளது.

### அடையாளங்கள்

இவ்வாறு புலம்பெயர்ந்தவர்களின் (அதாவது முதலாம் தலைமுறையினர்) புதிய அடையாளம், அடையாளங்கள் என்ன? தமது முந்திய அடையாளத்தை



தக்கவைத்துக்கொள்ளத்தான் முடியுமா? அல்லது புலம்பெயர்ந்த அந்தந்த நாடுகளின் அடையாளங்களைத்தான் சுவீகரித்துக்கொள்ள முடியுமா? அல்லது இரண்டும் கலந்த ஒரு அடையாளத்தை ஏற்படுத்திக்கொள்ளப்போகிறார்களா? அல்லது புதிய நிலைமைகளுக்கு ஏற்றவாறு இன்னுமொரு அடையாளத்தை கண்டுபிடிக்கப்போகிறார்களா? இவ்வாறு மேற்கொள்ளும் போது பழைய அடையாளங்களை முற்றும் முழுதும் தான் துறந்துவிடமுடியுமா?

இப்புதிய அடையாளங்கள் முன்னைய ஆதிக்க சித்தாங்களைகளையும், ஆதிக்க குணாம்சங்களையும் துறந்ததாக இருக்குமா? அல்லது புதிய அடையாளங்கள் இம்மாற்றத்தில் செலுத்தும் செல்வாக்கு என்ன? புதிய இடத்தின் பல்கலாசார சூழலில் உள்ள அனுசரிப்பும், அனுபவமும் இதில் ஏற்படுத்தும் செலுத்தும் தாக்கம் என்ன? இறுதியில் இரண்டாம் தலைமுறையினருக்கு கடத்தப்போகும் அடையாளங்கள் தான் என்ன?

இவை அன்றாடம் புலப்பெயர்வின் எதிர்காலம் குறித்து பிரக்ஞையோடு சிந்தித்துக்கொண்டிருப்போரின் தலைகளில் கனத்து நிற்கின்ற கேள்விகள் என்று கூறலாம்.

அனைத்து நாடுகளிலும், இது தான் அடையாளம் என்கிற நேர்கோட்டு வரைவிலக்கிணமொன்றை கட்டமைத்து பொதுமைப்படுத்திவிட முடியாதென்பதே எனது கருத்து,

இனி விடயத்துக்கு சற்று விரிவாக வருவோம்...

### மொழியின் அவசியம்

மனித நடவடிக்கைகளில் மொழியின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. மனிதராக இருத்தல் என்பது, மற்றவர்களுடனும் உலகுடனும் உறவினை ஏற்படுத்திக்கொள்வதே. எனவே தன்னில் இருந்து வேறுபட்ட புறவயமான எதார்த்தமாக உலகை மனிதனால் காண முடிகிறது. "தான்", "தானல்லாதது" என்று பிரித்துப் பார்க்கும்போது தானல்லாத எதார்த்தம் அவனது அறிதலுக்கான பொருளாகிவிடுகிறது. ஆனால் மிருகங்கள் அப்படியல்ல அவை எதார்த்தத்தில் மூழ்கி விடுகின்றன. எதார்த்தத்தை புறவயமாக பார்க்க அவற்றால் முடியாது. மிருகங்கள் வெறும் தொடுகையோடு புலனுணர்வு சார்ந்த அகவய வினையைக் (subjective reflex) கைகொள்கின்றன. மனிதன் புறவயத் தரவுகளோடு புறவய (objective) எதார்த்தத்தை தேடுகிறான். மேலும் மேலும் தன்னை அதிகரித்துக் கொள்வதே மனிதனின் அறிவுத்துறை இயல் திறனாகும் (ontological vocation).

மனிதன் மட்டுமே பேசுகிறவன். (கவனிக்க அனைத்து ஒலிக்குறிப்புகளும் "பேச்சு", அல்லது "சொல்" ஆகிவிடுவதில்லை.) ஆக மனிதப் பேச்சு தான் உலகை மாற்றியமைக்கின்றன. இதனைச் சாதிப்பவற்றையே நாம் "சொற்கள்" என்கிறோம். இந்த உண்மையான சொல்லுக்கு இரு பரிமாணங்கள் உண்டு.

1. எதிரொளிப்பு (Reflection)
2. நடவடிக்கை (Action)

இவ்விரண்டினதும் இணைவையே நாம் செயல் என்கிறோம் (Praxis)

நடவடிக்கையுடன் இணையாத சொல் வெறும் வாய்ச்சொல்லாக (Verbalism) ஆகிவிடுகிறது. எதிரொளிப்பு இல்லாத சொல் வெறும் செயல்வாதமாகவும் (Activism) குறுகிவிடுகின்றன.

ஆக, இந்த மனித நடவடிக்கையில் மொழிக்கு எழுத்துவடிவம் கிடைக்கிற போதும் அது செழுமையடைகிற போதும் அது தன்னை புதுப்பித்துக்கொள்ளும் போதும்

அது வளமடைகிறது. பலமடைகிறது. இருப்புகொள்கிறது. உறுதிபெறுகிறது.

மொழியானது இனத்துவம், மதத்துவம், கலந்தது. எல்லா மொழிகளுக்குமான இந்த பொதுமையானது அதற்கேயுரிய மரபுகளையும், வழக்குகளையும், கூடவே புனைவுகளையும் கொண்டிருப்பதும் அதன் பண்பாகும்.

மொழியின் இருப்பு கேள்விக்குள்ளாகிற இடங்களில் அந்த மொழியோடு சேர்த்து "அக்கம்பக்கமான" இந்த மதங்களையும் இனத்துவத்தையும் தூக்கி நிறுத்துவதையும், அதன்வாயிலாக மரபான புனைவு, ஐதீகங்கள், மாயைகள் போன்ற மூடநம்பிக்கைகளையும் அப்படியே பாதுகாப்பதையும் கூட நாங்கள் காணலாம்.



புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஏன் தமிழ் வேண்டும்? இந்தக் கேள்வியை நான் பலரிடம் எழுப்பி விட்டேன். அதற்கான சரியான வரைவிலக்கணமளிக்க முடியாத பலரை கண்டிருக்கிறேன். இதில் பலர் அப்போது தான் இதற்கான சுய வரைவிலக்கணத்தைத் தேட தலைப்பட்டதையும் அவதானித்திருக்கிறேன்.

"நாங்கள் நாளைக்கு நாட்டுக்கு உறவினர்களை சந்திக்கப்போனால் பிள்ளைகள் தமிழில் உரையாட வேண்டும்!" இது பெருமளவானோர் கூறும் சராசரி பதில். ஆனால் இது மட்டுமாக இருக்கமுடியாது. இந்த நாடுகளில் கல்வி அதிகம் திட்டமிடப்பட்டது. குழந்தைகள் மேலதிக கல்விச்சுமையற்று கல்விச்சூழலை அனுபவிப்பதற்கான திட்டமிடப்பட்ட உட்கட்டமைப்பு இங்கு உண்டு. அதன்படி மேலதிகமான தமிழ்க் கல்வி சில வயதினருக்கு அளிப்பது இந் நாடுகளின் கல்வித்திட்ட விதிகளின் கீழ் விமர்சனத்துக்குரிய ஒன்றாகவே கொள்ளப்பட்டாலும். தமது கல்வித்திட்டத்தின் அடிப்படையில் தாழ்மொழிக்கல்வி பாடசாலைகளில் புகட்டப்பட்டும் வருகிறது.

புகலிடத்தில் தமிழ்மொழியானது அவர்களின் அந்தந்த நாட்டு அன்றாட நடவடிக்கைகளுக்கு தேவையில்லாதது. ஆனாலும் அனைத்து நாடுகளிலும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இயங்குகின்றன. நோர்வேயில் ஒஸ்லோவைச் சூழ ஏறத்தாழ வாரஇறுதி தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் ஐந்து இயங்குகின்றன. (ஏறத்தாழ அரை மணித்தியால கார் ஓட்டச் சுற்றுக்குள் இவை அமைத்திருக்கின்றன)

எனது பார்வைக்கு எட்டிய வரை, தமிழ்மொழியை இங்குள்ள குழந்தைகளுக்கு (அடுத்த தலைமுறையினருக்கு) அளிப்பதென்பது "வசப்படுத்தலுக்கானதா"? என்கிற கேள்வியே ஆழமாக எழுகின்றது.

முதலாவது தலைமுறையினர் எதிர்கொள்ளும் கலாசார நெருக்குவாரங்கள் இதில் கவனிக்கவேண்டிய முக்கியப்புள்ளி. "குடும்ப உறவுகளுடன்", "உறவுகளின் உறவுகளுடன்"அதிக நெருக்கத்தை கொண்ட ஒரு பாரம்பரியம் நமக்கு. அத்தோடு உணர்ச்சி நிலையுடன் கூடிய பற்று, கடமை மற்றும் உரிமையெடுத்துக் கொள்வது, பொறுப்பெடுத்துக்கொள்வது, அந்த தார்மீகத்துடன் அதிகாரம் செய்வது என்பவை இணைந்த வழக்கங்களைக் கொண்ட ஒரு ஒரு மரபிலிருந்து வந்தவர்கள் நாங்கள்.

குழந்தைகள் பிறந்து வளரும் போதே "நாளை எங்களைப் பார்ப்பார்கள்" என்கிற முழக்கங்களும், நம்பிக்கைகளையும் கொண்ட மரபினர் நாம்.

புலம்பெயர்ந்த நாடுகளில் நிலைமை அதுவல்ல. குழந்தைகள் விபரம்தெரிய வளரும் வரை பெற்றோர் பொறுப்பிலும் அதன் பின்னர் அவர்கள் சொந்தப் பொறுப்பிலேயே வளர்கின்றனர். அதற்கேற்றபடி சிறுவயதிலிருந்தே குழந்தைகள் பழக்கப் படுத்தப்படுகிறார்கள். தயார்படுத்தப்படுகிறார்கள். பெற்றோர்கள் உரிமையெடுத்துக்கொள்வதும் அதிக மட்டுப்பாட்டுடனேயே. அது போல அதிகாரம் செலுத்துவதும் அதிக மட்டுப்பாடுகளுடனேயே.

அதுபோல் நமது குழந்தைகளும் சிறுவயதிலிருந்தே அந்தந்த நாட்டு மரபுகள், கலாசாரங்கள் பழக்கவழக்கங்கள்

என்பனவற்றோடு சேர்த்தே வளர்க்கப்படுகிறார்கள். பிள்ளைகள் நாளாந்தம் வீட்டுச் சூழலில் இருப்பதை விட அதிக நேரம் அந்நாட்டுச் சூழலுடன் கழிப்பவர்கள்.

எனவே, இன்னமும் மண்ணின் நினைவுகளோடும், அந்த மண்வாசனையின் வடிவங்களாக இருந்த அந்த மரபுகளோடும் எஞ்சிய காலத்தை வாழ ஆர்வம் கொண்டிருப்பவர்கள் நமது முதலாவது தலைமுறையினர். எனவே தமது வாழ்வை அந்தந்த நாடுகளிலேயே தக்கவைப்பதென்கிற முடிவுகளுக்கு அடிப்படை காரணமே "பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக" என்றிருக்கும் போது (பிள்ளைகளுக்காக செய்ய வேண்டிய கடமைக்காக இங்குள்ள சராசரியை விட அதிக விலைகளை கொடுப்பதாக நம்புகின்ற முதலாவது தலைமுறையினர்) பிள்ளைகள் நாளை தம்மையும் கவனித்துக்கொள்ள வேண்டும். தமக்கும் "கட்டுப்பட்டு" இருக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்புகளை எப்படி நிறைவேற்றலாம்...?

அதற்கு மருந்தாக தமது கலாசாரத்தையும் குழந்தைப் பருவத்திலிருந்தே ஊட்டுதல் ஒரு முக்கிய வழிமுறை. படிப்படியாக அந்த மரபுகளையும் பண்பாட்டு கலை அம்சங்களையும் போதிப்பதனூடாக கூடவே தமது மரபுசார் அதிகாரத்தை ஏற்படுத்துவது. எனவே தான் புலம்பெயர்ந்த இடங்களில் மொழி மட்டுமல்ல இசை, நடனம், என்பன போதிக்கப்படுவதும், அனைத்து பண்பாட்டு விழாக்களையும் (வருடப்பிறப்பு, பொங்கல், தீபாவளி) நடத்துவது, கோயில் கட்டுவது, பஜனைக்காக கூடுவது. திருவிழா நடத்துவது, கலியாணத்தை ஊரில் நடத்தப்படுவதை விட கறாரான அதிக சடங்குளை சேர்த்துக்கொள்வது. பூப்புனித நீராட்டுவிழா நடத்துவது.. என்பன நிகழ்த்தப்படுகின்றன.

(சில இடங்களில் மொழி, பண்பாடு, உடை போன்றவற்றை மறந்து அல்லது இழந்து போனாலும் சடங்குகள் நிலைபெற்றிருப்பதை இங்கு கவனத்திற்கொள்க. எதிர்காலத்திலும் இந்த நிலைமை நீட்சிபெறலாம்)

இதன் மறு அர்த்தம் இந்த பண்பாட்டு மரபுகளை உணர்வு ரீதியில் செய்வதில்லை என்பதல்ல. மாறாக அடுத்த தலைமுறையினருக்கு மரபுகளை கடத்துவதன் பின்னணியில் "தம்வசப்படுத்தல்" என்பது முக்கிய பங்காற்றுகின்றன என்பதனை ஒப்புக்கொள்ளவேண்டும். இது கசப்பான ஒரு உண்மையென்பதை ஒரு சுயதேடலின்மூலமே உணரலாம்.

தங்களின் வழிகாட்டல்களை புகட்டுவதற்கும், அறநெறிகளை போதிப்பதற்கும் இந்த கற்பித்தல் உதவுகிறது. அறநெறிகளின்பால் இருக்கின்ற விதிகள், கட்டுப்பாடுகள், எச்சரிக்கைகள் என்பனவற்றுக்கூடாகவும் அதிகாரபூர்வமான உரிமை நிலைநாட்டப்படுகிறது.

பிள்ளைகள் தமது எதிர்காலத்துக்காக அந்தந்த நாட்டுச் சூழக்குள் ஒன்றவும் வேண்டும். அதே வேளை தமக்கு அடங்கியவர்களாக இருக்கவும் வேண்டும். தாம் விரும்புகிற ஒருவரிடம் "தாரைவார்க்கும்வரை" இது தொடரவும் வேண்டும் என்கிற எதிர்பார்ப்பே இதன் பின்னணியில் உள்ள தாற்பரியம்.

பெற்றோர்கள் சடங்குகளை, தமிழ்ப் பண்பாட்டை கொண்டவர்களாகவும், பிள்ளைகள் அதை விரும்பாதவர்களாகவும் வளர்க்கப்படுகிறார்கள். பெற்றோர்கள் இச்சடங்குகளை விரும்பக் காரணம் இந்தச் சடங்குகள் அவர்களின் சமூக ஒருமைப்பாட்டிற்கான தளமாகக் கருதுவதும், அதனை தமது அடையாளமாக உணர்வதும் தான்.

மேலும், தமிழ்மொழிப்போதனைக்கு காரணமாகிற இன்னுமொரு அம்சம் தமது குழுமத்துக்குள் மேநிலை அந்தஸ்தை நிறுவதற்கான ஒரு கருவி என்கிற நம்பிக்கையாகும்.

(ஆங்கில மரபு அல்லாத நாடுகளில் -நோர்வே உட்பட) பெற்றோர்கள் இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளுக்கு படிக்க அனுப்புகிறார்கள். அல்லது இந்தியாவுக்கு அனுப்புகிறார்கள். இது ஏன் என்பதன் உள்ளர்த்தத்தையும் இங்கு விளங்கிக்கொள்வோம்.)

புலம்பெயர்ந்த இடங்களில் அந்நியப்பாடு காரணமாக தாம் "தமிழர் குழுமமாக" அணிதிரண்டு, நிறுவனமயப்பட்டு தங்கள் பாரம்பரியங்களை நினைவுறுத்தி மனமகிழ்வு கொள்கின்றனர். இவ்வாறு நிறுவனமயப்படுகிற போது தமிழ் குடும்பங்கள் தமது மரபார்ந்த குணங்கள் காரணமாக தமது அந்தஸ்தை நிலைநாட்ட முயல்கின்றனர். ஊரில் வர்க்கநிலையும், சாதியும், சாதி சார்ந்த ஊரும், தொழிலும் அந்தஸ்தை அளவிட்டன. புலம்பெயர்ந்த இடங்களில் இவை அதிக முக்கியத்துவமிழந்து போகின்றன. இங்கு வர்க்க நிலையை அளவிடக்கூடிய வீடுகள், (தொடர்மாடிவீடா?, தனிவீடா? அடுக்குமாடிவீடா) வைத்திருக்கும் வாகனத்தின் பெறுமதி, போடப்படும் நகைகள், நடத்தப்படும் சடங்குகள், விழாக்களில் செய்யப்படும் செலவுகள் என்பனவற்றுக்கூடாக இந்த அந்தஸ்து அளவிடப்படுகின்றன. (தாயகத்தில் ஊர், சாதி என்பனவற்றின் அடிப்படையிலான தரம்பிரித்தல் இங்கு முக்கியத்துவம் பெறாவிட்டாலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் உயர்த்தப்பட்ட சாதியினரிலும் பார்க்க உழைப்பால் வர்க்க மேநிலை அடைகையில் மட்டந்தட்டுவதற்கான காரணியாக "என்னதான் இருந்தாலும் அவர்கள் இன்ன சாதி" என்கிற குத்திக்காட்டல் இல்லாமலில்லை. (இந்த இடங்களில் சாதியம் கவனமாக கையாளப்படுகிறது.)

இவ்வாறான இடங்களில் தமது பிள்ளைகளின் கல்வி நிலையும் அந்தஸ்தின் ஒரு அங்கமாக பாக்கப்படுகிறது. தாயகத்தின் கற்பித்தல் முறை, மற்றும் கல்விமுறை என்பன போட்டிக்கல்விமுறையை அடிப்படையாகக் கொண்டவை. அந்த பழக்கங்களின் வழிவந்த நமது தலைமுறையினர் அதே நிலைமைகளை இங்கு கைக்கொள்ள முற்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது. இன்னுமொருவகையில் "ஒழுக்கவலிமையை உடையவர்கள்" என்பதனை உறுதிபடுத்த "இந்த சூழலோடுதான் எங்கள் பிள்ளைகள் இருக்கிறார்கள்" என்பதனையும் சூழலுக்குள் நிறுவ முற்படல்..?

### பிள்ளைகளுக்கு தாய் மொழி எது?

தமது மொழி என்ன என்பது குறித்து நமக்குத்

தாயகத்தில் எழுவதில்லை. ஆனால் புகலிடத்தில் தமது அல்லது தமது சந்தியினரின் தாய் மொழி என்ன என்பது குறித்த விவாதங்கள், சர்ச்சைகள், குழப்பங்கள் இன்னமும் நீடிக்கத்தான் செய்கின்றன.

தாய் மொழி என்பதன் அளவுகோல் என்ன? அதற்கான வரைவிலக்கணம் என்ன? தன்னைப் பெற்றடுத்தவரின் மொழியே தனதும் தாய்மொழி என்பதா இதன் வரைவிலக்கணம்? புலம்பெயர்ந்த இடங்களில் பிறந்த குழந்தைகள் தாம் வாழும் சூழலில் தமக்கு பரிச்சயப்பட்ட, தமது எண்ணங்கள், உணர்வுகள் என்பனவற்றை வெளிப்படுத்தவும் பரிமாறுவதற்குமான மொழி தாயின்மொழியாகத்தான் இருக்க வேண்டுமா?

"ஒருவரின் தாய்மொழி என்பதானது அவரின் பெற்றோரின் தாய்மொழியாக எப்போது அமையுமெனில் அவரின் பெற்றோரின் தாய்நாட்டில் அவர் வாழும்போதோ அல்லது அவரின் தாய்நாட்டு மொழி தாம் வாழும் மற்றுமொரு நாட்டுமொழியாக இருக்கும் போதுமட்டும்தான்." என்கிற வாதமும் முன்வைக்கப்படுகிறது.

"தாய்மொழி", "சிந்தனா மொழி", "முதல்மொழி", "பரிச்சயமான மொழி" போன்ற சொல்லர்த்தங்களைக் கொண்ட வேறுபட்ட விளக்கங்கள் சமகால கருத்தாடலில் மாத்திரமல்ல நீண்டகாலமாகவே இருந்து வருகிறது.

"பெற்றோர்களின் தாய்மொழியும், பிள்ளைகளின் தாய்மொழியும் ஒன்றாக இருக்கத்தேவையில்லை, தாய் மொழி மாறிக்கொண்டே போகலாம்..., ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகள் ஒருவருக்கு தாய் மொழியாக இருக்கலாம்" என்றும் யுனெஸ்கோ விளக்கம் கொடுத்திருப்பதையும் கவனிக்க.

"தமிழ்த் திணிப்பு" எனுமளவுக்கு சில இடங்களில் அதிக குழந்தைகளின் வயதுக்கு மேலான மூளைச்சுமையையும், களைப்பையும் ஏற்படுத்துகிற போக்கையும் காணமுடிகிறது.



அந்தந்த நாட்டின் நியமங்களுக்கு ஏற்ப பிள்ளைகள் வளர்க்கப்படவேண்டும் என்றே பெற்றோர்கள் விரும்புவார்களே தவிர "தமிழுக்கேற்ப மாற்றம் என்று விரும்பமாட்டார்கள்."

புலம்பெயர்ந்த நாடுகளில் குழந்தைகள் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் அந்தந்த மொழிகளினூடாகவே தமிழை

**பல இடங்களில் தமிழ் மொழி எத்தனையாவது மொழி என்று பார்த்தால் இரண்டாவது மொழியும் இல்லை. மூன்றாவது மொழியாகவும் இல்லை. நோர்வேயில் கற்கும் பிள்ளைகளுக்கு பிரெஞ்ச், லத்தீன், அல்லது ஆங்கிலம், இரண்டாவது மொழியாக இருக்குமே தவிர, ஏன் மூன்றாவது மொழியாகவும் இருக்குமே தவிர தமிழாக இருக்காது என்பதனை விளங்கிக்கொள்ளவேண்டும்.**

சிரமப்பட்டு தலைக்குள் மொழிபெயர்த்து உரையாடுவதை யார் இன்று மறுக்கமுடியும். தமிழ் சொற்களையே கண்டுபிடிக்கத் தவிக்கும் பிள்ளைகளிடம் என்னவென்று சரியான தமிழ் உச்சரிப்பை எதிர்பார்க்கமுடியும்? முதலில் தமிழிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையை கண்டு பயப்படும் சிறார்களிடம் இலக்கணச்சரியை எப்படி எதிர்பார்த்துவிட முடியும்? "ஊரில் நாங்கள் தமிழை படித்த மாதிரி எங்கள் பிள்ளைகளுக்கும் படிப்பிக்க வேணும்" என்பது எத்தனை தூரம் சரியானது.

மொழியானது பேசுவதற்கான தேவையேற்படாதவிடத்து எக்காலத்திலும் அம்மொழி பேசப்படாது. அப்போது தமிழ் மொழி ஏன் இப்பிள்ளைகளுக்கு தேவை என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும்.

பல இடங்களில் தமிழ் மொழி எத்தனையாவது மொழி என்று பார்த்தால் இரண்டாவது மொழியும் இல்லை. மூன்றாவது மொழியாகவும் இல்லை. நோர்வேயில் கற்கும் பிள்ளைகளுக்கு பிரெஞ்ச், லத்தீன், அல்லது ஆங்கிலம், இரண்டாவது மொழியாக இருக்குமே தவிர, ஏன் மூன்றாவது மொழியாகவும் இருக்குமே தவிர தமிழாக இருக்காது என்பதனை விளங்கிக்கொள்ளவேண்டும்.

உலகிலுள்ள அத்தனை இனங்களுக்கும், அவ்வினங்களின் மொழிகுறித்தும் தத்தமக்குள் பழமை பேசும் வழக்கம் பொதுமையானது. நமக்கும் அது போன்ற ஐதீகங்களும் நம்பிக்கைகளும், பெருமிதமும் உண்டுதான். முக்கியமாக நாம் கவனத்திற்கொள்ள வேண்டிய விடையம் மொழி குறித்த தெரிவு எந்தச் சூழலில் எத்தனை தூரநோக்கிலானது என்பது தான். ஒருவர் பல மொழிகளை தெரிந்து வைத்திருப்பதனூடாக பல உலகங்களை அவரால் தரிசிக்க முடிகிறது. இவ்வாறு பல மொழிப் பரிச்சயம் என்பதானது அவரின் ஆற்றல் திறன்களை மேலும் மேலும் வளர்க்கிறது. நாம் தெளிவு கொள்ள வேண்டிய விடயம். இவற்றில் எது தாய் மொழி, எது முதல் மொழி மற்றும் தெரிந்திருக்கும் மொழிகளின் நிரல்படுத்தல் என்ன என்பது குறித்த தெளிவு நமக்கு மிகவும் அவசியம். அவ்வாறான நிலையில் தமிழ் மொழியின் இடம் என்ன? அதனை போதிப்பதன் முறையியல் என்ன? திணிப்பற்ற கல்வியாக தமிழ்மொழியை எப்படி ஊட்டுவது? என்கிற வகையில் அவற்றை திட்டமிடுவது அவசியம். தமிழ் மொழி ஊட்டப்படுவதன் அவசியம் என்ன என்பது குறித்த வரைவிலக்கணத்தை முதலில் புலம்பெயர்ந்த நாடுகளில் தெட்டத்தெளிவாக கொடுக்கப்பட வேண்டும்.

அது செய்யப்படாத வரை பிள்ளைகளை ஒழுங்காக தயார்படுத்துவது என்பது இயலாத காரியமாகவே இருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

தாயகத்துக்கு திரும்புவது என்பது இன்றைய நிலையில் பெருமளவானோருக்கு சாத்தியமில்லாததென்பதை உணர்ந்திருக்கிற நிலை. அது போல பிள்ளகைளின் எதிர்காலம் புலம்பெயர்ந்த இடங்களில்தான் என்பது குறித்த முடிவுகளை எடுத்திருக்கிற காலம் இது. இப்படியான நிலையில் இங்கு தமிழின் இருப்பு கேள்விக்குரியது என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். யதார்த்தம் கூறும் சமிக்ஞைகள் என்னவென்றால், புகலிடத்தில் தமிழ் இலக்கியம், தமிழ் ஊடகம், தமிழ் வழிக்கல்வி என்பனவெனல்லாம் இன்னும் ஓரிரு தலை முறைகளுக்குத்தான். இப்போதைய தமிழ் வழிக்கல்வியானது தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்த முதலாவது தலைமுறையினரின் ஆசாபாசங்களுக்கு கட்டுப்பட்டது என்பது பொய்யாகுமா?

## புலப்பெயர்வும் இன்றைய நிலையும்

தமிழர் பார்வையில் புலம்பெயர்ந்து வாழ்வது பெரிய வரவேற்கப்பட்ட விடயமாக இல்லை. இலக்கியத்திலும் கூட வரவேற்கப்பட்ட ஒன்றாக இது வரை காட்டப்படவில்லை. என பேராசிரியர் சிவத்தம்பி கூறுவார். "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்று தான் கருத்து உண்டே தவிர இந்த மண்ணை உதறிவிட்டு ஓடு என்பது தமிழ் பண்பாட்டில் மிகக்குறைவு. "திரவியம் தேடிவா" என்பது தான் கருத்து.

தமிழ்த் தேசப்போராட்டம் ஆரம்பமானதன் பின் நிகழ்ந்த புலப்பெயர்வு குறித்தும் "விட்டுவிட்டு ஓடியவர்கள்" என்கிற ஏளனம் சமீப காலம் வரை இருந்தது என்பது நமக்கு தெரியுமல்லவா?

இன்று புகலிடம் குறித்து பேசும் போது வளர்ந்த நாடுகளுக்கு புலம்பெயர்ந்தமையைத் தான் உடனடியாக கவனத்திற்கு வருகிறது. புலம்பெயர்ந்திருக்கிற 13 லட்சம் பேரில் கனடா பெரிய அளவிலான தமிழர்களைக் கொண்டிருக்கிறது. இரண்டாவது இடம் எது என்று கேட்கப்படுகின்ற கேள்விக்கு பலருக்கும் சட்டென்று வருவது பிரான்ஸ் என்பது தான். உண்மையில் அது உண்மையல்ல. இரண்டாவது இந்தியா.

இந்தியாவுக்கு புலம்பெயர்ந்தவர்கள் வசதிகளுக்காக புலம்பெயர்ந்தவர்கள் அல்ல. அங்கு புலம்பெயர்ந்தவர்களைத் தான் உண்மையில் புகலிடம் தேடியோர் என்று கூறத்தகுந்தவர்கள் என்றால் அது மிகையாகாது.

இது வரை புகலிட இலக்கியம், புகலிட அறவியல் என்பன குறித்த பல்வேறு எழுத்துக்கள் வந்திருக்கிற போதும் அவற்றில் இந்தியாவுக்கு புலம்பெயர்ந்தோர் குறித்த ஆய்வுகளும், இலக்கியங்களும் குறைவென்றே கூறலாம்.

இதனை புலப்பெயர்வு அல்ல அது ஒரு இடப்பெயர்வு என்று கூறுவோரும் உள்ர். ஆனால் உள்நாட்டில் பிரதேசத்துக்கு பிரதேசம் இடம்பெயர்வதென்பதன் உள்ளடக்கத்திற்கும், சிரமப்பட்டு நாட்டை விட்டே "பெயர்ந்து" இன்னல்களை அனுபவிப்பதன் உள்ளடக்கத்திற்கும் நிறையவே வித்தியாசம் உண்டு.

புலப்பெயர்வின் ஆரம்பத்தில் புலப்பெயர்வுக்கு தயாரில்லாத தற்காலிகமான ஒரு நிகழ்வென நம்பியபடியும், மீண்டும் நாட்டுக்கு சில வருடங்களில் திரும்பிவிடலாம் என்கிற எதிர்பார்ப்புகளுடன் வந்தவர்கள். தங்களின் கிராமத்திலிருந்து அயற்கிராமத்தில் வாழ்வதற்கு கூட தயார் செய்து கொள்ளாதவர்கள். அங்கிருந்து இலங்கைக்குள்ளேயே ஒரு நகர்ப்பகுதியில் கூட வாழத்தயார் செய்யாதவர்கள்.

புலப்பெயர்வை மட்டும் விரும்பியா செய்திருப்பார்கள்? ஆனால் யுத்தத்தின் தொடர்ச்சி, புலம்பெயர்ந்தவர்களின் வயதுத்துவம், மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர் என்று விரிந்ததும் உறுதியான இருப்பாகிவிட்டது பலருக்கு. முதலில் ஒருவர் வெளிநாட்டுக்குப் போவார் அதன்பின் சகோதர, சகோதரிகளை அழைப்பார். பின்னர் தன் குடும்பத்தினரை அழைப்பார். பின்னர் ஊரவர்களை அழைப்பார் இவர்கள் அனைவரும் வெளிநாடுகளில் வாழத்தயார் செய்து கொள்ளாதவர்கள் தான். இன்றைய அதன் நீட்சி அப்படியல்ல.

மேலும் ஆங்கில மரபுள்ள நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களுக்கும், ஆங்கிலம் அல்லாத நாடுகளுக்கு செல்வது இன்னொரு தன்மையையும் வாழ்வியலையும் கொண்டிருக்கிறது என்பது உண்மை.

வந்தேறுகுடிகளாகவே கொள்ளப்படுகிற இந்த சூழலில் இந்த நாடுகளின் மேலாதிக்கப் பண்பாட்டை ஏற்றுக்கொண்டு வாழ பழக்கப்படுத்துதல் முக்கியமானது. இதன் உள்ளடக்கம் அந்த நாட்டின் பண்பாடு, உணவு, உடை, மொழி, வாழ்க்கைமுறை, தொழில் என இன்னோரன்னவற்றைக் கூறலாம். விரும்பியோ விரும்பாமலோ இதனை உள்வாங்கியே ஆக வேண்டுமென்கிற நிலை. தமது பண்பாட்டை பேணுவதற்கு எந்தத் தடையும் கிடையாது. ஆனால் அந்த நாட்டுடன் இணைய வேண்டும். மேநாட்டு முதலாளித்துவ ஜனநாயகம் இதனை மிகக் கவனமாக கையாள்கிறது.

"அந்த நாடுகளில் நமது அந்நியத்தன்மை புலனாக,
புலனாக எங்களுடைய கோயில் குளங்களும்,
வயல்வெளிகளும், கேணிகளும் மரங்களும், ஊர்களும்
சுவர்க்கங்களாக மாறத் தொடங்குகின்றன."

(இது 2007 யூலையில் மலேசியாவில் இடம்பெற்ற உலகத்தமிழ் பண்பாட்டுப் பேரவை மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.)●

# தோழர் பரா

*16.12.2007 அன்று மரணமடைந்த தோழர்.பரா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும்பொருட்டு உயிர்மெய்யின் ஆவணக் கோப்பிலிருந்து தோழரின் சில ஒளியோவியங்களை தோழமையுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.*

*படங்கள்: தமயந்தி*

வரண்ட பாலையிலும், இருட்டு வெளியிலும் பயணம் செய்துகொண்டிருக்கிறோம் இன்னமும் எஞ்சியுள்ள சிறுசிறு நம்பிக்கைகளோடு. நம்மோடு கூடவே கை கோர்த்து நடந்துவந்த தோழமை மனிதர்களின் திடீர் இழப்புக்கள் சம்மட்டி கொண்டு தாக்குகின்றன. தோழமைகளின் இழப்புக்கள் என்பது துன்பமும் வலியும் அதிகமானவைதான். ஆயினும் எமது காயங்களுக்கு நாமே மருந்திட்டுக்கொண்டு பயணத்தைத் தொடர்வோம் நம்பிக்கைகளோடும் அவர்களது நினைவுகளையும் சுமந்துகொண்டு.




*30.11.2002இல் பேர்லினில் நடைபெற்ற 29வது இலக்கியச் சந்திப்பில் பொது விவாதத்தின்போது.*



*2002இல் பேர்லினில் நடைபெற்ற 29வது இலக்கியச் சந்திப்பு முடிவுற்ற இரண்டாம்நாள் தோழர்களோடு*




*20,21.04.2003இல் டென்மார்க்கில் நடைபெற்ற 30வது இலக்கியச் சந்திப்பில் உரையாற்றியபோது*



*டென்மார்க் 30வது இலக்கியச் சந்திப்பு. தமயந்தியின் ஒளியோவியக் கண்காட்சி. தனது ஒளிப்படக் கருவியுடன் தோழர் பாரா. தேனீர் பரிமாறியபடி தோழர் கரவை தாசன்.*





*2003இல் டென்மார்க்கில் நடைபெற்ற 30வது இலக்கியச் சந்திப்பின் இடைவேளையின்போதும் காரசார விவாதங்கள்தான். இடமிருந்து வலம்: தோழர் பரா, பத்திரிகையாளர் சரவணன், மறைந்த நண்பன் கலைச்செல்வன், விமர்சகர் சுசீந்திரன், மறைந்த தோழர் புஸ்பராஜா*



015.03.2005இல் பரீசில் நண்பன் கலைச்செல்வனின் இறுதி விடைபெறும் நிழ்வின்போது துன்பப் பகிர்வில்.

12,13 நவம்பர் 2005இல் பரீசில் நடைபெற்ற 32வது இலக்கியச் சந்திப்பில் விமர்சன உரையாற்றும்போது






06.11.2004இல் ஸ்ருக்காட்டில் நடைபெற்ற 31வது இலக்கியச் சந்திப்பில் விமர்சனவுரை நிகழ்த்தியபோது.



2005இல் பரீசில் நடைபெற்ற 32வது இலக்கியச் சந்திப்பில் 2வது நாள் அமர்வில் விவாதவேளையின்போது.



ஸ்ருக்காட்டில் நடைபெற்ற 31வது இலக்கியச் சந்திப்பில் புதிய சஞ்சிகையொன்றின் வாசிப்பில் மறைந்த தோழர் புஸ்பராஜாவுடன்.




2005இல் பரீசில் நடைபெற்ற 32வது இலக்கியச் சந்திப்பில் 2வது நாள் அமர்வில் விவாதவேளையின்போது. துணைவியார் மல்லிகா அருகிருக்கையில்



# தோழர் டானியலின் தணிக்கை செய்யப்பட்ட கட்டுரையும் இன்று எழும் கேள்விகளும்

## ஒரு முன்மொழிவு

-சமுத்திரன்-


இங்கு பிரசுரமாகும் தோழர் டானியலின் கட்டுரை 1979 ல் யாழ்ப்பாணத்தில் தீண்டாமை எதிர்ப்பு வெகுஜன இயக்க மலருக்கென எழுதப்பட்டு அப்போதிருந்த தணிக்கைச் சட்டத்தின் காரணமாக பிரசுரம் தடைசெய்யப் பட்டதால் குறிப்பிட்ட மலரில் பிரசுரமாகவில்லை. இக்கட்டுரையின் ஒரு பிரதி 1982இல் நான் டோக்கியோவில் வாழ்ந்து வந்தபோது யாழில் இருந்துவந்த ஒரு நண்பருக்கூடாக எனக்குக் கிடைத்தது. அன்றிலிருந்து கடந்த 25வருடங்களாக இந்தக் கட்டுரைப் பிரதியும் என்னுடன் பல இட மாற்றங்களை அனுபவித்துள்ளது. எனக்கு ஒரு பிரதியைக் கிடைக்கச் செய்ததுபோல வேறு யாருக்கும் டானியல் இக் கட்டுரையின் பிரதிகளை அனுப்பியிருப்பார். ஆகவே இந்தக் கட்டுரை ஏற்கனவே பிரசுரிக்கப் பட்டிருக்கலாம். அப்படியிருப்பினும் இதனை மீண்டும் பிரசுரிப்பதில் பயனுண்டு என நம்புகிறேன்.

இந்தக் கட்டுரையில் யாழ்ப்பாணத்தில் சாதியத்திற்கெதிரான போராட்டங்களின் வரலாற்றுப் பின்னணியைத் தெளிவாக்கி 1960களில் இடம்பெற்ற வெகுஜனப் போராட்டத்தின் முக்கியத்துவம் பற்றி ஆயப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழ் சமூகங்களில் யாழ்ப்பாணத்திலேயே சாதியமைப்பு மிகவும் இறுக்கமான நிறுவன மயமாக்கலைக் கொண்டிருந்தது. சைவவேளாள உயர் வர்க்கத்தினால் பிராமணிய மயப்படுத்தப்பட்ட யாழ் சமூக அமைப்பில் தீண்டாமையும் சாதிக் கொடுமைகளும் சைவ வேளாளியக் கருத்தியலினாலும் பல்வேறு சடங்குகளினாலும் நியாயப் படுத்தப் பட்டன. இத்தகைய ஒரு சமூக அமைப்பில் சாதியத்திற்கெதிரான போராட்டங்களின்றித் தாழ்த்தப்பட்டோர் தமது சுதந்திரத்தை மனித கவுரவத்தைப் பெற முடியாதென்பது அடிப்படை உண்மை. கிறிஸ்துவ பாடசாலைகளின் வருகை யாழ் சமூகத்தில் சாதியத்தை கேள்விக்குள்ளாக்கி எதிர்புக்களைத் தெரிவிக்கும் சமூக இடைவெளிகளை உருவாக்கவதற்கு உதவியது. கிறிஸ்துவ மதமாற்ற நிறுவனத்தினர் தமிழ்ச்சமூக அமைப்பின் அடிப்படைகளையோ, ஆதிக்க சக்திகளையோ நேரடியாகத் தாக்காது தமது செயற்பாடுகளை நடத்தியபோதும், கிறிஸ்துவ பாடசாலைகளும் மதமாற்றமும் ஒருசில தாழ்த்தப்பட்ட சாதியினரின் கல்விக்கும் சமூக நகர்ச்சிக்கும் உதவின. இந்தத் தனிநபர்கள் சாதியத்திற்கெதிராகக் குரல் கொடுத்தனர். நடைமுறைரீதியான செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இந்தப்போக்கு சென்ற நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்திலேயே துளிர் விடத் தொடங்கியது. இந்தப் போக்கு தொடர்ந்த வேளை 1920களில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் உதயமாகியது. இது காலனித்துவத்திற்கு எதிரான போராட்டத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தினாலும், முற்போக்குச் சிந்தனைகளாலும் ஆகர்சிக்கப்பட்ட இந்த இயக்கம் பிரிட்டிஷ் காலனித்துவத்திடமிருந்து பூரண சுதந்திரத்தை வேண்டி நின்ற அதேவேளை, யாழ் தமிழ் சமூகத்தின் சாதி அமைப்பினையும் எதிர்த்துச் செயற்பட்டது.

இதைத் தொடர்ந்து 1935இல் உருவான இடதுசாரிக் கட்சியான சமசமாஜக் கட்சியினர் யாழ்ப்பாணத்தில் சாதிய எதிர்ப்பினைத் தொடர்ந்தனர். இடதுசாரிய அரசியலின் வருகை சாதி அமைப்புப் பற்றிய அறிவுரீதியான விமர்சனப் போக்கினையும் வளர்க்க உதவியது. இதே காலகட்டத்தில் சர்வஜன வாக்குரிமையின் வருகை தமிழ் அரசியலில் யாழ் சமூகத்தின் ஏறக்குறைய முப்பது வீதத்தினராய் இருந்த தாழ்த்தப்பட்டோரின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. 1920களில் யாழ் இளைஞர் காங்கிரசினால் நடைமுறைப் படுத்தப்பட்ட சமபந்தி போசனம் காலப்போக்கில் பாராளுமன்ற அரசியல்வாதிகளால் வாக்குகள் பெறும் ஒரு பிரச்சாரக் கருவியாக்கப் பட்டதையும் காண்கிறோம்.

ஆயினும் இந்த வலதுசாரி அரசியல் வாதிகளும் அவர்களின் கட்சிகளும் (தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி) சைவ வேளாளியத்தின் அமைப்பு ரீதியான, கருத்தியல் ரீதியான மேலாதிக்கத்தை விமர்சிக்கவோ, எதிர்க்கவோ முன்வரவில்லை. அப்படிச் செய்வது அவர்களின் வர்க்க நலன்களுக்கு வரோதமானது என்பதை அவர்கள் அறியாமலில்லை.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1943இல் சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு குழுவினரால் தோற்றுவிக்கப்பட்ட பின்னர் சாதிய எதிர்ப்பில் இடதுசாரிகளின் குறிப்பாக கம்யூனிஸ்ட்டுகளின் பங்கு



முக்கியத்துவம் பெறுகிறது. படிப்படியாக வெகுஜன அணிதிரட்டலின் அவசியம் மேலும் உணரப் படுகிறது. 1960களில் மாக்சிய லெனினிசக் கட்சி உருவாகிய பின்னர் இது நடைமுறைப் படுத்தப்படுகிறது. வெகுஜன அணிதிரட்டலின் அடிப்படையிலமைந்த போராட்டத்தின் முக்கியத்துவத்தினை டானியல் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"தியாகங்களுக்கஞ்சாத, விட்டுக்கொடாத போராட்டம் ஒன்றே ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக் கூடியது"

டானியலின் கட்டுரையின் பிரதான செய்திகளில் இது முதன்மை பெறுகிறது. அவர் கூறுவதுபோன்று 1966-78க்கிடையில் உள்ள காலத்தில் பெற்ற வெற்றிகள் அதற்கு முந்திய முப்பது ஆண்டு காலத்தில் பெற்றவற்றைவிட மிகத் தாக்கமானவை. இதற்கான விளக்கத்தை வெகுஜனப் பங்கு பற்றலைக் கொண்ட போராட்டத்திலேயே காண்கிறோம். அதேவேளை சாதியத்திற்கெதிரான நீண்ட வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களையோ பல்வேறு தனி நபர்கள் ஆற்றி பங்கினையோ டானியல் ஒதுக்கி விடவில்லை. அவருடைய வரலாற்றுப் பார்வை பல வகையில் முழுமையானது. அந்த முழுமையான வரைதலுக்கூடாகவே அவர் வெகுஜன அணிதிரட்டலின் அடிப்படையிலான போராட்டத்தின் விசேடத் தன்மையை இனம் காட்டுகிறார்.

டானியலின் இந்தக் கட்டுரை அவரது முழுப் பங்களிப்புடன் ஒப்பிடும்போது ஒரு சிறு அலகாகவே படும். ஆயினும் அதன் உள்ளடக்கம் கனதியானது என்பதை வாசகர் ஏற்றுக்கொள்வர். டானியலின் விமர்சன அணுகுமுறையில் மானுடவியல் நிறைந்திருப்பதைக் காண்கிறோம். அவருடைய நாவல்களை, குறுநாவல்களைப் படித்தவர்கள் இது டானியலின் அறிவின், ஆற்றலின் ஒரு சிறப்பம்சம் என்பதை ஏற்றுக்கொள்வர்.

இந்தக் கட்டுரை தற்போது பிரசுரமாவது புதிய விவாதங்களுக்கும் ஊக்கமளிக்கலாமென நம்புகிறேன்.

☞ *தீண்டாமைக்கெதிரான போராட்டம் ஏன் தொடரவில்லை?*

☞ *அதைத் தொடர்ந்தும் தக்கவைக்க முடியாமைக்கு என்ன காரணங்கள்?*

☞ *தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்திற்கும், இந்தப் போராட்டத்திற்குமிடையே உறவு இருந்ததா? அப்படியானால் அது எத்தகையது?*

☞ *தீண்டாமைக்கெதிரான வெகுஜனப் போராட்டத்தின் அரசியல் நெறிப்படுத்தல் எத்தகையது?*

☞ *கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இது பற்றி விவாதங்கள் வேறுபாடுகள் இருந்தனவென்றால் அவை எவை? அவை எப்படிக் கையாளப்பட்டன?*

☞ *தமிழ்த் தேசியப் போராட்டமும் அதைப் பீடித்துள்ள இராணுவவாதம், அது உருவாக்கிய துப்பாக்கிக் கலாச்சாரம் போன்றவை சாதி அமைப்பையும் அதற்கெதிரான போராட்ட மரபினையும் எப்படிப் பாதித்தன?*

☞ *தேசியப் போராட்டத்தின் இன்றைய காலகட்டத்தில் சாதியத்தின் நிலை என்ன?*
*அது பலவீனம் அடைந்துள்ளதா?*
*அப்படியானால் அது எந்த வகையில்?*

☞ *இடப் பெயர்வும் புலப் பெயர்வும் வெளிநாட்டுப் பணமும் சாதி வேறுபாடுகளை எப்படிப் பாதித்துள்ளது?*

☞ *மரபு ரீதியாக பாதிக்கப்பட்ட சாதியினர்க்கு சமூக நகர்ச்சி சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளனவா?*

☞ *சைவ வேளாளியமெனும் கருத்தியலின் அது வைத்திருக்கும் விழுமியங்களின் இன்றைய நிலை என்ன?*

இப்படிப் பல கேள்விகள் டானியலின் கட்டுரையை வாசிப்பவர் மனதில் தோன்றத்தான் போகின்றன. ●

# கே.டானியல் (1979)



முக்கிய குறிப்பு:-

*இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ள 1968ம் ஆண்டுக்கு முற்பட்ட சம்பவங்களும், இடம்பெறாத 1968க்கு பிற்பட்ட சம்பவங்களும் முறையே "பஞ்சமர்" நாவலின் முதற் பாகத்திலும், தற்போது அச்சேறத் தயாராகவிருக்கும் இரண்டாம் பாகத்திலும் இடம் பெற்றுள்ளன. இக் கட்டுரை 1979இல் வெளியான வெகுஜன இயக்க மலரில் இடம்பெறாமல் தணிக்கை சபையினால் தடுக்கப் பட்டதாகும்.* **-கே.டானியல்-**

**1964**ம் ஆண்டு காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் ஸ்தாபனங்களின் ஐக்கியத்தில் அச்சுவேலியில் நடந்த மாநாடும், அந்த மாநாட்டில் கலந்துகொண்டு "ஆறுமாத காலத்துள் உங்கள் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும்" என சாவகச்சேரி எம்.பி திரு வீ.என். நவரெத்தினம் அவர்கள் தந்த வாக்குறுதியும், காலஞ்சென்ற கோப்பாய் எம்.பி திரு.எஸ்.வன்னியசிங்கம் அவர்கள் 61இல் ஸ்ரான்லி பாடசாலை வட்டமேசை மாநாட்டில் தந்த வாக்குறுதியும் பற்றிய தாற்பரியங்களும் 1965இல் ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய இயக்கத்தினால் இணுவில் கந்தசாமி கோவிலில் இருந்து திருவாளர்கள்: நல்லையா, சுப்பிரமணியம் முதலானோர் தலைமை தாங்கி நடாத்தப்பட்ட - முற்றுமுழுதாகத் தாழ்த்தப்பட்ட மக்களையே கொண்ட - மௌன ஊர்வலமும் அத்தோடொத்த பல காரியங்களும், மீளாய்வு செய்யப்பட்டு, "தியாகங்களுக்கஞ்சாத விட்டுக்கொடாத போராட்டம் ஒன்றே ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக்கூடியது" என்ற கொள்கையில் வெகுஜன இயக்கம் நெறிப்படுத்தப் பட்டது. இந்த நெறிப்படுத்தலின் அடிப்படையில் ஆலயப்பிரவேச இயக்கங்கள், தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்கள் நாடெங்கும் விரிவடைந்தன. இந்தப் போராட்டங்கள் இழப்புக்கள் பலவற்றுக்கும் உட்பட்டதாயிற்று. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை இயக்கங்கள் காலத்தில் இந்த மக்களுக்கு ஒத்தாசையாக இருந்த தமிழ்த் தலைவர்களும், பிரமுகர்களும், தந்த ஆதரவுக்கு முற்றும் வேறுபட்ட விதத்தில் அப்போதைக்கப்போது உரிமைப்போர் நடந்த இடங்களுக்கு நேராகச் சென்று ஆலோசனை கூறியும், உற்சாகமளித்தும், இலங்கையின் சகல பகுதிகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலைமைகளை விளங்கவைத்தும், சிங்கள சாதாரண மக்களின் அனுதாபத்தைப் பெற்றுத் தந்தும் இன்றுவரை தொடர்ச்சியாக வெகுஜன இயக்கத்தின் நடவடிக்கைகளை உற்சாகப்படுத்தியும் வரும் என்.சண்முகதாசன் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் மனதில் நிரந்தர இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும் அதேவேளை சாதி வெறியர்களுக்குச் சிம்ம சொற்பனமாகவும் இருக்கிறார் என்பது விசேஷமாகக் குறிப்பிடக் கூடியதாகும்.

66-78க்கிடையிலுள்ள காலப்பகுதியில் ஒடுக்கப்பட்ட மக்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள் முன்னே காட்டப்பட்ட 30 ஆண்டுகால இயக்க வழியில் இந்தப் 12 ஆண்டு காலம் குறுகியதாயினும் இந்தக் குறிகிய காலத்திற் சாதிக்கப்பட்ட காரியங்கள்தான் விகிதத்தில் மிகமிகத் தாக்கமானதும், நிரந்தரமானதுமாகும். இந்தக் குறுகிய காலப் பலாபலன்களை அரைநூற்றாண்டு காலப் பலாபலன்களுடன் ஒப்பிடுவதில் கருத்துவேறுபாடு யாருக்குமே இருக்க முடியாது!

## சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிகள்!

மாவிட்டபுரம் கந்தன், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள், செல்வச்சந்நிதி முருகன், வல்லிபுர ஆழ்வார் ஆகியவைகள் உட்படப் பல பகுதிகளின் ஆலயங்களின் கதவுகள் திறக்கப்பட்டதும், எவ்வளவு சரித்திரப் பிரசித்தி பெற்ற சம்பவங்களோ அதேயளவுக்குப் பிரசித்தி பெற்றவையே தேனீர்க்கடைகள், பொது நிலையங்கள் திறக்கப்பட்ட சம்பவங்களும், பொதுக் கிணறுகள் புழக்கத்துக்கு விடப்பட்ட செயலுமாகும்.

1968-78க்கிடையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவும் மக்கள் மனத்திற்கு வலிந்து கொண்டுவர வேண்டியதில்லை. ஏனெனில் இவை மிகச் சமீபத்திலே நடந்த 10ஆண்டுகாலச் சம்பவங்களாகும்.

அதற்காக ஒரு வரலாறு பிறக்க இருக்கிறது. அந்த வீர வரலாறு ஒடுக்கப்பட்ட மக்களின் பலநூறு சந்ததியினருக்கும் வழிகாட்டியாகவே நிற்கப்போகின்றது.

இந்த இடையில் சாதிக் கொடுமையின் வேள்வித் தீக்கு 11 ஒடுக்கப்பட்ட வீரர்கள் பலியிடப் பட்டனர். பொருட்சேதம், இரத்தசேதம் கணக்கிட முடியாதவை. இந்தத் தியாகங்கள் யாவும் ஒடுக்கப்பட்ட மக்களின் 50ஆண்டுகாலத் தியாகங்களைவிட மேலானவை என்பதற்குப் பின்னே வரும் ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாறு சான்றுகள் பகரும். இச்சிறு கட்டுரைக்குள் அவைகளை எல்லாம் அடக்க முடியாது.

இந்தப் பத்தாண்டு காலத்துள் ஒடுக்கப்பட்ட மக்களாலும், அதற்கு ஆதரவு தந்த சக்திகளாலும் சரித்திரப் பிரசித்தி பெற்ற கோவில்கள் நான்கு உட்படப் பலவும், தேனீர்ச் சாலைகளும், பொது நிலையங்களும் வெல்லப்பட்டன.

"தியாகங்களுக்கஞ்சாத விட்டுக்கொடாத போராட்டமே முடிவான விடுதலையைத் தரவல்லது" என்ற வழியில் முன்னேறிச் செல்லத் துடிக்கும் மக்கள் பரப்பில் மாற்றங்களை வரவேற்கும் சகலரும் இணைந்துகொள்ளக் கடமைப்பட்டவர்களாகின்றனர்.

பின்னணி (இங்கு சில பகுதிகள் காணாமல் போய்விட்டன)

அவ்வேளை இந்துக்கல்லூரி ஆசிரியராக இருந்த நெவின்ஸ் செல்லத்துரை அவர்களைத் தலைவராகவும், அமரர் ஜேக்கப் காந்தி அவர்களைச் செயலாளராகவும் கொண்டு உதயமாகிய "ஒடுக்கப்பட்டோர் ஊழியர் சங்கத்திற்கு" மேலே குறிப்பிடப்பட்ட நால்வரும் போஷகர்களாக இருந்தமையிலிருந்து அன்று தொடக்கம் இன்றுவரை சாதி ஒழிப்புப் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் மட்டும் தன்னந்தனியனாக நிற்கவில்லை என்பதும், காலத்துக்குக் காலம் நல்லெண்ணம் கொண்ட மக்கள் பலரும் ஒத்தாசை நல்கியுள்ளனர் என்பதும் புலனாகின்றது.

இந்தப் போஷகர்களில் மூவர் வெள்ளையர்கள் ஆதலால் அவர்கள் பிரதானப் படுத்தப் படவில்லையாயினும், உருத்திர கோடீஸ்வர ஐயரைப் பொறுத்தவரை அவர் சாதித் தமிழர்களின் கண்டனங்களுக்கும், எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் இலக்காக வேண்டியதாயிற்று. இதேபோல் இந்த ஸ்தாபனத்தின் யோவேல் போல் எண்ணற்ற எதிர்ப்புகளுக்கும் பயமுறுத்தல்களுக்கும் முகம் கொடுத்துப் பெருமையைச் சம்பாதிக்கத் தவறவில்லை.

1927ம் ஆண்டுக் காலகட்டத்தில் இலண்டனில் இருந்து தனது நண்பர் மூலமாக இலங்கைவாழ் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சனைகளை, இலண்டனில் குடியேற்ற நாடுகளின் பிரச்சனைகளைக் கவனிக்கவென நிறுவப்பட்ட சபைக்குத் தெரிவித்ததில் அமரர் யோவேல் போல் அவர்கள் எடுத்த முயற்சியின் பலாபலனாக டொனமூரைத் தலைவராகக் கொண்டு இலங்கைக்கு வந்த அறுவர் அடங்கிய கமிஷனாகும். "வயதுவந்தோருக்கு வாக்குரிமை அளித்தல்" என்ற கொள்கையின் கீழ் அன்று குடியேற்ற நாடுகளின் காரியதரிசியாக இருந்த அமெரி என்ற M.P யினால் நியமிக்கப்பட்ட இந்த டொனமூர்க் கமிஷனுக்கு எதிர்ச் சாட்சியமளிக்க சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இலண்டன் மாநகரம் சென்றதில் இருந்துதான், "பஞ்சமச் சாதியிடம் வாக்குக் கேட்டுச் சாதிமான்கள் யாசகம் போவரோ?" என்ற கேள்வி சாதிமான்களிடையே ஆக்ரோஷ மாக எழுந்து சாதி அடக்குமுறைகள் கோரவடிவங்களை எடுத்தன என்பது முக்கிய கவனத்துக்குரியதாகும். பின்னர் இங்கே வந்த டொனமூர் கமிஷன் "வயது வந்தோருக்கு வாக்குரிமை" கிடைப்பதன் மூலம் பல உரிமைகளை அவர்கள் அடைய வழி பிறக்கும் என அறிக்கை மூலம் பிரகடனப் படுத்தியபோதும் உள்நாட்டு அரசு இயந்திரங்களைப் பெருஞ்சாதியினரே ஆளுகை நடத்தி வந்தமையால்- ஒடுக்கப்பட்ட மக்களால் எதிர் பார்க்கப்பட்டவைகள் நடந்தேறவில்லை. பதிலுக்கு அடக்குமுறைகள் அதிகரித்தன. விதானை, உடையார், மணியகாரன் என்ற பதவிகளில் குந்தியிருந்தவர்கள், காவல்ப் படையினைச் சேர்ந்தவர்கள், சிவில்சேவை அதிகாரம் வகித்தவர்கள் உட்பட சகல பிரிவினரும் தேசவழமைச் சட்டத்தின் அடிப்படையில் துரித கதியில் செயற்படத் தொடங்கினர். இவைகளைத் தாக்குப் பிடிக்க முடியாத ஒடுக்கப்பட்ட மக்கள் மதமாற்றம் போன்ற குறுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினர். இதனால் ஒருசில சிறிய அளவிலான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின என்பது உண்மையே.

**பகிரங்க வீதிகளில் தலை நிமிர்ந்து நடமாடத் தடை- சுடலைகளில் பிணம் சுடத் தடை- பொது ஸ்தாபனங்களில் உள்நுழையத் தடை- சுதந்திரமான வாகனப் போக்குவரத்துக்குத் தடை- கோவிற்பக்கம் செல்லத் தடை- மேளம் அடிக்கத் தடை- மீசை விடத் தடை- கடுக்கன் அணியத் தடை- குளங்களில் குளிக்கத் தடை- பந்தல் போட்டு வெள்ளை கட்டத் தடை- முளங்கால் மட்டத்திற்குக்கீழ் வேட்டியணியவும், மேலங்கி அணியவும், சால்வை போடவும் தடை- வண்டில் ஆசனத்தட்டில் ஏறியிருக்கத் தடை- புகைவண்டியின் ஆசனங்களில், பஸ் ஆசனங்களில் இருக்கத் தடை- கடை போன்றவைவைக்கத்தடை-செய்தவேலைக்குக் கூலி கேட்கத் தடை- குழந்தைகளுக்கு நல்ல பெயரிடத் தடை- பால்மாடு வளர்க்கத் தடை விறுமர், அண்ணமார், காளி, பெரிய தம்பிரான், வீரபத்திரர், வைரவர், நாச்சிமார், காத்தவராயர் ஆகிய தெய்வங்களின் பெயர்களைவிட ஏனைய பெயர்களில் கோவில்கள் அமைக்கத் தடை குடை பிடிக்கவும், வெள்ளை வேட்டி அணியவும், செருப்பு அணியவும், பெண்கள் குடுமி போட்டுக்கொள்ளவும் தடை- தாவணி போடத் தடை, தங்கத்தாலி, நகை நட்டுக்கள் அணியத் தடை- இப்படித் தடை வரிசையோ கணக்கற்றவை. இவை யாவும் தேசவழமை என்ற மதிப்பீட்டுக்கு உட்பட்டவையாகவே கணிக்கப் பட்டன.**

அந்தக் காலத்துத் திண்ணைப் பள்ளிகளுக்குக்கூட அனுமதி கிடைக்கப்பெறாத மக்களுக்குப் பிற மதப் பாடசாலைகள் சற்று வழி விட்டன. சுற்றுச்சார்புகளை மீறிப் பாடசாலைகளுக்குச் சென்ற பலர் தண்டிக்கப்பட்டனர், இம்சிக்கப் பட்டனர்.

பகிரங்க வீதிகளில் தலைநிமிர்ந்து நடமாடத் தடை- சுடலைகளில் பிணம் சுடத் தடை- பொது ஸ்தாபனங்களில் உள்நுழையத் தடை- சுதந்திரமான வாகனப்

போக்குவரத்துக்குத் தடை- கோவிற்பக்கம் செல்லத் தடை- மேளம் அடிக்கத் தடை- மீசை விடத் தடை- கடுக்கன் அணியத் தடை- குளங்களில் குளிக்கத் தடை- பந்தல் போட்டு வெள்ளை கட்டத் தடை- முளங்கால் மட்டத்திற்குக்கீழ் வேட்டியணியவும், மேலங்கி அணியவும், சால்வை போடவும் தடை- வண்டில் ஆசனத்தட்டில் ஏறியிருக்கத் தடை- புகைவண்டியின் ஆசனங்களில், பஸ் ஆசனங்களில் இருக்கத் தடை- கடை போன்றவை வைக்கத் தடை- செய்த வேலைக்குக் கூலி கேட்கத் தடை- குழந்தைகளுக்கு நல்ல பெயரிடத் தடை- பால்மாடு வளர்க்கத் தடை- விறுமர், அண்ணமார், காளி, பெரிய தம்பிரான், வீரபத்திரர், வைரவர், நாச்சிமார், காத்தவராயர் ஆகிய தெய்வங்களின் பெயர்களைவிட ஏனைய பெயர்களில் கோவில்கள் அமைக்கத் தடை- குடை பிடிக்கவும், வெள்ளை வேட்டி அணியவும், செருப்பு அணியவும், பெண்கள் குடுமி போட்டுக்கொள்ளவும் தடை- தாவணி போடத் தடை, தங்கத்தாலி, நகை நட்டுக்கள் அணியத் தடை- இப்படித் தடை வரிசையோ கணக்கற்றவை. இவை யாவும் தேசவழமை என்ற மதிப்பீட்டுக்கு உட்பட்டவையாகவே கணிக்கப் பட்டன.

சர்வசன வாக்குரிமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில் இராமநாதன் துரை அவர்கள் இலண்டன் சென்றிருந்தபோது அவரைத் தலைவராகக் கொண்டிருந்த சைவ சித்தாந்த சபைக்குத் தற்காலிகத் தலைவராக, ஆறுமுகநாவலரின் மருமகனாகிய த.கைலாசபிள்ளை அவர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள். அப்போது பரமேஸ்வராக் கல்லூரியில் சைவ சித்தாந்த அறக்கல்விப் போதனைக்காக மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. அப்போது திரு.யோவேல் போல் அவர்களால் உந்தப்பட்ட சுன்னாகத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்டோர் சிலர், தாமும் சைவ சித்தாந்த அறக்கல்வியைப் பெறவேண்டும் என்று கோரி, மாநாட்டு மண்டபத்துக்குள் நுழைய முற்பட்டபோது, "நிரந்தரத் தலைவர் இல்லாதபோது இதை அனுமதிக்க முடியாது" என மாநாட்டுத் தலைவர் கைலாயபிள்ளை மறுக்கவே, அறக்கல்விக்கு அனுமதி கேட்டுப் போயிருந்த ஒடுக்கப் பட்டோர் அவரின் மறுப்பை எழுத்தில் பெற்று, டொனமூர்க் கமிஷனுக்கு தந்திமூலம் இலண்டனுக்கு அனுப்பி வைத்தனர். அந்த வேளையும் உயர்சாதியைச் சேர்ந்த நாகநாதி அதிகாரம், இலங்கைச் சட்டசபை உறுப்பினராக இலண்டனிலிருந்த தம்பிமுத்து ஆகியோர் இந்த மக்களுக்கு ஆதரவாய் இருந்தனர். நம்மவர் துணிந்து செயற்பட்டமையால்த்தான் இராமநாதன் துரை அவர்களின் இலண்டன் பிரயாணம் தோல்வியில் முடிந்ததெனலாம்.

1930ம் ஆண்டுக்காலப் பகுதியில் கண்டி எச்.பேரின்பநாயகத்தைத் தலைவராகவும், செனட்டர் நாகலிங்கம், ஓறேற்றர் சுப்பிரமணியம், கலைப்புலவர் நவரெத்தினம், ஏ.எஸ்.கனகரெத்தினம் ஆகிய முக்கியஸ்தர்கள் உட்பட ஒடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய இளைஞர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனம் தோன்றியது.

இந்த ஸ்தாபனம் பல தேசியப் பிரச்சனைகளைக் கொணடிருந்தபோதும், சாதி ஒழிப்பு விவகாரத்தில் பெருமளவு செயற்பட்டு, "சம ஆசனம்- சம போசனம்" என்ற கொள்கையை ஏற்று நாடெங்கும் பிரச்சாரங்களில் ஈடுபட்டது. அப்போது இவர்களுக்குச் சாதிமான்களால் கிடைத்த எதிர்ப்புகள் பெருமளவாகும். இதன் பிரச்சாரத்துக்கென தமிழகத் தமிழறிஞர் திரு வி.க அவர்கள் அழைக்கப்பட்டு, சமபந்தி, சமபோசனப் பிரசாரத்தில் ஈடுபடுத்தப் பட்டதும் அவர் திரும்பிப்போன மறுகணமே அவர் பேசிச் சென்றதும், சம ஆசன நடவடிக்கையில் ஈடுபடுத்தப் பட்டதுமான பல பாடசாலைகள் தீயிட்டு எரிக்கப்பட்டன. வசாவிளான் வடமூலை, ஒட்டகப்புலம், சுழிபுரம், புன்னாலைக்கட்டுவன், காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் சுமார் 14பாடசாலைகள் சாதிவெறியர்கள் வைத்த தீயில் எரிந்து சாம்பராகின.

1931இல் வரவிருந்த ஆட்சிமன்றத் தேர்தலைத் தமிழர்களின் உரிமைக்காகப் பகிஷ்கரிக்கத் திட்டமிட்டுப் பிரசாரம் செய்துவந்த வாலிபர் காங்கிரசினர், அவ்வேளை சாதிவெறியர்களின் கோபாக்கினிக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. இந்தக் காலகட்டத்தோடு வீறுகொண்டெழுந்து நின்ற சாதி வெறியர்கள் கிராமப்புறங்கள் எங்கும் தங்கள் தாக்குதல்களை மேற்கொண்டனர். அத்தாக்குதல்களுக்கு முதன்முதலில் பலியிடப்பட்டவன் புத்தூர்ப் பகுதியைச் சேர்ந்த ஒடுக்கப்பட்டவன் ஒருவனாகும். பீதிமிகுதியால் பனைமரத்தில் ஏறியிருந்த அந்த அப்பாவிப் பஞ்சமன் மரம் தறித்து வீழ்த்தப்பட்டு- கொல்லப்பட்டு- அந்த மரத்தின் அடியிலேயே கொழுத்திப் பிடிசாம்பராக்கப் பட்டான்! ஏனைய கிராமப் புறங்களில் இல்லாத அளவில் புத்தூர்ப் பிரதேசத்தில் நில ஆதிக்க முறையும், சாதி ஒடுக்குமுறையும் மேலோங்கியிருந்தன என்பதற்கு இன்றும் அழியா அடையாளச்சின்னங்கள் பல உண்டு. பல பாரம்பரிய குடும்பங்களின் பழைய நாற்சார் வீடுகளில் இன்றுவரை பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள பல்லக்குகளும், வீட்டு முற்றங்களின் நீள்வரிசைகளில் சுற்றுவட்டாரத்தில் உண்டாக்கப்பட்ட பல அளவுகள் கொண்ட பொருக்குப் பட்டையற்ற நேர்மரங்களும் இன்றைய அமைப்புக்குச் சற்று வேறுபட்ட, சற்று உயர்ந்த அமைப்பிலுள்ள ஏர்க் கலப்பைகள் இடம்பெற்றுள்ளதும் இன்றும் நாம் பார்க்கக்கூடிய சின்னங்களாகும். அக்காலத்தில் பல்லக்கு முதலிகுடும்பம் எனப்படுவோர் தங்கள் பிரயாணத்திற்குப் பயன்படுத்திய பல்லக்குகளைச் சுமந்துசெல்லக் கோவியர் சமூகத்தினரை அமர்த்தி வைத்துக் கொண்டிருந்ததையும், ஊரிலுள்ள பஞ்சமர்களிடையே ஏற்பட்ட குற்றங்களுக்குத் தண்டனை கொடுக்க, அளவான மரத்தைப் பார்த்து அவர்களைக் கைகொடுக்க வைத்துச் சவுக்கடி கொடுத்த தர்பார்த்தன வழக்கத்தையும், மாட்டுக்குப் பதிலாக அடிமை மனிதனை ஏரில் பூட்டி, உழுது பயிரிட்டமையையும் இந்த அடையாளச் சின்னங்கள் இன்றும் நினைவுறுத்திக் கொண்டிருக்கின்றன.

கலியாணப் பெண்களுக்கு சீதனம் கொடுக்கும்போது அந்த சீதன வரிசையில் ஒரு கோவியனும், ஒரு பள்ளியும் நிச்சயமாக இடம் பெற்றே தீர வேண்டும் என்பது இறுக்கமான நடைமுறையாயிருந்தது.

இந்தக் குடும்பங்களின் மரண வீடுகளில் தொண்டு வேலைகள் புரியும் வரிசைகள் சில இன்றுவரை இருந்து வருவதைக் காணலாம்.

இயற்கை மரணத்தை எதிர் நோக்கி நிற்கும், நயினார் அல்லது நயினாத்தி மரணப் படுக்கையிற் கிடக்கும்போது கண், வாய் பொத்த, கோவியன், அல்லது கோவிச்சி காத்திருக்க வேண்டும். மரணம் நிகழ்ந்த பின்பு சகல தொண்டு வேலைகளையும் கோவியக் குடும்பம் செய்து முடிக்க வேண்டும். மரணித்தது ஆணாக இருப்பின் "பரியாரி" என்று இவர்களால் அழைக்கப்படும் அம்பட்டன் பிணத்தைச் சவரம் செய்வதும், "கட்டாடி" என்று அழைக்கப்படும் வண்ணான் தனது சேவைகளைச் செய்வதும் முதன்மையான அடிமைத்தனத் தொண்டுகளாகும். இவைகளுக்குப்பின் பிரேத ஊர்வலத்தில் நடைமுறை வரிசை பார்ப்பதற்கே மனங்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

கட்டை குத்தி அடுக்கும் பள்ளர் பச்சையான கட்டை குத்திகளைச் சுமந்துகொண்டு முன்னே செல்ல, அதையடுத்து மாராயச்சாதிப் பெண்கள் குடமூதி நடக்க, அதை அடுத்து "சாம்பான்" என்ற பறையன் பறை கொட்டிச் செல்ல, அதன் பின்னே வண்ணான் நில பாவாடை விரித்துவர, நான்கு கோவியர்கள் பாடை காவியும், நாலு கோவியர்கள் மேலாப்புப் பிடித்தும்வர, கடைசியில் பரியாரி என்ற அம்பட்டன் பாடைக்குப் பொரி எறிந்து நெருப்புச்சட்டி தூக்கிவரும் காட்சி சாதி முறையின் பூரண வெளிப்பாடானதாகும். சகலவிதமான அடிமை குடிமை முறைகளோடும் நடந்து வந்த வைபவ முறைகளில் பெரிய அளவு மாற்றங்கள் எதுவுமே இல்லாது இன்றுவரை அவை நடைமுறையில் இருப்பதைக் காணலாம்.

ஒடுக்கப்பட்டோர் ஊழியர் சங்கம் சற்று விரிந்து பரந்ததன் பலாபலனாய் 1940ம் ஆண்டில் ஒடுக்கப்பட்ட சகல மக்கள் பிரிவினரையும் உள்ளடக்கிய "சிறுபான்மைத் தமிழர் மகாசபை"யாகப் பரிணமித்தது.

அன்று சமூக சிறுசிறு இயக்கங்களோடும், தனித்தனியாகவும் இருந்து செயல்பட்டு வந்த எஸ்.ஆர்.யேக்கப் காந்தி, ஆ.ம.செல்லத்துரை, டீ.யேம்ஸ், வீ.ரீ.கணபதிப்பிள்ளை, எம்.சி.சுப்பிரமணியம், எம்.ஏ.சி.பெஞ்சமின், எஸ்.நடேசு, ஜீ.நல்லையா, வி.ரி.அரியகுட்டிப்போதகர், ஜீ.எம்.பொன்னுத்துரை, யோனா, யே.டீ.ஆசீர்வாதம், எம்.வி.முருகேசு, விஷயரட்ணம், பேப்பர் செல்லையா, A.P.இராசேந்திரா ஆகியோர்களையும் உள்ளடக்கிக்கொண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் உடனடியாகவே பல் சாதிக் கொடூர நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று. வில்லூன்றி மயானத்தில் முதலி சின்னத்தம்பி சுட்டுக் கொல்லப் பட்டதும், பூநகரியில் நடந்த சாதி வெறியினால் மூவர் உயிர் இழந்ததும் 26வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டதும் இந்தக் காலகட்டத்தில்தானாகும்.

யாழ்ப்பாணத்து நீதிமன்றத்தில் முதலி சின்னத்தம்பியின் வழக்கு விசாரணைக்கு வந்தபோது நியாய தரந்தரர்கள் தங்களுக்கள் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு முதலி சின்னத்தம்பிக்கான பக்கத்திற்கு வழக்காட மறுத்தபோது திரு.தர்மகுலசிங்கம் அவர்கள் ஒருவர் மட்டுமே சாதிமான்களின் கட்டுப்பாட்டை உடைத்துக் கொண்டு வழக்குரைக்க முன் வந்தார். இதன்மூலம் தனது நல்லெண்ணத்தைத் தெரிவித்துக் கொண்டபோதும், மகாசபைக்கு அது போதுமான ஆதரவாகப் படாமையால் கொழும்பு நீதிமன்றத்திற்கு வழக்கை எடுக்க அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த சிங்கள நியாய துரந்தரர் உதவியோடு முயற்சித்து வெற்றி கண்டதுடன், கொழும்பு விசாரணையில் மூவர் தண்டிக்கப்படவும் வைத்தனர். இதேபோன்றே பூநகரி கொலை, வீடெரிப்பு வழக்குகள் கண்டி நீதிமன்றத்தின் பின்பு கொழும்பு நீதிமன்றத்திலும் விசாரணைக்கு எடுக்கப்பட்டுக் குற்றவாளிகள் தண்டிக்கவும்பட்டனர்.

அப்போதைக்கப்போது, அவ்வப்பகுதிகளில் சாதி அடக்குமுறைத் தாக்குதல்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கைகள் மூலம் இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியாதென்பதனைச் சிறிய அளவில் இவர்கள் உணர்ந்து கொண்டமைதான் சில அரசியல் இயக்கங்களுக்கான ஆதரவுக் குரலையும் இவர்கள் வைக்க முற்பட்டமைக்கான காரணமாயிற்று. இந்த முயற்சியில் முதலாவது பலனாகச் சங்கானையைச் சேர்ந்த பொன்னர் என்பவர் கிராமச் சங்க உறுப்பினராகவும், பளையைச் சேர்ந்த செல்லையா என்பவர் கிராமச் சங்க உறுப்பினராகவும் வந்தனர்.

கிராமச் சங்க உறுப்பினர் முதன்முதல் கிராமச் சங்கக் கூட்டத்திற்குச் சென்றபோது, கைத்தறி நெசவுக் கிடங்கு போல கிடங்கமைத்து, அதிலே கால் செருகிக்கொண்டு உட்காரும்படியும், செல்லையா சென்றபோது, தென்னைமர அடிக்குத்தி ஆசனமாக வைக்கப் பட்டிருந்தமையும், தமிழர்களின் ஜனநாயக அமைப்பு முறையின் சரித்திரத்தில் குறைந்தபட்சம் பித்தளை எழுத்துக்களாலேனும் பொறித்து வைக்கப்பட வேண்டியவையாகும். அத்தோடு, அந்தக் காலகட்டத்தோடு ஒட்டிய ஐந்தாண்டு இடைவெளியில் எரிக்கப்பட்ட வீடுகள் என்று கணக்கை நிரைப் படுத்தினால் அவை:

பூநகரி- 26
காரைநகர்-----------------------10
கரவெட்டி-----------------------14
ஊர்காவற்றுறை--------------5
பருத்தித்துறை(சல்லி)--- 3

கன்பொல்லை, கரவெட்டி மேற்கு, கலட்டி, இளவாலை, நாரந்தனை மேற்கு, பளை, அல்லைப்பிட்டி, புத்தூர், சங்கானை மொத்தமாக 65க்குக் குறையாததுதான் அமையும்.

இந்த இடைக்காலத்தின் சாதிவெறி நடவடிக்கைகளில் பலியான உயிர்கள் என்று குறிப்பிடும் போது:-

பன்றித்தலைச்சி------------------------ 3

பூநகரி--------------------------------------- 3
சண்டிலிப்பாய்---------------------------- 1
வில்லூன்றி--------------------------------- 1
ஊரெழு--------------------------------------- 1
நயினாதீவு---------------------------------- 1
பருத்தித்துறை-சந்தாதோட்டம்---- 1
காரைநகர்---------------------------------- 1
கெருடாவில்-------------------------------- 1
புத்தூர்--------------------------------------- 1
கோண்டாவில்----------------------------- 1
புன்னாலை---------------------------------- 1
கம்பர்மலை--------------------------------- 1

இக் கட்டுரைக்குள் அடக்கப்படாத 68க்குப் பின் சம்பவங்களினால் இழக்கப்பட்ட உயிர்கள் பற்றிய தொகுப்பு:

சங்கானை----------------------------------- 3
கன்பொல்லை----------------------------- 3
கரவெட்டி----------------------------------- 1
அச்சுவேலி---------------------------------- 1
சண்டிலிப்பாய்----------------------------- 1
கொடிகாமம்-------------------------------- 1
பளை----------------------------------------- 2
மிருசுவில்----------------------------------- 1

என நிரைப்படுத்திக் கொள்ளலாம்.

உயிர்ச் சேதமற்ற துப்பாக்கிச் சூடு, வாள்வெட்டு, கத்திக்குத்து, எலும்பு முறிவு, மானபங்கம் ஆகியவை என்று குறிப்பிடும்போது, யாழ்ப்பாணக் குடா நாட்டில் எத்தனை சிறு கிராமங்கள் உள்ளன என்று கணக்கெடுத்து, சிறுநகர் எத்தனை இருக்கிறது என்று பார்த்து இரண்டையும் சேர்த்துக் கணக்கெடுத்து, சராசரி 75னால் பெருக்கினால் வரும் எண்ணிக்கை எதுவோ, அதுதான் உத்தேச- ஆனால் சரியான கணக்காகும்.

**இந்தக் காலத்தில் விஷேசமாக நடைபெற்ற இன்னொன்று குறிப்பிடப்பட வேண்டியதாகும்.**

**சோல்பரிப்பிரபு தலைமையிலான ஒரு கமிஷன் இந்தச் சாதி அடக்குமுறையில் விசாரணைக்காக நியமிக்கப் பட்டது.**

இந்தக் கமிஷனுக்கு சிறுபான்மைத் தமிழர் மகாசபையினர் ஒரு விபர வியாக்கியானக் கொத்துச் சமர்ப்பித்திருந்தனர். இந்த வியாக்கியானக் கொத்துச் சமர்ப்பிக்கப் பட்டதுதான் தாமதம், அப்போது பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் சபையினரைச் சென்.சாள்ஸ் பாடசாலையில் சந்தித்து, அந்த வியாக்கியானக் கொத்தை மீளப் பெறும்படியும், தான் சகல சாதிப் பிரச்சனையையும் தீர்த்து வைக்க ஆவன செய்வதாகவும் கூறினார். இதை மகாசபையினர் நிராகரித்தனர். அதன்பின் மகாசபையினர் சோல்பரியால் அழைக்கப் பட்டனர். பத்துப்பேர் கொண்ட ஒரு குழு கொழும்பு சென்று விபரக் கொத்தின் வியாக்கியானத்தைத் தெளிவு படுத்தியதன்மேல் சோல்பரி இதை ஏற்றுத் தனது யாழ்ப்பாண வருகையின்போது சாதி ஒடுக்குமுறைக்குட்பட்ட ஒரு கிராமத்தைத் தனக்குக் காட்டும் படியும் கேட்டு, இந்தக் காரியத்தைத் தான் வந்து பார்க்கும் வரை இரகசியமாக வைத்திருக்கும்படி கூறினார். குறிப்பிட்டபடி சோல்பரி யாழ்ப்பாணம் வந்தபோது, நெல்லியடிச் சந்தியில் பொன்னம்பலம் அவர்களால் பெரு வரவேற்பொன்று அவருக்கு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பு முடிந்தபின், இரகசியத் திட்டத்தின்படி பருத்தித்துறை வாடி வீட்டிலிருந்து சோல்பரிப் பிரபுவை மகாசபையினரைச் சேர்ந்த திருவாளர்கள். எம்.சி.சுப்பிரமணியம், டீ.யேம்ஸ், வீ.ரீ.கணபதிப்பிள்ளை ஆகியோர் அழைத்துச் சென்று கன்பொல்லைக் கிராமத்தைக் காட்டினர். இரண்டொரு நாட்களுக்கு முன் சாதி வெறியர்களால் தீயிடப்பட்டுப் புகைந்து கொண்டிருந்த வீடொன்றையும் சோல்பரி பார்த்துக்கொண்டு திரும்பியபின், குறிப்பிட்ட மூவரும் பஸ் எடுப்பதற்காக நெல்லியடிக்கு வந்தனர். இவைகளை அவதானித்திருந்த சாதி வெறியர்கள் மூவரையும் சிறைப் பிடித்து எம்.சி.சுப்பிரமணியம் அணிந்திருந்த கதர் சால்வையாலேயே சுற்றி மூவரையும் கட்டி நையப்புடைத்துப் பட்டப் பகலில் நெருப்பு வைக்க முற்பட்டனர். அந்தவேளை தற்செயலாக டாக்டர் பஸ்ரியான் என்பவரும், மூன்று பொலிஸாரும் காரில் வந்தபோது, சாதி வெறியரின் தீ வைப்பு முயற்சி முறியடிக்கப்பட்டு இம்மூவரும் காப்பாற்றப் பட்டனர். இந்தச் சம்பவம் இன்று பகிரங்கப் படுத்தப் படுவதைச் சாதித் தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக வந்தவர்கள்கூட விரும்ப மாட்டார்கள்.

1949 செப்டம்பர் 14ம் திகதி அப்போதைய உள்நாட்டு மந்திரியும், கிராம அபிவிருத்தி மந்திரியுமாயிருந்த ஒலிவர் குணத்திலகா அவர்கள் இந்துக் கோயில்களில் பலியிடுதல், நிதி நிர்வாகம் ஆகியன பற்றியும் தனக்குக் கிடைத்த குற்றச் சாட்டுதல்களை யோசிக்க கீழ்சபையிலும், மேல் சபையிலும் அங்கத்தவர்களான தமிழ் உறுப்பினர்களை அழைத்துச் சம்பாஷித்தார். அப்போது திரு. சி.சிற்றம்பலம் இவைகளைவிட ஒரு பகுதியினரைக் கோவிலுக்குள் விடாமல் தடுத்து வைத்தல் பெருங் குற்றம், எனவே அதை முதற் பிரச்சனையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனப் பிரேரிக்க செனட்டர் பெரியசுந்தரம் அதை ஆதரிக்க இந்த ஆலய வழிபாடு விஷயம் பற்றித் தனியாக விசாரிக்க ஒரு கமிஷன் வைக்கிறேன் எனக் கூறி வாய்மூலம் நேருக்கு நேராகவும், எழுத்து மூலமாகவும் கமிஷனுக்குச் சாட்சியங்கள் அளிக்கப்பட்டன. வடக்கில் சுமார் 60ஸ்தாபனங்களினதும் கோவில் நிர்வாகிகள், குருக்கள் என்ற விதத்தில் 80பேர்களினதும் வசதி படைத்த கொழும்பு வாசிகளின் ஸ்தாபனங்கள் 13இனதும் தனியானவர்கள் 12பேர்களினதும் சாட்சியங்கள் பதிவாகின. ஆலயப் பிரவேசத்தை ஆதரித்த விதத்தில் யாழ்ப்பாணம் காந்தி நிலையம், மனோகரா சேவா சங்கம், சுன்னாகம் தாழ்த்தப்பட்டோர் ஐக்கிய சங்கம், தேவரையாளி சைவ கலைஞான சபை, பருத்தித்துறை திராவிடர் கலைமன்றம் ஆகியவை தர்க்கரீதியான முறையில் வழிபாட்டை வற்புறுத்தி நின்றன. அத்துடன் வட பகுதியிலுள்ள ஸ்தாபனங்களையும், தனி மனிதர்களையும் தவிர்ந்த ஏனைய ஸ்தாபனங்களும் தனி மனிதர்களும் நூற்றுக்கு நூறு இந்தத் தர்க்க நியாயங்களுக்குச் சார்பாகவே சாட்சியமளித்துள்ளனர். இதற்கு மாறாகச் சாட்சியம் கொடுத்தவர்களுடைய தர்க்க நியாயங்களுள்

"தாழ்த்தப் பட்டவர்கள் மனிதப் பிறவிகள் அல்லர்" என்ற கருத்துக்களே பொதுவில் பரவலாக இடம் பெற்றிருந்தன.

முதன்முதலில் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் இந்து சமய வழிமுறைகளில் தமக்கென பாடசாலை ஒன்றை அமைக்கும் முயற்சியில் வதிரியைச் சேர்ந்த கா.சூரன் என்பவர் எடுத்த விடா முயற்சியால் 1914ம் ஆண்டிலேயே வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி அமைக்கப் பட்டதும், அதைத் தொடர்ந்து கல்வி அடிப்படையிலான முயற்சிகள் எடுக்கப் பட்டதும், அப்பகுதி மக்கள் மேலும் முன் செல்ல உதவியது.

1940 - 41 காலப் பகுதியில் டீ.ரீ.சாமுவேலைத் தலைவராகவும், கவிஞர் செல்லையாவைக் காரியதரிசியாகவும், சைவப்புலவர் வல்லிபுரத்தைத் தனாதிகாரியாகவும் கொண்டு தொடக்கப்பட்ட வடமராட்சி சமூக சேவா சங்கம், வடமராட்சிப் பகுதியில் தொடக்கப்பட்டபோது அப்பகுதியைச் சேர்ந்த பல உயர்சாதி இந்துக்களும் அதற்கு ஆதரவளித்து உற்சாகப் படுத்தினர்.

1944 - 46ம் ஆண்டுக் காலத்தில் அச்சங்க மாநாடொன்றில் தலைமை உரையாற்றிய டாக்டர் பசுபதி என்பவர் "தாழ்த்தப்பட்ட மக்களைக் கோவிலுக்குள் அனுமதிக்காத வரையில் நான் இன்றிலிருந்து கோவிலுக்குள் போக மாட்டேன்" என்று சபதம் எடுத்துக் கொண்டார். இந்தச் சபதத்தை அவர் உயிர் உள்ளவரை - நீண்டகாலம் கடைப்பிடித்தே வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற பல சம்பவங்கள் மறப்பதற்கரியனவே!

1956-ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் மகாசபையின் இணைக் காரியதரிசிகளாகப் பொறுப்பேற்றுக் கொண்ட இ.வி.செல்வரட்ணமும், கவிஞர் பசுபதியும் திரு.எம்.சி.சுப்பிரமணியம் தலைமையில் எடுத்துக்கொண்ட நடைமுறை வேலைகளுக்கு நாடெங்குமிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதிகளிலிருந்து ஆதரவு கிடைத்தது. அதன் பெறுபேறுகளாக 14க்கு மேற்பட்ட பாடசாலைகள் அமைய வழி பிறந்தமையாலும், அந்தக்கால வடபகுதி முதலாவது இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினரான பொன்.கந்தையா அவர்களின் துணிவான, நேரடியான ஒத்துழைப்புக் கிடைத்தமையாலும் இந்த இளைய தலைமுறையினர் மேலும் உற்சாகமுடன் செயற்பட்டனர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் குரலின்கீழ் பல சாதியினரையும், பல மதத்தினரையும் பெருவாரியாகக் கலந்துகொள்ள வைத்த அனுபவத்திலிருந்துதான் "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்" பிறப்பிக்கப் பட்டதாகும். பல பிற்போக்காளர்களாலும், தமிழர் அரசியல் இயக்கங்களாலும் ஒருமுகமாக இந்த எழுச்சி எதிர்க்கப்பட்டபோது பெருஞ்சாதித் தமிழர் வழி வந்த திரு.என்.சண்முகதாசன் அவர்களால் தலைமை தாங்கப்பட்ட இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்த எழுச்சியை ஏற்று ஒத்துழைப்புத் தர முன் வந்ததோடல்லாமல் ஆக்கபூர்வமான காரியங்களில் நேரடியான ஒத்துழைப்பையும் நல்கியது. இந்தச் செயற்பாடு அதுவரை திறக்கப்படாது யாழ்நகர் எங்குமிருந்த தேனீர்க் கடைகளையும், யாழ் நகருக்கப்பால் கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களின் தேனீர்க் கடைகளையும் திறப்பதற்கு வாய்ப்பளித்தது. மகாசபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களில் இருந்துதான் பொதுவான ஒரு அரசியல் உணர்வையும், சமூக மாற்றத்திற்கான செயற்பாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் பங்கையும், ஒடுக்கப்பட்ட மக்கள் பகுதியெங்கும் பரப்ப முடிந்தது.

ஆரம்ப காலத்தில் செனற் சபையில் ஏ.பி.இராசேந்திரா அவர்களுக்கு நியமனங் கிடைத்த பின்னும் சிறிதளவேனும் நகர்ந்து கொடுக்காத சாதிமுறையில் சற்றுத் தளர்ச்சி ஏற்பட்டது, இந்தத் தலைமையின் நடவடிக்கைகளுக்குப் பின்புதான் என்பதைத் துணிந்து கூறிவிடலாம். இதேபோன்று பிற்காலப் பகுதியில் திரு.ஜீ.நல்லையா அவர்களுக்குச் செனட்டில் இடம் கிடைத்தபோதும், திரு.எம்.சி.சுப்பிரமணியம் அவர்களுக்குப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்தபோதும், ஒடுக்கப்பட்ட மக்களால் எதிர் பார்க்கப்பட்ட பலாபலன்கள் கிடைத்து விடவில்லை. இதிலிருந்து அரசாங்க மட்ட நியமனங்களைவிட இயக்க ரீதியான காரியங்களும், நடவடிக்கைகளுமே உரிமைகளை வென்றெடுக்கக் கூடியனவென்பது புலனாயிற்று.

திருவாளர்கள் சுப்பிரமணியமும், நல்லையாவும் பதவிகள் பெறாத காலத்தில் மக்கள் பெற்று வந்த பேறுகளை, அவர்கள் பதவி வகித்த காலங்களில் பெற முடியவில்லை. இதை அவர்களே ஒப்புக்கொள்வர்.

56க்கும் 66க்கும் இடையே உள்ள காலப் பகுதியில் சமூக ரீதியில் சலுகைகளைப் பெறும் முயற்சியில் சற்று வெற்றி காண முடிந்ததேயன்றி அந்தச் சலுகைகளால் சமூகக் கொடுமைக்குத் தீர்வு காண முடியவில்லை. இதற்கான காரண காரியங்களைத் தேடிப் பிடிப்பதில் அரசியல் கோட்பாடுகளுக்கூடான முயற்சிகள் நடந்தன. இதன் பிரதிபலிப்பாகவே 57ம் ஆண்டு பாராளுமன்றத்தில் சமூகக் குறைபாடுகள் நீக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது சட்டமாக்கப்பட்டபோது சாதிக் கொடுமைகளிலிருந்து முற்றாக விடுபட இது வழி வகுக்கும் என்று பலரும் நம்பினர். ஆனால் அந்தச் சட்டம் ஒரு பரீட்சார்த்த முன்னறிவித்தல் போலவே நிலப் பிரபுத்துவ கெடுபிடிக்குட்பட்ட அரசு யந்திர சேவையாளர்களின் ஆளுகைக்கு உட்பட்டு தானாக அட்டை போலச் சுருண்டு கொண்டது.

இந்த நிலைமையை நன்கு உணர்ந்துகொண்ட இளம் சந்ததியினர் 1966 அக்டோபர் 21ல் "சாதி ஒழிப்புச் சட்டத்தை அமுல் நடத்து" என்ற சுலோகத்தைத் தூக்கிப் பிடித்து ஆயிரக் கணக்கிற் திரண்டு சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாண நகரத்தை நோக்கிப் புறப்பட்டனர். இவர்கள் மேல் குண்டாந்தடிப் பிரயோகம் செய்யப் பட்டது. பலர் காயமுற்றனர். சிலர் சிறைப் பிடிக்கப் பட்டனர். ஆயினும் திட்டமிட்டபடி ஊர்வலம் நகர்வரை எழுச்சி பொங்க வந்தே சேர்ந்தது!
இந்த ஊர்வலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுடன் என்றுமில்லாத விதத்தில் வேறு சமூகத்தினரும் கலந்து கொண்டனர்.

(கட்டுரையின் முடிப்பில் இங்கே சில வரிகள் முற்றிலும் அழிந்த நிலையில் உள்ளது : உயிர்மெய்) ■




நீ
எதுவித
இதமான
வார்த்தையும் சொல்லாமல்
என்னை விட்டு
உறங்கிய போது
இறப்பின்
தன்மையை உணர்ந்தேன்

நீ
எழுந்து என்னை
காதலிப்பதாகச் சொன்னபோது
வாழ்வின்
இனிமையை உணர்ந்தேன்.

ஆனால் என் காதலே
உன்னைப்பற்றி
நானறிந்தது எதுவுமேயில்லை.

-சகி-
மூலம்: நோர்வேஜிய மொழியில்: Jan Bull

# நான்+நீ=வழிப்போக்கு

*-சின்னக்கண்ணம்மா-*



ஓவியம்:Ole Aasen

தூரம் நெடியது
சுமையும் அதிகம்

உனது
நீண்டநெடும் பயணத்தின் வழியில்
நாம் சந்தித்தோம்
காதல்(?) கொண்டோம்
தூரம் சுருங்கி
சுமை குறைந்ததென்றாய்

என்னை நீ
முத்தமிட்டு விலகி
பிரமித்து நின்றாய்
தரமுயர்ந்த பழரசத்தின்
சுவை தெரிந்ததென்றாய்

உனது
வார்த்தைகள் தந்த பூரிப்பில்
என்னை
முழுவதுமாக பருகத்தந்தேன்

மீண்டும் விலகிச்சென்றாய்
கொஞ்சம் தூரமாகவே

இப்போதுதான் உணர்ந்தேன்
உன்னால்
பாவித்தெறியப்பட்ட
மதுக்கோப்பைதான் நானென்பதை.



# குருடாக்கப்பட்ட விளக்கொன்று பேசுகிறது

*-தமயந்தி-*

உலகம் தன்பாட்டில்
மும்முரமாய் இயங்கிக்கொண்டிருந்தது

வானத்திடலில்
கறுப்பும் வெள்ளையுமாய்
காதலோடு முத்தங்கள்
கலந்துகொண்டிருந்தன முகில்கள்

பகலொளி
உள்ளே விழியெறியாதபடிக்கு
சாத்தப்பட்ட சாரளங்கள்

பகல் தடுக்கப்பட்ட அறைக்குள்
என்விழி திறக்கப்பட்டது

அவர்களிருவரும்
கலப்பற்ற இயற்கையாகி
அழகிய கவிதைகளாய் சமைந்தார்கள்

கவிதைகள்
ஒன்றையொன்று படித்துச் சுவைத்தன

உருகி ரசமான கவிதைகள்
ஒன்றையொன்று பருகித் திளைத்தன

நான்
குறைவிழிப் பார்வைகொண்டு
குலவிச் செத்துக்கொண்டிருந்த
அவர்களை ரசித்தேன்

என்
சின்ன ஒளியிலவர்கள்
பொன்னாய் மின்னினர்

வெண் விரிப்பின் மேனியில்
பொன்னாயுருகிய மாந்தரிருவரும்
கலந்தொன்றாகி
கவின் நிறைந்த நகையாகினர்

ககனத்திடலில் காதலில் கலந்த
கறுப்பு வெள்ளை முகில்களை
காற்று துரத்தியது

எல்லாமே கலைந்து
சாரளம் திறந்து
அறைக்குள் பகல் புகுந்தபோது
எனது விழி அடித்து மூடப்பட்டது

பூட்டிய அறைக்குள்
கனிந்தொழுகி
கரைந்து கலந்த காதலுக்கு
சாட்சியாயிருந்த ஒரேயொரு நானும்
தூசிப்பட்டாளத்தால் மூச்சுமுட்டி சாகும்படிக்கு
மூலைக்குள் இருத்தப்பட்டேன்
அல்லது எறியப்பட்டேன்


வெண்விரிப்பும்
அவர்களை இழந்து வெறுமையானது
காதல்த்துளிகள் சில மட்டும்
இன்னமும் காயாமல்
காதலுடனேயே கிடந்தன
இன்னும் சற்று நேரத்தில்
அவைகூட காய்ந்து
சாட்சியற்றுப் போகலாம்

இப்போ நானும்கூட
ஒரு குருட்டுசாட்சி மட்டுமே.

# மறக்காத மனமுகமாய்...


## கலைச்செல்வன்!

பிரியங்கா
படங்கள்: அசோக்



அழியாத் தோழமையின் 2ம் ஆண்டின் நினைவுகள்

மனித உரிமைச் செயற்பாட்டாளரும் கலை இலக்கிய அரசியல் மாற்றுச் சஞ்சிகையான உயிர் நிழலின் ஸ்தாபகருமான நண்பன் கலைச்செல்வன் அவர்களின் 2ம் ஆண்டு நினைவு நிகழ்வு பாரிசில் 15.07.2007 நடைபெற்றது. தோழரும் கவிஞருமான அருந்ததி அவர்களின் ஆரம்ப உரையோடும் நெறிப்படுத்தலோடும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.



நண்பர்கள் வட்டத்தின் சார்பில் தோழர் கிருபா வரவேற்புரையை நிகழ்தினார். அவர் தன் உரையில்: கலைச்செல்வனைப் பிரிந்து இன்றுடன் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆயினும் அவனது நினைவாக அவனது பதிவுகளும் நினைவுகளும் உயிரின் நிழலும் எம்முடன் வாழ்ந்தாலும் நாம் சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்விலும் எம்மை பிரிந்த தோழர்களின் வெற்றிடத்தையும் வேலைப் பழுவையும் இன்றும் எம்மால் உணரக்கூடியதாகவே உள்ளது. சபாலிங்கம் உமாகாந்தன் கலைச்செல்வன் புஸ்பராஜா என தொடரும் புகலிடப்பட்டியல்....

உண்மையில் இந் நிகழ்வானது கடந்த ஏப்பிரல் மாதம் நடைபெற்றிருக்கவேண்டியது ஆனால் மண்டபம் கிடைக்காமை, குறித்த திகதியில் வேறு நிகழ்ச்சி நடைபெற்றது போன்ற காரணங்களாலும் தள்ளிப்போய்விட்டது. எது எப்படி ஆயினும் நண்பர்கள் வட்டம் என்பது அரசியல் சமூகம் சார்ந்து செயற்படும் அமைப்பு என்பதால் இத் தாமதத்திற்கான தவறுகளையும் எமதாகவே ஏற்றுக்கொள்கிறோம்.

தூர இடங்களில் இருந்தும் குறிப்பாக நேற்றைய யேர்மன் கூட்டத்தில் கலந்துவிட்டு மிகுந்த களைப்புடனும் பொருளாதார சுமைகளுக்கும் மத்தியில் கலைச்செல்வனின் நினைவு நிகழ்வில் கலந்துகொள்ளவேண்டும் என பல நண்பர்கள் வந்துள்ளனர். எனவே கலைச்செல்வனை நினைவு கூறல் என்பது அஞ்சலிக் கூட்டமாக மட்டுமல்லாமல் அரசியல் சமூக பிரச்சனைகளையும் தொட்டுசெல்லும் நிகழ்வாக அமையும். குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் சோனக மக்களின் வாழ்க்கை நிர்மூலமாக்கப்பட்டு ஒவ்வொரு மனிதனின் பின்னாலும் நிழலாய் தொடரும் துப்பாக்கிகளால் வாய் மூடி மௌனிகளாக வறுமையிலும் பட்டினியிலும் அகதிகளாக தெரு ஓரங்களில் மரணிக்கும் எம் மக்களின் உயிர்களை காக்க நாமும் ஏதாவது செய்தே ஆகவேண்டும்.



கலைச்செல்வனும் தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை சமூக அரசியல் பொருளாதார முரண்பாடுகளுக்கெதிராக கலை இலக்கிய தளங்களில் போராடியவன். ஆனாலும் எனக்கு என்மேல் உள்ளதுபோல் அல்லது உங்களுக்கு என் மேல் உள்ளது போல் எனக்கும் கலைச்செல்வன் மீது விமர்சனமுண்டு. ஆனால் கலைச்செல்வன் என்றைக்குமே வன்முறைக்கு ஆதரவாளனாக நின்றதில்லை மாறாக ஜனநாயகத்தை கோரியே தனது குரலை பதிவு செய்து சென்றிருக்கிறான். ஆனாலும் ஒருசில பத்திரிகை வானொலி இணையத் தளத்தை தவிர ஏனைய ஜனநாயக மாற்று இணையத் தளங்கள் என்று கூறிக்கொள்ளும் இணையதளங்கள் எதுவுமே சிறு குறிப்பாகத் தன்னும் இச்செய்தியை பதிவுசெய்யவில்லை.

இவர்களுக்கு கலைச்செல்வன்மீது முரண்பாடா அல்லது நண்பர்கள்வட்டத்தின் மீது முரண்பாடா அல்லது தமிழ்தேசியத்தின் எச்ச சொச்சங்களின் சிபார்சுக் கடிதங்கள் தேவைப்படுகிறதா என அவர்கள்தான் கூறவேண்டும்.

எது எவ்வாறாயினும் கலைச்செல்வனின் நிகழ்ச்சியை பிரசுரித்த ஊடகங்களுக்கு எமது நன்றிகள். தோழர் கிருபாவின் இவ் உரையினைத் தொடர்ந்து கலைச்செல்வனின் நினைவுப் பேருரையான "கனவுகளுக்கு நிறமிருந்தபோது" எனும் தலைப்பிலான உரையை



லண்டனிலிருந்து வருகைதந்திருந்த கவிஞரும் எழுத்தாளருமான நா.சபேசன் நிகழ்த்தினார். புகலிட கலை இலக்கிய அரசியல் தளங்களில் கலைச்செல்வனின் ஆளுமையையும் செயற்பாட்டையும் நினைவு கூர்ந்ததோடு இலங்கை தேசிய இனப்பிரச்சினை தொடர்பான பல்வேறு கேள்விகளோடு தன் உரையை நிறைவு செய்தார்.


இதனைத் தொடர்ந்து இளம் சிறார்கள் தமரா, அருணா



படம்: அசுரா

ஆகியோர்களின் "இசையின் சுதந்திரம்" எனும் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. கலை இசை முயற்சிகள் பரத நாட்டியத்தோடும் கர்நாடக சங்கீதத்தோடும் கழிவதையே பார்த்துப் பழகிய கண்களுக்கு இச் சிறார்களின் இவ் இசை நிகழ்ச்சி வித்தியாசமாகவும் ஆர்வத்தைக் கொடுப்பதாகவும் அமைந்திருந்தது.

இந் நிகழ்வில் நோர்வேயிலிருந்து கலந்து கொண்ட




இளம் ஒளிஓவியக் கலைஞை இலக்கியாவின் "கறுப்பு வெள்ளை" என்ற தலைப்பிடப்பட்ட ஒளியோவியக் கண்காட்சியும் மிகச்சிறப்பாக அமைந்திருந்தது. அத்தோடு இவரின் இசை இடப்பட்ட ஒளியோவியங்களும் திரையிடப்பட்டன. ஒளியோவியக் கலைஞை இலக்கியாவின் இம் முயற்சியும் தேடலும் ஆர்வமும் புகலிட தமிழ் சமுகத்தின் இரண்டாம் தலைமுறையினரின் வித்தியாசமான ஆரோக்கியமான தேர்வையையும் சிந்தனையையும் கூறுவதாக இருந்தது.




அடுத்து இலங்கையின் இனப்பிரச்சினையும் நிரந்தர தீர்வுக்கான வரலாற்றுத் தடங்கல்களும் அது எதிர் கொள்ளும் சவால்களும் எனும் அரசியல் கலந்துரையாடல் இடம்பெற்றது. லண்டனிலிருந்து நிர்மலா இராஜசிங்கம், விஸ்வலிங்கம் சிவலிங்கம், முகம்மது எஸ்.ஆர்.நிஸ்தார், ராகவன், பாலா, கீரன் மற்றும் பேர்லினில் இருந்து சுசீந்திரன் அவர்களும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர். இக் கலந்துரையாடலின்போது பல்வேறு கருத்துக்களும் காரசாரமான விவாதங்களும் விமர்சனங்களும் இடம்பெற்றன. இதில் பேசிய சமுகவியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான முகம்மது எஸ்.ஆர்.நிஸ்தார் அவர்கள் முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும் இலங்கையில் வாழ்கின்ற முஸ்லீம்கள் சோனகர் என்ற இன அடிப்படையில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வது காலத்தின் தேவை என்றும் சிங்கள பேரினவாதம் எப்படி தமிழ் தேசியத்தை அடக்கவோ அழிக்கவோ உரிமை அற்றது அதேபோல் தமிழ் இனவாதம் சோனகர் இனத்தை அடக்கவும் அழிக்கவும் உரிமை அற்றது என்றார். முகம்மது எஸ்.ஆர்.நிஸ்தார் அவர்களின் பேச்சு உணர்வுபூர்வமாகவும் கலந்துரையாடலில் கலந்து கொண்ட "தமிழ் தேசிய பற்றாளர்களின்" மனச் சாட்சியை கேள்விக்கு உள்ளாக்குவதாகவும் அமைந்திருந்தது.

இறுதியாக நண்பர்கள் வட்டத்தின சாபில் தோழர் மோகன் அவர்களின் நன்றி உரையோடு நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

கலைச்செல்வனின் இந்த 2ம் ஆண்டின் நிகழ்வில் கலந்துகொண்ட குறிப்பாக நோர்வே கொலண்ட் ஜேர்மன் லண்டன் போன்ற தூர இடங்களிலிருந்தும் கலந்து கொண்ட நண்பர்களுக்கும் இந் நிகழ்ச்சி சிறப்புற உதவி புரிந்த அனைவருக்கும் நண்பர்கள் வட்டத்தின் சார்பில் தோழர் மோகன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.




சாவைப்பற்றிய பயம்,
வாழ்வைப்பற்றிய பயம்
இவை இரண்மையுமே
துணிச்சலுடன் விரட்டிச் செல்வது,
அல்லது புறக்கணித்துச் செல்வது
அதுவே நமது விளையாட்டு,
அதுவே நமது கலை - வாழ்வு
எல்லாமே.
-கலைச்செல்வன்-



# கறுப்பாகிக் கிடந்த ஈழமண்ணில் புதிதாய் எழுந்து வீழ்ந்த விதை

## வடமராட்சி துன்னாலை மேற்கு சின்னத்தம்பி செல்லையா



*கரவைதாசன்*

யாழ்ப்பாணத்து நிலவுடைமைச் சமூகத்தின் முரண்பாடுகளை விளங்கிக்கொண்டு அச்சமூகத்தில் அசைவியக்கத்தினை ஏற்படுத்திய கருத்துப் பொறிகளில் மாக்சிய வழியில் 1950ம் ஆண்டுகாலப்பகுதிகளில் தோன்றிய அமைப்பாளர்கள்(System Builder) மாதிரிஉருவை வடிவமைத்தவர்கள் (Model Builder ) மார்க்கத்தினை கண்டறிந்தவர்கள் (Pathfinder) வரிசையில் வாழ்ந்து பணி செய்த தோழர்கள் வரிசையில் இந்த ஆண்டில், முதலில் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையைச் சேர்ந்த மா.செல்லத்தம்பி அவர்களை இழந்து தவித்து நின்றபோது மகாசபையைச் சேர்ந்த இன்னொரு தோழர். துன்னாலையைச் சேர்ந்த தலைவர் செல்லையாவையும் இழந்துவிட்டோம் என்ற செய்தி வந்து சேர்ந்தது.

தோழர் செல்லையா அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார். அவர் நிகழ்வுகளை புனைவின்றி பதிவு செய்வதினூடே ஐம்பதுகளில் அடக்கு முறைக்கெதிராக கிளர்ந்தெழுந்த ஒரு சமூகத்தின் வரலாற்றினையும் பதிவு செய்யும் வாய்ப்பு கிட்டுவதை உணர்கிறேன். அன்று ஈழத்திலே ஒரே மொழியை பேசி ஒரே பிரதேசத்தில் ஒரே மாதிரியான வாழ்வை வாழ முடியாமல் தடுத்து, நாகரிகமற்ற முறையில் எங்கள் மண்ணின் மைந்தர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டபோது, கிளர்ந்தெழுந்த வரலாற்றினை பதிவு செய்யும் முயற்சியாகவும் இதனைக் கொள்ளலாம். எனில் எனக்கு எட்டியவரை கிடைத்த தகவல்களின் வழி நான் வாழ்ந்த கிராமத்தில் வாழ்ந்த இவரோடொத்த தோழர்களையும் இவர்களது செயற்பாடுகளையும் ஆவணப்படுத்த நினைக்கிறேன்.

அமரர் சின்னத்தம்பி செல்லையா அவர்கள். ஈழத்தின் வடமராட்சிப் பகுதியில் துன்னாலை மேற்கில் 22-04-1932ல் சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதிகளின் இளைய மகனாகப் பிறந்தார். யாழ் ஞானசாரியார் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய இவர் தொடர்ந்து அரசினரால் நடத்தப்பட்ட பாடசாலை (model school) நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆங்கில மொழிமூலம் தனது இடைநிலைக் கல்வியினை கற்று தேறினார். தனது ஊரைச்சேர்ந்த பூங்கிளி என்ற பெண்ணை வாழ்க்கைத் துணையாகச் சேர்ந்து ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்று ஐவரையும் ஆசிரியைகளாக உருவாக்கியுள்ளார்கள். அமரர் அவர்கள் இடைநிலைக் கல்வியினை கற்று தேறிய காலத்திலேயே வாழைச்சேனை காகிதத்தொழிற்சாலையில் கணக்காளராக வேலைக்கமர்த்தப்பட்டார்.

**சமூகச் சீர்திருத்த எண்ணமும் அடக்குமுறைக்கெதிரான போராட்டச் சிந்தனையும் இவரை கம்யூனிசக் கட்சியிலும் அதனைத் தொடர்ந்து எம்.சி.சுப்பிரமணியம் அவர்களை தலைமையாகக் கொண்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபையிலும் இணைந்து செயற்பட வைத்தது.**

சமூகச் சீர்திருத்த எண்ணமும் அடக்குமுறைக்கெதிரான போராட்டச் சிந்தனையும் இவரை கம்யூனிசக் கட்சியிலும் அதனைத் தொடர்ந்து எம்.சி.சுப்பிரமணியம் அவர்களை தலைமையாகக் கொண்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபையிலும் இணைந்து செயற்பட வைத்தது. வடமராட்சியில் மகாசபையின் கிளையினை அமைத்து செயற்பட்ட தோழர்கள் அமரர்கள் ஆ.ம.செல்லத்துரை, கவிஞர் பசுபதி, மு.செல்வபாக்கியம், கிருஸ்ணபிள்ளை, ஜீ.ஜீ.மகாலிங்கம், முருகேசு, மா.செல்லத்தம்பி, ஆ.குலேந்திரம், வ.சின்னத்தம்பி, ஆ.வன்னியசிங்கம், வீ.எஸ்.சிவபாதம், வ.தங்கமணி, மற்றும் இரகுநாதன், தெணியான், க.இராசரத்தினம் ஆகியோருடன் இணைந்து முன்னணியில் நின்று செயற்பட்டார். மகாசபையின் பொதுக் காரியதரிசியாக சட்டத்தரணி பீ.ஜே. அன்ரனி அவர்கள் இருந்து உழைத்துக் கொண்டிருந்தபோது அமரர் அவர்கள் நிர்வாகக் காரியதரிசியாக இருந்து செயற்பட்டார். அப்போது உத்தியோகமா? சமூகப்பணியா? எனக் கேள்வி எழுந்தபோது உத்தியோகத்தினை விட்டு வந்து சமூகப்பணியிலே முழுவதுமாக ஈடுபட்டார். இப்டியாக இவர் மட்டுமன்றி எம்.சி.சுப்பிரமணியம் எலிபன்ட் கவுசில் பார்த்த உத்தியோகத்தை துறந்தார். கன்பொல்லைக் கிராமத்தினைச் சேர்ந்த வ.தங்கமணி அவர்கள் பொலிஸ் உத்தியோகத்தினை துறந்துவிட்டு இவர்களுடன் சமூகப்பணியில் சேர்ந்து செயற்பட்டார். அது போலவே கன்பொல்லைக் கிராமத்தினைச் சேர்ந்த வீ.எஸ்.சிவபாதம், ஆ.சிவகுரு இருவரும் கூட தாங்கள் அக்குறனையில் வகித்து வந்த பண்டகசாலைப் பொறுப்பாளர் உத்தியோகங்களை விட்டு வந்து (இப்படிப்பலர்) சமூக மாற்றத்திற்காக எழுச்சியுடன் ஈடுபட்டு உழைத்தார்கள்.

அமரர் அவர்கள் 1956ல் பொன்.கந்தையா அவர்களின் தேர்தல் வெற்றிக்காக கிராமம் கிராமமாக சென்று பிரச்சாரக் கூட்டங்களில் ஈடுபட்டார். சிறந்த பேச்சாளரான இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் கனல் பறக்க அரசியல் மேடைகளில் பேசிவந்தார். இவர் போன்ற தோழர்களின் தொடர்ச்சியான உழைப்பு வடக்கு கிழக்கிலிருந்து பாராளுமன்றத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட ஒரே ஒரு பராளுமன்ற உறுப்பினர் தோழர். பொன்.கந்தையா அவர்கள்தான் என்ற வரலாற்றினை உருவாக்கியது.



இதே 1956ல் பீற்றர் கெனமன் வடமராட்சிக்கு வருகை தந்து மாலிசந்தியில் பிரமாண்டமான கூட்டமொன்று நடைபெற்றது. அதனையொட்டி வடமராட்சியில் சயிக்கிள் ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது அதில் பீற்றர் கெனமனும் பங்குபற்றினார். வடமராட்சியின் முன்னணித் தோழர்களுடன் அமரர் தலைவர் செல்லையா அவர்களும் இரண்டிலும் கலந்து கொண்டார். அச்சயிக்கிள் ஊர்வலத்தில் பெண்களும் கலந்துகொண்டிருந்தனர். கன்பொல்லைக் கிராமத்தினைச் சேர்ந்த வீ.எஸ்.சிவபாதம் அவர்களின் சகோதரி லட்சுமி அவர்களும் அவ்வூர்வலத்தில் சேர்ந்திருந்தார். அப்போது வீ.எஸ்.சிவபாதம் அவர்கள் S.S.C படித்துக் கொண்டிருந்த மாணவன். இவர் அடுத்த நாள் பாடசாலைக்கு போகும் வழியில், வட்டவிதானை என அழைக்கப்படும் சாதி வெறியர்களுடைய சண்டியன் சித்தன் என்பவன் (அக்காலங்களில் வட்டவிதானை என அழைக்கப்படும் அரச அதிகாரமற்ற உயர்சாதி கட்டப் பஞ்சாயத்துக்காரர்கள் ஒவ்வொரு வட்டாரத்திலும் இருந்திருக்கிறார்கள்.) வீ.எஸ்.சிவபாதம் அவர்களை வழிமறித்து அவரிடம் அவரது சகோதரியை மிக அவதூறாகப் பேசி அவரை துவரந்தடியால் தாக்கியும் உள்ளார். பதிலுக்கு வீ.எஸ்.சிவபாதம் அவர்கள் அவர் பென்சில் சீவுவதற்காக வைத்திருந்த பேனாக் கத்தியால் சித்தனை தாக்கியுள்ளார். இச்சம்பவமானது அன்று சாதி அதிகாரச் சண்டித்தனத்தினை உசுப்பிய சம்பவமாக அமைந்திருந்தது. அன்று மாலை சிவபாதம் அவர்களுடைய வீடு தீக்கிரை ஆக்கப்பட்டது. சேதியறிந்து எம்.சி அவர்களுடன் அமரர் செல்லையா அவர்களும் அவ்விடம் வந்து தோழைமையுடன் அவர்களுடன் சேர்ந்து எதிர் நடவடிக்கைகளில் செயற்பட்டுள்ளார். கன்பொல்லையின் எல்லையை அண்டி இடைக்குறிச்சியில் வாழ்ந்து வந்த வீ.எஸ்.சிவபாதம் அவர்களது பெற்றோர், குடும்பமாக பாதுகாப்புக் கருதி கன்பொல்லையின் மையப் பகுதிக்கு அவரது பெரிய தகப்பனாரின் காணிக்கு இடம் பெயர்ந்தார்கள். இப்படி பாதுகாப்புக் கருதி இடம் பெயர்ந்த ஒரு சம்பவம் சங்கானை நிச்சாமம் கிராமத்தில் தோழர் மா.நா. முத்தையா அவர்களுக்கும் நேர்ந்தது.

ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் பருத்தித்துறைதொகுதி எம்.பியாக இருந்தபோது, சோல்பரி கொமிசன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தது. அப்போது சாதிக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட கிராமங்களை கொமிசனரை அழைத்துச் சென்று காட்டுவதென சிறுபான்மைத்தமிழர் மகாசபை முடிவெடுத்திருந்தது. ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை.

**வீடு திரும்பும் வழியில் நெல்லியடிச் சந்தியில் வைத்து வி.டி.கணபதிப்பிள்ளை, எம்.சி.சுப்பிரமணியம், டி.ஜேம்ஸ் ஆகிய மூவரும் சாதிவெறியர்களால் நையப்புடைக்கப்பட்டார்களென்பது பல இடங்களில் பதிவாகியுள்ளது.**

இருந்தபோதும் சோல்பரிகொமிசனரை இரகசியமாக அழைத்து வந்து கன்பொல்லைக் கிராமத்தில் எரிந்த வீடுகளை புகைந்துகொண்டிருக்கும் நிலையில் காட்டியுள்ளார்கள். இதற்குப் பின்னணியில் கன்பொல்லைக் கிராமத்தினைச் சேர்ந்த ஆசையண்ண என அழைக்கபடும் தோழர் இராசையா அவர்களும், டி.ஜேம்ஸ், வி.டி.கணபதிப்பிள்ளை, எம்.சி.சுப்பிரமணியம் இருந்தார்கள். கூடவே தலைவர் செல்லையாவும் கன்பொல்லைக் கிராமத்தினைச் சேர்ந்த இன்னொரு சமசமாசத்தோழர் பைரவன்.மாசிலாமணி அவர்களும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. வீடு திரும்பும் வழியில் நெல்லியடிச்சந்தியில் வைத்து வி.டி.கணபதிப்பிள்ளை, எம்.சி.சுப்பிரமணியம், டி.ஜேம்ஸ் ஆகிய மூவரும் சாதிவெறியர்களால் நையப்புடைக்கப்பட்டார்களென்பது பல இடங்களில் பதிவாகியுள்ளது.

பொன்.கந்தையா அவர்களின் காலத்தில் அவர் கல்வி அமைச்சர் டபிள்யூ. தகாநாயக்க அவர்களின் உதவியுடன் சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் அனுசரனையுடன் தமிழ்ப் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பல பாடசாலைகளை உருவாக்கினார். கூடவே உள்ளுராட்சிசபைகளின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவிற்காகப் பாடுபட்டடார். உள்ளுராட்ச்சி சபைகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டனர். அப்போது நெல்லியடி பட்டினசபைத் தேர்தலில் கன்பொல்லைக் கிராமத்தினைச் சேர்ந்த தோழர்.ஆ.சிவகுரு தொடர்ந்து இரண்டு தடவையாக வேட்பாளராக நிறுத்தப்பட்டு நட்சத்திரச் சின்னத்தில் போட்டியிட்டார். முதல்த் தடவை 22வாக்குகள் வித்தியாசத்திலும் இரண்டாவது தடவை பத்திற்குட்டபட்ட வாக்குகள் வித்தியாசத்திலும் அவர் தோல்வியை சந்திக்க நேர்ந்தது. அப்போதெல்லாம் அத்தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் அமரர் செல்லையா அவர்கள் கலந்து கொண்டு தோழர் ஆ.சிவகுரு அவர்களுக்கு ஆதரவு தேடி பேசி வந்துள்ளார். (பின்பொருதடவை கன்பொல்லையைச் சேர்ந்த தோழர்.ஆண்டி.சுந்தரம் அவர்களும் நெல்லியடி பட்டினசபைத் தேர்தலில் போட்டியிட்டார்). சமகாலத்தில் சங்கானைப் பட்டினசபையில் போட்டியிட்ட மான் நா.முத்தையா, பி.நாகலிங்கம், வி.வைரமுத்து, ப.பசுபதி, வல்வெட்டித்துறை , பட்டினசபையில் போட்டியிட்ட தோழர்.திருப்பதி, சுன்னாகம் பட்டினசபையில் போட்டியிட்ட செனட்டர் நாகலிங்கம் ஆகியோர் வெற்றிபெற்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எம்சி.அவர்களின் வலுமிக்க தோழராக அமரர் செல்லையா அவர்கள் விளங்கினார். மகாசபையின் வாலிப முன்னணியில் வடமராட்சியில் ஆசிரியர் ஜி.ஜி.மகாலிங்கம் அவர்களுடன் சேர்ந்து தலைமை தாங்கி முனைப்புடன் செயற்பட்டார். அந்நாட்களில் வடமராட்சிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஏற்படுத்தப்பட்ட எழுச்சி மிக்க சயிக்கிள் ஊர்வலத்தினை ஒழுங்கு செய்து தலைமை தாங்கி நடத்திச் சென்றார். இவ்ஊர்வலத்தில் யாழ்அணி, கரவெட்டிகிழக்குஅணி, பருத்தித்துறைஅணி, துன்னாலைஅணி, மட்டுவில்அணி, மானிப்பாய் அணி, காங்கேசன்துறைஅணி, தீவுஅணி, இமையாணன்அணி, கம்பர்மலைஅணி, என நூற்றுக்கணக்கான அணியினருடன் கன்பொல்லைஅணியும் ஆசிரியர் க.இராசரத்தினம் அவர்களின் முனைப்பில் அணிவகுத்து நின்றது அந்நாட்களின் வரலாறு. இச்சயிக்கிள் ஊர்வலம் சிறப்புற நடந்தேறியமைக்காக அமரர் செல்லையா அவர்கள் அவ்வேளை பெரிதும் பாராட்டிப் பேசப்பட்டார்.

1966 மாசி மாதம் 14ந் திகதி கன்பொல்லைக் கிராமத்தில் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் கல்வி கற்பதை முன் வைத்து ஓர் பாடசாலை (யா/ சிறீநாரதவித்தியாலயம்) க.இராசரத்தினம் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பாடசாலையை நிறுவுவதற்கு நிலத்திற்கு சொந்தமானவர்கள் நிலத்தினை வழங்கி ஒத்துழைத்தபோது ஒருவர் மட்டும் மறுத்து குழப்பம் விளைவித்தார். அவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தலைவர் செல்லையா அவர்களும் கலந்திருந்தார். எப்பொழுதும் பிரச்சினைகள் வரும்போது அதற்கு முகம் கொடுக்கும் அமரர் அவர்கள் குழப்பம் விளைவித்தவரை அணுகி சமாதானம் பேசியுள்ளார். விடயம் முற்றி விவகாரமாகி கைகலப்பு அளவிற்கு போனபோது கன்பொல்லைக் கிராமத்தினைச் சேர்ந்த மு.தவராசா (தவம்) இடையில் தலையிடவே பொலீஸ் வந்து அமரர்.செல்லையா அவர்களையும் தவம் அவர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று தடுத்து வைத்திருந்தது. மறுநாள் எம்.சி.அவர்களும், வ.தங்கமணி அவர்களும் பொலிஸ் நிலையம் சென்று வ.தங்கமணிஅவர்கள் பிணைக்கையெழுத்திட்டு இருவரையும் அழைத்து வந்தார். பின்பு அரசு இப்பாடசாலையை பொறுப்பேற்றபோது இப்பாடசாலையூடாக பன்னிரண்டு சிறுபான்மைத்தமிழர்களுக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. இன்று பத்தாம் வகுப்புவரை இங்கே மாணவர்கள் கல்வி கற்றுவருகிறார்கள்.



கன்பொல்லைக் கிராமமக்கள் தொடர்ச்சியாக

**தொடர்ச்சியாக சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமைஒழிப்பு வெகுசன இயக்கம் முன்னெடுத்த தேனீர்க்கடைப் பிரவேசம், ஆலயப்பிரவேசம் என பஞ்சமர்களின் சமத்துவத்திற்கான அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். ஒரு சமயம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பிரவேசத்தின்போது மண்டையில் பலமாக அடிப்பட்டார். இவரது கிராமத்தினை அண்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள வல்லிபுரக்கோவில் பிரவேசத்தின்போது எம்.சியும், அமரர் அவர்களும், தவயோகம், மற்றும் துன்னாலையை சேர்ந்த C.T.B செல்லையா, அரசடி குழந்தையப்பா, க.இராசரத்தினம் மற்றும் தானும் முன்வரிசையில் கோவிலுக்குள் சென்றபோது எங்களின் வீட்டு அர்ச்சனைத் தட்டைத்தான் எம்.சி வாங்கி முதல் முதலாக அர்ச்சனை செய்வித்தார் என எனது தந்தையார் மு.தவராசா சொல்லி மகிழ்வார்.**

சாதியப்போராட்டத்தினை நடத்திவந்தபோது ஒரு கம்யூனிஸ்ட் என்ற வகையிலும் அனைத்திலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையின் முன்னணி உறுப்பினர் என்ற வகையிலும் தோழமையோடு அவர்களுடன் அமரர் செல்லையா அவர்கள் இணைந்து செயற்பட்டு வந்துள்ளார்.

தொடர்ச்சியாக சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமைஒழிப்பு வெகுசன இயக்கம் முன்னெடுத்த தேனீர்க்கடைப் பிரவேசம், ஆலயப்பிரவேசம் என பஞ்சமர்களின் சமத்துவத்திற்கான அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். ஒரு சமயம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பிரவேசத்தின்போது மண்டையில் பலமாக அடிப்பட்டார். இவரது கிராமத்தினை அண்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள வல்லிபுரக்கோவில் பிரவேசத்தின்போது எம்.சியும், அமரர் அவர்களும், தவயோகம், மற்றும் துன்னாலையை சேர்ந்த C.T.B செல்லையா, அரசடி குழந்தையப்பா, க.இராசரத்தினம் மற்றும் தானும் முன்வரிசையில் கோவிலுக்குள் சென்றபோது எங்களின் வீட்டு அர்ச்சனைத் தட்டைத்தான் எம்.சி வாங்கி முதல் முதலாக அர்ச்சனை செய்வித்தார் என எனது தந்தையார் மு.தவராசா சொல்லி மகிழ்வார். அங்கு கோயில் உள் மண்டபத்தில் துவக்குகள் சாத்தி வைக்கப்பட்டிருந்தை தாங்கள் கண்டதாகவும் கோயில் மணியம் வே.க.வல்லிபுரமும் சில அடியாட்களும் இரண்டாம் மண்டபத்தில் நின்றதாகவும், எம்.சி யின் ஏற்பாட்டில் பொலிசும் ஆமியும் பந்தோஸ்பத்திற்கு வந்து நின்றதாகவும். இருந்தபோதும் தாங்களும் பண்டித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்குள் ஆயுதங்களை கொண்டு போன அதே பாணியில் பொங்கல்ப் பானைக்குள் கைக்குண்டுகளை கொண்டுபோனதாகவும் ஆமி நின்றபடியால் எந்தவித அசம்பாவிதமுமின்றி ஆலயப் பிரவேசம் நடந்ததாகவும் அவர் கூறினார்.

எம்.சி அவர்கள் நியமன எம்பியாக இருந்தபோது அமரர் அவர்கள் சிபார்சு செய்து தனது கிராமத்தில் ஆட்டுப்பட்டிக் குறிச்சியில் சாதிமான் அருமைத்துரை என்பவனுக்கு சொந்தமாயிருந்த எழுபத்தைந்து பரப்பு காணியினை அரசினால் சுவீகரித்து அங்கு வாழ்ந்த பஞ்சமர்களுக்கு உரிமையாக்கினார். சாதியச் சண்டையில் ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த தன் கிராமத்தினைச் சேர்ந்த மாம்பழன், சீனியன் சகோதரர்களை பிரதம மந்திரி சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் பொது மன்னிப்பின் பேரில் விடுதலை வாங்கிக் கொடுத்தார். மேற்கொண்ட காரியங்களுக்காக இவரது உயிருக்கு அச்சுறுத்தல் வந்தபோதும் அதனை துச்சமாக மதித்து எம்.சிக்கூடாக இவற்றை செய்து முடித்தார்.

அமரர் அவர்களின் தொடர்ச்சியான பணிகளினூடே சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் நிர்வாகக் காரியதரிசியாகவும், கட்டைவேலி. நெல்லியடி ப.நோ.கூ.சங்க பணிப்பாளர்சபைத் தலைவராகவும், கட்டைவேலி. உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், பனை அபிவிருத்தி பணிப்பாளர்சபை பணிப்பாளராகவும், கடற்தொழில் அமைச்சின் பணிப்பாளர்சபை உறுப்பினராகவும், பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராவும், சமாதான நீதிவானகவும் பயணித்துள்ளார்.

இவர் போன்ற சமூக விடுதலைப் போராளிகளின் இரத்தம், வியர்வை, சிறைவதைக் கொடுமை இவற்றினூடேதான் இன்றைய ஈழத்தில் வாழும் பஞ்சம இளம் சந்ததி இன்றுவரையுள்ள சமத்துவத்தினை அனுபவிக்கின்றது. இப்போராளிகள் கறுப்பாகிக் கிடந்த ஈழமண்ணில் எழுந்து பழுத்து வீழ்ந்தாலும், எல்லாம் விலகிப்போச்சு என்ற வெறும் தோற்றப்பாடு இருக்கும் வரை, என்றும் புதிய விதைகளே!

*தகவல்: க.இராசரத்தினம், மு.தவராசா(தவம்)*

*துணைநூல்: இலங்கை இடதுசாரி இயக்கத்தின் 50 ஆண்டுகள் சி.கா.செந்திவேல்*

*நந்தா விளக்கு. போ.சிறீபவன்*

# விழிகள்

*-நோர்வே நக்கீரனார்-*




அள்ள அள்ளக் குறையாத அளவுக்கு அளவற்றுத் தேடுவாரற்றுக் கிடக்கிறது நோர்வேயில் அழகு. மாற்றம் என்பது மாறாதது என்ற மாக்சின் தத்துவம் உயிரோட்டமாக இருப்பதே இங்குதான். காலநிலைக்கேற்ப மனிதரின் நிறம், கூந்தல், இயற்கை, சட்டம், குடும்பம் எல்லாமே மாறிக்கொண்டே இருக்கும். தமிழ்ப் பெண்களின் கருங்கூந்தலில் காலங் காலமாகக் கனவுகண்டு கவிதையெழுதிக் களித்துப்போன கவிஞர்கள் இப்போ கலர்க்கூந்தல்களில் கனவுகாணத் தொடங்கிவிட்டார்கள். அழகை இரசிக்க அவலா வேண்டும். கண்ணுக்குக் கட்டுப்பாடு ஏது? காலநிலைகளுக்கேற்ப கலர்களை மாற்றிக் கொள்ளும் நோர்வேஜியப் பெண்களில் கூந்தலும், கண்ணும், கண்களைக் கலக்கி விடுகிறது.

தெருவோரம், மஞ்சள் முடியில் தேவதை ஒருத்தி தரிசனமாகிறாள். ஆகா... எடுப்பான உடை, அதற்கேற்ற நடை, கையில் உயர்சாதி நாய்.

இங்கே நாய்குச் சாதியுண்டு மனிதருக்கில்லை. புண்ணியம் பண்ணிய நாய் என்பதால்தான் இங்கு பிறந்திருக்கிறது. நாயைக் கூட நட்புடனும், அமைதியுடனும், அன்புடனும், பண்புடனும் வாழப் பழக்கி விடுகிறார்கள். இப்போ மனிதர்களை எண்ணிப் பாருங்கள்.

இந்தத் தேவதையின் நீலக்கண்ணில் நீந்தத்துடித்தவர்கள் எத்தனை பேர்? நீந்த இடமின்றி நின்று தவித்தவர்கள், ஏக்கத்தில் அலைந்தவர்கள், எத்தனை... எத்தனை...?

இப்படி எல்லோரையும் ஏமாற்றிய கண்கள் அவளையே ஒருநாள் ஏமாற்றிவிட்டு ஒளியிழந்து போனது. ஆசையுடைய கண்கள் அசைவிழந்தன. இரசாயனப்பரிசோதனை ஒன்றின் போது இரசாயன ஆவி கண்ணின் ஆயுளை அறுத்து விட்டது. இன்று அவளுக்குக் கண்ணாகவும், காவலாகவும், உயிராயும், உறவாயும் இருப்பது அந்த நாய் ஒன்று மட்டும்தான்.

காதலித்தவன் கூட குருடி என்று விட்டு விலகிக் கொண்டான். கண்ணைக் காதலித்தவர்கள் கண்ணிழந்தவளிடம் காமத்தைக் கேட்டனர். கண்ணாயும், காவலாயும் நின்று குரைத்துக் கலைத்து அவளைக் காப்பதும், காப்பாற்றியதும் இந்த நாய்தான். அதை நாய் என்பதா? தாய் என்பதா?

காலை எழுந்து உடை எடுத்துக் கொடுப்பதில் இருந்து, வேலைக்குக் கூட்டிச் சென்று, கூட்டிவந்து, படுக்கவைக்கும் வரை சுறுசுறுப்பாக அன்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் இதை எப்படி நாய் என்பது?

வீட்டில் இருந்து வேலைக்குக் கூட்டிவந்து விட்டுவிட்டு காலடியில் காத்துக்கிடக்கும் இந்நாய்க்கு முன்னால் மனிதநட்பு நயமற்று, நன்றி கெட்டு, பொருளிழந்து கிடக்கிறது. வழியில் பெண்நாய்கண்டால் பார்க்குமே தவிர தன் தோழியை விட்டு ஒரடிகூட அசையாது. தன் இன்பம், துன்பம், காதல், காமம் எல்லாவற்றையும் துறந்து, தன்னை வளர்க்கும் தோழிக்காக ஞானியாக, ஒரு தவவாழ்க்கையை மேற்கொள்ளும் இந்தநாய் நாயா? மனிதனை நாய் என்று திட்டல் தகுமா? இது முறையா? இது தர்மமா?

சிகரெட் பிடிக்கும் பழக்கம் கொண்ட அவள், ஒருநாள் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டே தூங்கிவிட்டாள். படுக்கையறையில் தீப்பற்றிவிட்டது கரியமிலவாயு அறையை நிரப்பியதால் தானாக எழுந்திருக்க முடியாத அவளை ஓடிச்சென்று எழுப்பி வெளியே கொண்டுவந்து விட்டுவிட்டு மீண்டும் வீட்டுக்குள் ஓடியது அந்த நாய். இவள் கத்தினாள், கூப்பிட்டாள், கதறினாள்.

ஷஷபாறு இங்கேவா... நெருப்பு உன்னைக் கொன்றுவிடும். அங்கே போகாதே, போகாதே, போகவேண்டாம் திரும்பிவா?"

வாயில்லாச் ஜீவனால் பதில் சொல்ல முடியுமா? அரைவழி திரும்பி வந்து ஷஷவொவ் வொவ்" என தன் மொழியில் பதிலுரைத்துவிட்டு அவளின் சொல்லைக் கேட்காமல் மீண்டும் வீட்டுக்குள் ஓட முனைகிறது.

இவளுக்கோ ஒன்றும் புரியவில்லை. ஏன் பாரு இன்று முரண்டு பிடிக்கிறான்? ஒருபோதும் சொன்ன சொல்லைத் தட்டுவதில்லையே. தனது விருப்பு வெறுப்பை விட தன் தோழியின் விருப்பு வெறுப்பிலேதானே அதற்கு அக்கறை அதிகம்.

"பாறு என்னுடைய சொல்லைக் கேள். இல்லையென்றால் எனக்குக் கோபம் வரும். வா இங்கே உடனே, உடனே வா"

ஓடிவந்து காலடியில் அமர்ந்து அவள் குளிர்ந்த கைகளையும், முகத்தையும் மாறிமாறி நக்கிய பாறு "உ..உ..உன்...உ உ உ உ" என்று ஊளையிட்டபடி என்னை விட்டு விடுங்கள், எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது என்பது போல் அவசரப்பட்டுக் கொண்டு இருந்தது.

தோழியின் கைகளை உதறிவிட்டு கண்ணிமைக்கும் நேரத்தில் வீட்டுக்குள் ஓடி மறைந்து கொண்டது. இவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கத்தினாள் கதறினாள், கண்ணாயிருக்கும் நாய் அங்கே இருக்க இவளால் என்ன செய்ய முடியும்.

"யாராவது எனது பாறுவைக் காப்பாற்றுங்கள், என் நண்பனை காப்பாற்றுங்கள். அது இல்லையென்றால் எனக்கு ஒன்றுமே இல்லை... தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள்"

"தீயணைப்புப் படை வந்துவிட்டது. நெருப்பை அணைத்துவிடுவார்கள் பயப்படாதே. யாரும் உள்ளே போகக்கூடிய நிலமை இல்லை" என்று பக்கத்தில் நின்றவர் அவளுக்கு ஆறுதல் சொன்னார்.

ஒவ்வொரு நிமிடமும் பாறுவுக்கு என்ன நடந்தது, பாறு எங்கே என்ற கேள்விதான் அவள் மனதில் அடித்துக் கொண்டிருந்தது.

தீ அணைக்கப்பட்டு விட்டது. அவளை வீட்டுக்குள் அழைத்துச் செல்லும்போது வாசலினுள் கால்களில் ஏதோ தட்டுப்பட்டது. அமர்ந்திருந்து குனிந்து தடவிப்பார்த்தாள். அது பாறு...பாறுவேதான். அசைவற்றுக்கிடந்தது. தன்னை நம்பமுடியாமல் மீண்டும் தடவினாள்.. பாறு தன்வாயில் அவளின் சப்பாத்தையும், மேலங்கியையும் கவ்வியபடி விழுந்து கிடந்தது. தொட்டுப்பார்த்து அறியும் அறிவைக் கொள்பவளுக்குப் புரிந்து விட்டது. நாயின் வயிறைத் தொட்டுப்பார்த்தாள் அங்கு அசைவே இல்லை.

வழமையாக வெளியில் போகும்போது உடை, மேலங்கி, சப்பாத்து, கைப்பை போன்றவற்றை பாறுதான் எடுத்துக் கொடுக்கும். கைப்பையை மட்டும் விட்டுவிட்டு மேலங்கியையும், சப்பாத்தையும் எடுத்திருக்கிறது. காரணம் தன் தோழிக்குக் குளிரக்கூடாது என்று யோசித்திருக்கிறது.

தன் தோழியைத் தீயிலிருந்து காப்பாற்றி வெளியே அழைத்து வந்தபின், அவளின் கைகளை நக்கியபோது அவளின் கைகள் குளிந்திருந்தன. தீயிலிருந்து



காப்பாற்றியவளைக் குளிரிலிருந்து காப்பாற்ற எண்ணி இவற்றை எடுப்பதற்காக வீட்டுக்குள் ஓடி வரும் போதுதான் தானியங்கி மூடிக்கொள்ளும் கதவுகளால் அடைபட்டு, கரியமிலவாயுவால் மூச்சுத்திணறி அந்தச் சிறிய உயிர் பிரிந்திருக்கிறது.

அன்றுதான் அவள் தன் கண்களை முதன் முறையாக இழந்தாள். அவளின் கண்களாய், விழிவிளக்காய், வாழ்வுக்காவலாய், தன் வாழ்வு முழுவதும் ஒரு தவசியாய், துறவியாய், வீட்டில் வேலைக்காரனாய், அன்புக்குத் தோழனாய், உறவுக்குப் பெற்றோராய், நல்லுறவாய் வாழ்ந்து முடித்த அந்த நாயின் பிரிவை இவள் எப்படித் தாங்கப்போகிறாள்? இந்த உறவு மீண்டும் கிடைக்குமா? ஒரு மனிதனின் ஒருவருடம் நாயின் 7 வருடங்கள், ஆனால் 70 மனித வருட உறவையல்லவா தந்துவிட்டுப் போகிறது. இதனால்தான் நாயின் வாழ்வுக்காலம் 10-15 மனிதவருடங்கள் என்றும் 70-105 நாய் வருடங்களும் என்றார்களோ?

இவளுக்கு இன்னுமொரு நாய் கிடைக்கலாம், இன்னும் ஆயிரமாயிரம் நாய்கள் கிடைக்கலாம் ஆனால் இந்த நாய் பாறுவுக்கோ இவள் மட்டுமே தோழி. காலப்போக்கில் பாறுவை அவள் மறக்கலாம், ஆனால் பாறு சாகும்போது கூட தன்னை எண்ணாது தன் தோழியான இவளையல்லவா எண்ணிக்கொண்டு இறுதி மூச்சை விட்டிருக்கிறது. இது கடவுளுக்கும் பக்தனுக்கும் இடையிலுள்ள உறவு போன்றது. அவளுக்காகவே தன் வாழ்வை முடித்துக் கொண்ட இந்த நாய் அவளின்மேல் கொண்டது பக்தி என்பதா? பாசம் என்பதா? அன்பு என்பதா? கடமை என்பதா? காதல் என்பதா?

தயவுசெய்து மனிதர்களை நாயே என்று திட்டாதீர்கள். இது நாய்களை அவமானப்படுத்துவதாகிவிடும். ❍

# எனக்கென்ன வந்தது

-பூபகம்பன்-

பரராசசேகரப்பிள்ளையார் மூலஸ்தானத்து நேர்முற்றம்.
மலத்தின் மேல் ஈமொய்க்கும் ஈக்களாய்
மனிதர்கள் கூட்டம்.
சுற்றி நின்று வேடிக்கை....
மும்மலங்கள் கழிக்கும் இடம்தானே கோவில்.

83ன் முற்பகுதி
விடுப்புப்பார்ப்பதே வாழ்க்கையானது.
பிள்ளையாருக்கும் விடுப்புத்தான்.
கோவில்களின் பக்தர்களின்
கஸ்டங்களை, விடுப்புகளைக் கேட்டுவிட்டும் கூட
கல்லாய்த்தானே இருக்கிறார்கள் கடவுளர்கள்.

ஒட்டகச்சிவிங்கியாய் எட்டி நீட்டினேன் தலையை.
கண்ணாமண்டையில் ஓட்டை போட்டு
பைப்பு வைத்துப் பிதுக்கி விட்டாற்போல்
சீறிச் சீறி அடிக்கிறது குருதி.
குற்றுயிரும் குறையுயிருமாய் ஒருவன்.
நீளக்காற்சட்டை, கட்டைச்சேட்டு திடமான உடம்பு.

மகிழ்சியாய் இருந்தது
தமிழ்ஈழம் கிடைக்கும் என்றல்ல
இரத்தத்தைக் கண்டு மயங்கி விழும் நான்
இதைப் பார்க்கும் அளவுக்குப் பழகி விட்டேன் என்று.

பீறிய இரத்தத்தின் வலு அங்குலம் அங்குலமாய்
இடைவெளி அடங்கத் தொடங்கியது.
உடலில் உயிர் இருக்கிறது.
சுற்ற நின்ற இதயங்களில்தான் உயிர் இல்லை.
மன்னிக்கவும்....இதயமே இல்லை

யாராவது கைகொடுங்கள்
ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகலாம்.
பொலிசுக்காவது அறிவியுங்கள்.
கேட்டேன்... உரக்கக் கேட்டேன்..கத்திக்கேட்டேன்
மனிதாபிமானம் இருந்ததினால் கேட்டேன்
உயிருள்ள பிணங்கள் அசையவே இல்லை

பதில்கள் மட்டும் இப்படி
-உனக்கு உவன் யாரெண்டு தெரியுமோ?
வந்தாய், பார்த்தாய், போறாய்
-வீட்டிலை சொல்லிபோட்டே வந்தனி?
-துரோகியைச் சுட்டுப்போட்டுகிடக்கு
நீ தூக்க நிக்கிறாய்
-சிங்களவன் போலை கிடக்குது.
-உவனைக் காப்பாற்றி நீயும் துரோகியாப் போறியே?
-உது பொடியள் சுடேல்லை
அவங்கள் நெத்திப் பொட்டிலை எல்லோ வைக்கிறவங்கள்
-ஓமண்ணை உது மற்ற இயங்கங்கள்தான்
-துரோகி தொலைந்தான்.
-தம்பி விட்டுவிட்டு போய் உன்ரை வேலையைப் பார்.
-உன்னையும் எல்லே போடப்போறாங்கள்
-.......!....?........

வாலை மடக்கி வைத்துக் கொண்டு
நானும் கழன்று விட்டேன் மற்றவர்களைப் போல்.
எனக்கென்ன வந்தது....!

காலக்கரைவில்
இப்படியும் அப்படியுமாய்
இங்கேயும் அங்கேயுமாய்
தெருவெல்லாம் தமிழ் பிணங்கள்
துரோகி என்ற முத்திரைகளுடன்....
கேட்பார் யாருமில்லை
கேட்டவர் எல்லாம் துரோகிதான்
பழகி விட்டதால்
சுற்றி நின்று பார்ப்பாரும் இல்லை.
பார்க்கவே முடியாத நான்
எனகென்ன வந்ததென்று வந்துவிட்டேன்.

புரியவில்லை
இன்னும் புரியவில்லை
இன்றும் புரியவில்லை
துரோகி என்றால் என்ன?

ஈழத்தை எதிர்த்தவன் துரோகி
அண்ணன் தம்பியை எதிர்த்துக் கதைத்தால் துரோகி
காசுவாங்கி ஏமாற்றியவன் துரோகி
கள்ளக்காதலனைக் கண்டு பிடித்தால் துரோகி
உண்மை உளறி துரோகி
கிழக்குப் பறிபோக
யாழ்பாணத்தில் எல்லைச் சண்டையில் துரோகிகள்
முன்பின்னறியா முழுவரும் துரோகிகள்
துரோகிகள் பட்டியல் நீளும்
மனிதம் எப்படி வாழும்?
எனக்கென்ன வந்ததென்று நானும் வந்து விட்டேன்.

துரோகி என்றால் என்ன?
யார் துரோகி?

உண்டகத்துக்கு இரண்டகம் செய்பவன் துரோகி
நம்பிக்கை மோசடி செய்பவன் துரோகி
கூட இருந்து குழிபறிப்பவன் துரோகி
கூட இருந்தே கொல்லுபவன் துரோகி
துரோகிகள் என்றும் கூடவே இருப்பர்
தொடர்பே இல்லாதவன் துரோகியாவதில்லை.
ஓ... தமிழனுக்குத் தமிழன்தான் துரோகி
எதிரி கூட நல்லவனாகி விடுகிறானே.

எனக்கும் ஒரு துரோகி உண்டு.
என் வாய்
உண்மைகளைச் சொல்கிறது.
அடக்கி விட்டேன்
உணவு உண்ண மட்டுமே திறப்பதால்
என் துரோகி ஒழிந்தான்
இனி எனக்கென்ன வந்ததென்று வந்து விட்டேன்

எனக்குப் பிடிப்பதற்கு நண்பர்களே இல்லை
துரோகி எப்படி?

எதிரியை மன்னிக்கலாம்
துரோகியை மன்னிக்கவே கூடாது
துரோகிப் போர் தொடர்கிறது.
குறிக்கோள்கள்....?

துரோகி என்பதன் புதிய வரைவிலக்கணம்
உனக்குப் பிடிக்காத எல்லோரும் துரோகிதான்.
துரோகிப் போர் தொடர்கிறது
வெளிநாடுகளிலும்....

எனக்கென்ன வந்தது
எனது துரோகிதான் ஒழிந்து விட்டானே. ❑



# ஓவியனாகி, பின் எதுவாகி...?

-குட்டியன்-

ஓவியம்:Ole Aasen

நான் ஓவியனல்ல. ஒரு மனித உருவத்தைக்கூட மூக்கு வாய் கண்ணென்று ஒழுங்காக வரைந்தறியேன். கோடற்ற வெள்ளைத் தாளில் ஒருவரி எழுதுவேனாகில், உலகத்து மலைகளிலெல்லாம் ஏறியிறங்கிவருமவை. அதிகாரிக்கோ, அல்லது அம்மாவுக்கோ கடிதம் எழுதுவதற்கும் எனக்கு ஒற்றைறுாள் கொப்பித்தாள் வேண்டும். ஐந்து சென்ரிமீற்ரரில் ஒரு நேர்கோடுதன்னும் வரையமாட்டேன். ஒருநாள், நீயென்னோடிருந்த சில கணத்துளிகளில் மின்னாமல் முழங்காமல் ஓவியனாகினேன். எப்படி...? அது எப்படி நிகழ்ந்ததென்று எனக்குத் தெரியாது, உனக்கும் அதுபற்றி எதுவும் தெரியாதென்கிறாய். எது எப்படியோ, இப்போ நான் ஓவியன். என் விரல்களின் பார்வையை காதலோடு கவ்வி அசைகிறது தூரிகை. அண்ட சராசரங்களும் அதன்மேல் அசையும், அசையாதிருக்கும் அனைத்துமென் வரைபுக்குள் கோடுகளாகிப்போகின்றன. அழுகையைச் சிரிப்பாக்குகிறேன் சிரிப்பை நகைப்பாக்குகிறேன். நகைப்பைத் திகைப்பாக்குகிறேன் திகைப்பை சுவைப்பாக்குகிறேன். இருளை வெளியாக்குகிறேன் வெளியை குளிராக்குகிறேன். குளிரை மலராக்குகிறேன், மலரை போர்வீரனாக்குகிறேன். நித்திரையை சூரியனாக்குகிறேன், சூரியனை அடைமழையாக்குகிறேன். அதையே குடையுமாக்குகிறேன். அடை மழையில் குளிர் காய்கிறேன், நெருப்பால் கண்படுமனைத்தையும் நனைப்பாக்குகிறேன். கடலினலைகளைப் பாத்திகட்டி விதைநிலமாக்குகிறேன், வயலை விமானங்கொண்டுழுது, வைரத்தை நெல்நுனியால் வெட்டுகிறேன். முல்லையில் ஒட்டகம் மேய்த்து, பாலையில் கப்பலோட்டுகிறேன். இன்னும்..., எரிமலைகளெல்லாம் பாடசாலைக்குப் போகின்றன, கோயில்களும் சத்திரங்களும் மாடுகள் மேய்க்கின்றன. சிங்கமும் புலியும் கூடவே யானையும் செபமாலைக்கல் உருட்டுகின்றன, ஒன்றுக்கொன்று தலை வாரி விடுகின்றன.

மனிதரின் மூக்கில் முச்சைகட்டி பட்டம் விட்டு விளையாடுகின்றன கோழிக்குஞ்சுகள். இன்னும் என்னென்னவெல்லாமோ நடந்தேறுகிறதென் சித்திரத்தால்.

மந்திர மாயமோ என்றேன், இந்திர வேகமென்றாய். அது எதுவோ.., ஆனால் என்னோடு நீயிருந்த அந்த சில கணத்துளிகளில் நான் ஓவியனாகிவிட்டேன் என்பது மட்டும் நிசம் .

என்னவாயிற்று..., இப்போ இவையனைத்துக் காரியங்களுக்கும் என்னவாயிற்று...?, எனக்கென்னவாயிற்று...?
இப்போ, நீயென் காதல்மீது கொண்ட வெறுப்பை எதுவாக்கவும் தெரியாமல் நானே திகைப்பாகிப் போனேன்.
பேருந்தில் அருகிருக்கையில் இருப்போருக்கும் நகைப்பாகிப் போனேன். நான் இப்போ எதுவாகிப் போனேன் என்பது உனக்காவது தெரியுமா...?

உனது சிற்றுந்து புதிதாகத் தாலியணிந்து
என்னைக் கடந்து சென்றபோதுதான் புரிந்தது
நீ எதுவாகிப் போனாயென்று. ❍

## தலித் மனித உரிமைகளுக்கான தேசிய முன்னணி (NDHR)



1988ம் வருடம் மனித உரிமை அமைப்புக்களும், தலித் மக்களின் பிரச்சனைகளில் அக்கறை கொண்ட சக்திகளும் ஒன்றிணைந்து 'தலித் மனித உரிமைகளுக்கான தேசிய முன்னணி' (NDHR) ஆரம்பிக்கப்பட்டது.

தலித்துக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை ஆவணப் படுத்துவதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதிலும் NDHR தன்னை ஈடுபடுத்தி வருகிறது. உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் இந்தியாவில் தலித்துக்களுக்கு பெருமளவில் மறுக்கப்படுவதை, மீறப் படுவதை வெளியுலகிற்குத் தெரியப் படுத்துகின்ற நடவடிக்கைகளையும் இந்த முன்னணி மேற்கொண்டு வருகின்றது. தன்னார்வத் தொண்டர்கள் இந்த முன்னணியுடன் இணைந்து செயற்படுகின்றார்கள்.

## Raftos Foundation

பேராசிரியர் தூரொல்வ் ரவ்தூஸ் (Professor Thorolf Raftos Minnepris) ஞாபகார்த்தப் பரிசில் மனித உரிமைகளுக்காக உழைக்கின்ற அமைப்புக்கள், தனி மனிதர்கள், குழுக்கள் போன்றவற்றிற்கு வழங்கப் படுகின்றது. ஒவ்வொரு வருடமும் நவம்பர் முதலாவது ஞாயிற்றுக்கிழமை பேர்கன் நகரிலுள்ள தேசிய அரங்கத்தில் இந்தப் பரிசளிப்பு வைபவம் நடத்தப் படுகின்றது. இதன் ஸ்தாபகரான ஏகில் ரவ்தூஸ் ஒரு பத்திரிகையாளரும் மனித உரிமை வாதியுமாவார். மேலும் அரச திரைப்படத் தேர்வுக் குழுவின் பொறுப்பாளராகவும், பத்திரிகைத் துறையிலும் பணியாற்றி வந்துள்ளார். இவர் 1997இல் தனது 45வது வயதில் காலமாகிவிட்டபோதும், இவர் தனது தந்தையாராகிய பேராசிரியர் Thorolf Raftos அவர்களது ஞாபகார்த்தமாகத் தொடங்கப்பட்ட இந்த நிதியம் இயங்குவதோடு, மேற்படி பரிசிலும் வழங்கப்பட்டு ஊக்குவித்தல் நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

# 2007ம் ஆண்டிற்கான RAFTOS நினைவுப்பரிசு

-ஆர்த்தி-



படம்:SEAN MURRAY

2007ம் ஆண்டிற்கான பேராசிரியர் Rafto ஞாபகார்த்தப்பரிசு இந்தியாவைச் சேர்ந்த தலித் மனித உரிமைகளுக்கான தேசிய முன்னணிக்குக்(NDHR) கிடைத்துள்ளது. அடிப்படையில் எல்லா மனிதர்களும் பிறக்கும்போது சுதந்திரமானவர்களாகவும், மனித மதிப்பீடுகள் கொண்டவர்களாகவும் சகல உரிமைகள் கொண்டவர்களாகவும் உள்ளனர் என்ற அடிப்படையை மறுதலிக்கின்ற சமூக சமயக் கலாச்சாரக் கட்டுமானங்களைக் கொணடு ஒரு சமூகமாக இந்தியா உள்ளது. தலித்துக்களின் உரிமைகளுக்காகவும், அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை வெளியுலகத்திற்குத் தெரியப் படுத்துவதற்கா அவர்கள் மேற்கொண்டுள்ள துணிகரமான முயற்சிகளுக்காகவும் இந்தப் பரிசில் தலித் மனித உரிமைகளுக்கான தேசிய முன்னணிக்கு வழங்கப்படுகிறது.


நோர்வே பேர்கன் நகரில் நவம்பர் 4ம் திகதி நடந்த பரிசளிப்பு வைபவத்தில் உரையாற்றிய தேசிய முன்னணியின் பொதுச்செயலாளர் வின்சன் மனோகரன் ''பத்து வருடங்களாக நாங்கள் மேற்கொண்ட பணிகளின் பெறுபேறுதான் இந்த ஞாபகார்த்தப் பரிசு'' என்று குறிப்பிட்டார்.



அவர் தொடர்ந்த தமதுரையில்:
''எம்மைப் பொறுத்தவரை தேசிய அளவிலும், சர்வதேச ரீதியிலும் ஒரு அங்கீகாரத்தை இது தேடித் தந்துள்ளது. அத்துடன் EU. FN போன்ற சர்வதேச அமைப்புக்கள் எங்கள் பக்கம் திரும்பவும், இந்திய அரசுக்கு எங்களுக்கு எதிராக இழைக்கப் படுகின்ற அநீதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பெரிய அழுத்தத்தைக் கொடுப்பதற்கமுரிய சூழலை இந்த Rafto நினைவுப் பரிசில் அளித்துள்ளது. அத்தோடு எங்களது பணிகளின் அவசியத்தை ஏனைய அமைப்புக்கள் கணக்கிலெடுக்கவும் வழி வகுத்துள்ளது.''

''நான் ஒரு மனிதனாகப் பிறந்தேன். ஒரு மனிதனாக மதிக்கப் படுவதை, நடாத்தப்படுவதையே விரும்புகின்றேன். நான் ஒரு தலித்தாகப் பிறந்ததனால் வேண்டப்படாத ஒரு பிறப்பாக இருக்க விரும்பவில்லை.


எமக்குத் தெரியும், நாங்கள் நீண்டவழி செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். எங்களுக்கு சட்டரீதியான சில சலுகைகள் உரிமைகள் இருக்கின்றன. ஆனால் அவை கணக்கிலெடுக்கப்படாது விடப்படும் போது அவைகளால் கிடைக்கப்படும் சலுகைகள் என்பது மிகவும் சொற்பமானதுதான். நான் இதனை அழுத்திச் சொல்ல விரும்புகின்றேன். தலித்துக்கள் இந்திய சமூகத்தின் பொதி சுமைக்கும் குதிரைகள். உயர்சாதியினர் செய்யமுடியாத, செய்ய விரும்பாத வேலைகளை நாங்கள் செய்கிறோம். ஆனால் நாங்கள் நாய்கள் போலவும், தீண்டத் தகாதவர்களாகவும் இருக்கிறோம்.



இந்த சாதி அமைப்பு என்பது இந்துமதத்தின் அடிப்படையிலிருந்து வந்ததொன்று. ஒரு சமூகத்தின் மக்களைப் பிளவுபடுத்தி ஒரு பகுதியினரை மேலானவர்களாகவும், இன்னொரு பகுதியினரைக் கீழானவர்களாகவும் இந்து சமயத்தின் பெயரால் கட்டமைக்கப் பட்டுள்ளது. பிறப்பின் காரணமாக ஒருவர் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட முடியாதென நான் கருதுகின்றேன்.

இந்தியா ஒரு அதிகப்படியான மக்கள் தொகையைக் கொண்ட ஜனநாயகநாடு. ஆனால் தலித்துக்கள் எவ்வாறு நடத்தப் படுகின்றார்கள் என்பது ஜனநாயகரீதியானதாக இல்லை. எங்களது இலக்கு, நாங்களும் இந்திய சமூகத்தின் ஒரு அங்கமாகவும், பங்காளிகளாகவும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதே. 100கோடி இந்திய சனத்தொகையில் 17கோடி மக்கள் தலித்துக்களாக உள்ளனர். எங்களது பணி இந்த மக்களைச் சிந்திக்க வைப்பதுவும், நாட்டின் சட்ட திட்டத்துக்கமைய எங்களது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளப் போராடுவதும், மிகவும் கீழ்நிலையில் இருக்கும் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை உயர்த்த உழைப்பதுவுமாகும். அந்தவகையில் எங்களது முன்னணிக்குக் கிடைத்துள்ள இந்த பரிசுத்தொகையும், ஊடகரீதியிலான அங்கீகாரமும் எங்களுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்த விடையங்களாகும்.'' என்றார்.

மேலும், அவர் ஊடகங்களுக்குப் பதிலளிக்கையில்:
இந்திய குடியுரிமைச் சட்டமும், மனித உரிமைப் பிரகடனமும் உறுதி செய்த அடிப்படை உரிமைகள் இன்னமும் தலித்துக்களுக்கு மறுக்கப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. தலித்துக்களுக்கெதிரான தொடர்ச்சியான வன்முறைகளையும், தாக்குதல்களையும் (கொலை, பாலியல்வல்லுறவு, குடிமனைகள் அழிக்கப்படுதல், வாழ்விடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப் படுதல்) சுட்டிக்காட்டினார்.



*வின்சன்ட் மனோகரன்*

இந்த Rafto நினைவுப் பரிசிலுக்கு நோர்வேயினால் தலித் மனித உரிமைகளுக்கான தேசிய முன்னணி(NDHR) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்ற செய்தி திரு.வின்சன்ட் மனோகரன் அவர்களுக்குக் கிடைத்தபோது அவர் பீகார் மாநிலத்தில் இருந்ததார். பீகார் மாநிலத்தில் பத்துத் தலித்துக்கள் திருடர்களெனக் குற்றம் சாட்டப்பட்டு படுகொலை செய்யப் பட்டுப் புனித(?) கங்கையில் வீசப்பட்டனர். ஆயினும் அந்தக் கொலையாளிகள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை. இந்த விடயத்தை ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் அழுத்தமாக முன்வைத்தார்.

இந்தப் பரிசளிப்புத் தேர்வையும், நிகழ்வுகளையும், செய்திகளையும் நோர்வேயின் பிரதான பல ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன என்பது குறிப்பிடலுக்கும், கவனத்துக்கும் உரியதுமாகும். ❍


# ரஞ்சினி கவிதைகள்

1.
## கவிஓவியம்.

ரசனையாலான உனது அறையில்
உயிரான
உன் ஓவியங்களுடன்
நானும் நீயும்
நீண்ட நாட்கள் பழகிய உணர்வுடன்,
உன் ஈர்ப்பில் அசைவற்ற என்னை
ஓவியமாக்கி உயிராக்கினாய்
உன்னை நான் கவிதையாக்கினேன்
உன்னால் உனது ஓவியம் அழகா
ஓவியனானதால் நீ அழகா
பிரிக்க முடியவில்லை
இரண்டையுமே.

2.
## ஓ வெனக்கதற...

யாருமற்ற பரந்தவெளி
தேவையாக உள்ளது
வண்ணங்ளும் இடங்களும்
கலந்து அதிர்ந்த
பிரபலமான ஓவியம்போல.........
ஏற்கமுடியவில்லை உன்னால்
என் அறிவின் வேகத்தை
மௌனமாக இருந்தே என்னைக்
கொன்றுவிட்டாய்
நீ தந்த வலிகள் நியாயமற்றவை
அதனால்தான்
இன்னும் வலிக்கிறது
என்காதலே கிறுக்கலில்தான்
கிறுக்கலுக்கும் கவிதைக்கும்
காதல் வருமா என்கிறாய் நீ
புரிதலில் எப்பவும் குழப்பம்தான் எமக்குள்.
என் வாழ்க்கை
கவிதைகளில் ஆராயப்படுகிறது
தடயங்களை நான்
அழிக்காதபோதும்.


ஓவியம்: தமயந்தி

3.

உறவுகள் கண்ணாடி
அருகில் வரத் தயங்குகிறேன்
உடைந்துவிடுமென
கவிதையில் மட்டும் உன்னை
தொடலாம் காயப்படுத்தலாம்
மகிழலாம்
அருகாமைக்கும் எனக்கும்
பொருந்துவதே இல்லை
அதனால் அன்பே
தூரமே எமக்கு அளித்தவரம்

4.
## என் பலம்...

இயற்கையுடன் இன்று நீண்ட உரையாடல்
சூரியனிடம் சொன்னேன் நெருப்பானான்
காற்றுடன் பேசினேன் ஆக்ரோசமானது
மரங்களிடம் பேசினேன் நம்பிக்கை தந்தது
வானத்திடம் பேசினேன் வாரி அணைத்தது
புல்லிடம் பேசினேன் தலை சாய் என்றது
பறவைகள் என்னுடன் பேசிச் சென்றன

பெண்ணென்று பலம் கொள்ள
இயற்கை என்னுடன் கை கோர்த்தது.

நாயின் குட்டி
பெட்டை நாயின் வயிற்றில்
பிறக்குமுன்பே செத்துப்போனது
அல்லது செத்துப்போனபின் பிறந்தது.

பட்டடைக் கோடியில் கிடந்த
சவிகிசிலி இனத்தைச்சேர்ந்த
பஞ்ச (தந்திர, குள்ள) நரிகள்
ஓலக்குரலெடுத்து ஊளையிட்டன
குட்டிநாய் செத்துப்போன துக்கத்திலல்ல,
தங்கள் கோரப்பற்களால் குட்டிநாயை
குதறி தின்ன முடியவில்லையேயென்று

ஆயினும்,
சவமாய்ப்போன நாய்க்குட்டியை
கிழித்துக் கூறுபோட்டு
ஐந்து நரிகளும் சரிசமமாய் பங்கிட்டு
தின்று மகிழ்வதாய் பாவனை செய்து
நிறைவு கொண்டன.

அடக்கம் பண்ணப்பட்ட குட்டிநாயின் சவம்
அடக்க முடியாமல் சிரித்ததில்
சவக்குழியை மூடிக்கிடந்த மண்குவியல்
ஒரு கணம் அதிர்ந்து குலுங்கி தானும் சிரித்தது.

பிற்குறிப்பு: (அல்லது துணைக்குறிப்பு)

சவிகிசிலி இனத்தைச் சேர்ந்த நரிகள் பற்றிய விளக்கக்குறிப்பு:

ச = தந்திரம், குள்ளக்குணம், கோழைத்தனம், புழுகு, துர்நாற்றம், அருவருப்பு.

வி = வஞ்சனை, விகாரம், சந்தர்ப்பவாதம், குழிபறிப்பு.

கி = பாசாங்கு, நடிப்பு, நழுவல்.

சி = விகாரம், நோஞ்சான், வக்கிரம்.

லி = வாய்வீச்சு, பொய், கழிவிரக்கம், வெறி.

இவை உலவுமிடங்கள்: கிறிஸ்ரியானியா பிரதேசம்.

பொதுத்தன்மைகள்:
எங்கே அடி விழுந்தாலும் ஒற்றைக்காலைத் தூக்கி
நாக்கிலிருந்து ஒருவகை வீணியுதிர்க்கும்.

இவைக்குப் பிடித்தமானது: நாய் மாமிசம்.
தாமாய் சுயமாய் வேட்டையாடாது.
வேற்று மிருகங்கள் வேட்டையாடித் தின்றுபோட்ட
மீதியை நாறவைத்துத் தின்னும்.
புலியைப் பிடிக்காததுபோல் பாசாங்கு செய்யும், ஆனால்
புலியின் எச்சிலை மறைவில் வைத்து
ஆசையோடு விரும்பி நக்கும்.

-தமயந்தியின் இரண்டு கவிதைகள்-

எதிரிக்கு எதிரி நண்பனாம்.
தருக்கரீதியாக நியாயங்கள் இருக்கலாம்
பிரச்சனை இப்போ அதுவல்ல
நீ எனக்கு எப்படி எதிரியாக இருக்கமுடியும்...?
போ... சிரிப்புக்காட்டாதே...

முன்னைய நண்பன், இப்போ அது இல்லை
அவ்வளவுதான்.
அதனால்...?, எதிரியாகி விடுவாயாஎன்ன
காலாவதியாகிவிட்ட என் நண்பனே?

எனக்கு எதிரியாயிருக்க
உனக்கு என்னதான் தகுதியிருக்கிறது சொல்.
இல்லையென்பது உனக்கே தெரியும்
ஏனெனில்,
எதிரியாயிருப்பதற்கும்
குறைந்தபட்ச நேர்மையொன்று தேவை.

பயந்து சாகாதே
சேதாரமெதுவும் என்னால் வராது

பெருமையும் கொள்ளாதே
எனக்கு நீ எதிரியென்ற உயர்ந்த பாத்திரத்தை
நானுனக்கு இன்னமும் தரவில்லை
அதை நீ பெறும் வாய்ப்பும் இல்லை.

இப்போ
நமது நட்பின் சுவடுகளை
பக்கம் பக்கமாக புரட்டிப் பார்க்கிறேன்.
உன்னிடமிருந்து
எத்தனை பாசாங்கு...
எத்தனை முகமூடி...
எத்தனையெத்தனை மாறுபாடு
எத்தனை தெற்கு,
எத்தனை மேற்கு...
எத்தனையெத்தனை நரித்தனம்...

மீண்டும் சொல்கிறேன் குறித்துக்கொள்
நீயெனக்கு நண்பனுமல்ல, எதிரியுமல்ல
போய்வா.
மன்னித்துக்கொள்,
போ அப்பாலே.

புத்தக அறிமுகம்

# நந்திபோல் ஒரு இடைமறிப்பு!




பானுபாரதி

புகலிடத் தமிழ்படைப்புலகில் பெண்களின் பிரவேசம் முன்னெப்போதையும் விடவும் அதிகரித்து வருவதைக் காண்கிறோம். கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம், நாடகம், பத்திரிகை, குறும்படம் என கலை இலக்கியத் துறைகளில் பெண்கள் தம் ஆளுமையை நிலைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பெண்களது பிரச்சனைகள் பெண்களாலேயே வெளிக் கொணரப் படுகின்றன. இது பெண்ணியக் கருத்துக்கு வலிமை சேர்ப்பதாகும். இருந்த போதிலும் இன்னமும் மறுபுறத்தில் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளும் தொடர் வரலாறாய் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. பெண்கள் சுதந்திரம்(?) அடைந்து விட்டதாகக் கருதப்படும் ஐரோப்பிய சூழலில் வாழும் எமது பெண்களின் நிலமைகளில் எந்தவித மாறுதலும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. மகள், மனைவி, சகோதரி என்ற நிலைகளிலிருந்து அவள் முகம் கொடுக்கின்ற பிரச்சனைகளும் தொடர்கதையாகவே நீண்டு செல்கின்றன.

தனது அடையாளத்தையும், ஆளுமைகளையும் தொலைத்துவிட்டு, தன்னைச் சூழவுள்ளவர்களுக்காகவும், மற்றவர்களின் நலன்களுக்காகவும், சமூகத்துக்காகவும் தன்னை விட்டுக் கொடுப்பவளாகவும், அனுசரித்துப் போபவளாகவும் இருக்க நிர்ப்பந்திக்கப் படுகிறாள். பொருளாதார ரீதியாக ஆண்களில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை இல்லாத இந்த நாடுகளில்கூட ஆணில் பெண் தங்கியிருக்கத்தான் வேண்டுமென்ற மறைமுக, நேரடி நிர்ப்பந்தங்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன.

இங்கே பெண் உழைப்பவளாக இருந்த போதும் அவளது உழைப்பு கணக்கிலெடுபடாச் சூழ்நிலையும், உழைப்பென்று அங்கீகரிக்கப் படாத நிலையுமே காணப் படுகின்றது. இந்த நாடுகளில் வேலைக்குச் செல்லும் ஒரு பெண் வேலை முடிந்து வீடு திரும்பிய பின்னும் மீண்டும் வீட்டு, குடும்பப் பணிகளை தனது தலையில் சுமந்து நிறைவேற்ற வேண்டியவளாகவே இருக்கிறாள். இது அவளுக்கு மட்டுமே உரிய பணியென்று சமூகத்தால் ஒதுக்கப்பட்டது என்ற கருத்தும் இன்னமும் எமது ஆண்கள் பலரிடத்தில் நிலவத்தான் செய்கின்றது. இங்கே பெண்களுக்கான பணியும், பளுவும் இரட்டிப்பான நிலையே நிலவுகின்றது.

இங்கே மிகவும் அபத்தமான நிலை என்னவென்றால், சமூகப்பார்வை, பெண்ணியம், விடுதலை போன்றவற்றில் ஈடுபாடுள்ளவர்களாய்த் தம்மைக் காட்டிக்கொள்ளும் பலரிடம்கூட இன்னமும் ஆணாதிக்கத்தின் வெளிப்பாடுகள் அறவே அற்றுப்போனதாகத் தெரியவில்லை. பல இடங்களில் சாதாரண ஆண்களைவிடவும் இப்படியானவர்களிடம் ஆதிக்க மனோநிலை மேலோங்கியே காணப் படுகின்றது. தனது மனைவியின் உழைப்பை (அது வீட்டுப் பணிகள் உட்பட) உழைப்பென்று ஏற்றுக்கொள் முடியாத மனோபாவம் உள்ளவர்களையும் நாம் அன்றாடம் கண்கூடாக தரிசித்துக்கொண்டே இருக்கின்றோம்.

பெண்விடுதலை, பெண்ணியம் என்ற கோசங்கள் உயர்த்தப்பட்டும், கலையிலக்கியங்கள், வெளியீடுகள் மூலமாக பெண்களின் பிரச்சனைகள் வெளிக் கொணரப்படுகின்ற போதிலும் பெண்களை ஒருங்கிணைத்து,

ஸ்தாபனமயப் படுத்துவதில் பின்தங்கியே இருக்கின்றோம். பெண்ணொடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டம் சரியான கருத்துருவாக்கத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப் படவில்லை என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். எமது போராட்டம் ஆணாதிக்க சமுதாயத்துக்கு எதிரானதேயொழிய, ஆண்களுக்கு எதிரான போராட்டமில்லை என்று சொல்லிக் கொண்ட போதிலும் ஆணெதிர்ப்புக் கருத்துக்களைப் பிரதிபலிப்பதாகவே எமது அநேக நடைமுறைகள் உள்ளன. இதுவே பெண்ணொடுக்குமுறை உட்பட அனைத்து வகையான சமூக ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக ஆண், பெண் இணைந்து முன்னெடுக்க வேண்டிய போராட்டத்துக்கு பெருந் தடையாய் உள்ளதாகும்.

அதேவேளை பெண்களிவர்கள் எதை எழுதிக் கிழிக்கப் போகிறார்கள் என்ற மிக மட்டமான கருத்தும் முற்போக்குத் தளத்திலுள்ள சில ஆண்களிடம் இருக்கத்தான் செய்கின்றது. இது மிகவும் கண்டிக்க வேண்டிய விடையமாகும்.

எமது இலக்கை நாமே அடைவோம், எமது சுதந்திரத்தை நாமே வென்றெடுப்போம் என சில பெண்ணியவாதிகள் சொல்லிக்கொண்டாலும்கூட, பெண்களின் படைப்புகளைப் பொறுத்தவரை எந்த விமர்சனமோ, மதிப்பீடோ இல்லாமல் பெண்ணின் படைப்பு என்பதால் மட்டும் அதை அப்படியே அங்கீகரிக்க வேண்டும் என்று கோருவதுகூட என்னைப் பொறுத்தவரை ஒரு சலுகைதான். பேரூந்திலும், இன்ன பிற இடங்களிலும் மகளிருக்கு மட்டும் என இந்த ஆணாதிக்க சமூகத்தால் தனியிட சலுகை வழங்கப்படுவதுபோன்றதொரு சலுகைதான் இதுவும். இது சலுகை மட்டுமல்ல, சரியான திசையை நாம் சென்றடையாதபடி நாமே தேடிக்கொள்ளும் தடைகள்தான். எந்தவொரு படைப்பாயிருந்தாலும், அது ஆண் படைப்பாளிகளினதாயிருந்தாலென்ன, பெண் படைப்பாளிகளினதாயிருந்தாலென்ன சரியான கருத்துத் தளத்திலிருந்து விமர்சனத்துக்கு உட்படுத்தாதவரை அந்தப் படைப்புக்கள் சமூக மாற்றத்திற்கான இலக்கை அடையவல்ல எந்தப் பலாபலனையும் தரப்போவதில்லை.

பெண்களின் படைப்புக்களை வரவிடுங்கள், விமர்சனம் என்ற பயங் காட்டாதீர்கள் என்று கேட்டுக் கொள்வதற்கு முன் வைக்கப்படும் காரணம், எழுத வரும் பெண்களோ மிக மிகக் குறைவு, அவர்களையும் எடுத்த எடுப்பிலேயே விமர்சனம் என்ற அச்சத்தை ஊட்டினால் நொந்து ஒதுங்கிக் கொள்வார்கள். முதலில் அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும் என்ற வாதமாகும். இந்தப் போக்கை நாம் தொடர்ந்து இன்னமும் அனுமதிக்க முடியாது. பெண்கள் எதை எழுதினாலும் அங்கீகரிக்கப்படும் என்ற கருத்தாக்கத்தோடு, சமூக மாற்றத்திற்கு எதிரான படைப்புகளையும் உள்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடும், ஏற்பட்டிருக்கிறது. நொந்து ஒதுங்குபவர்கள் ஒதுங்கட்டுமே, அதில் எந்த இழப்புமேயில்லை. தேடல், வாசிப்பு, தெளிவு இருக்குமிடத்து தரமான படைப்புக்கள் வர வாய்ப்பிருக்கின்றது. கருத்துத் தெளிவற்ற ஆயிரம் படைப்புக்கள் வெளிவருவதைவிட, தேடலும், கருத்துத் தெளிவோடும் வெளிக் கொணரப்படும் ஒன்றிரண்டு படைப்புக்களே போதும். அவை தமது காத்திரமான பணியை செவ்வனே செய்யும்.

அப்படியானதொரு விமர்சனத் தளத்திற்கு கவிதாவின் இந்தக் கவிதைகளும் இட்டுச் செல்லப்பட்டு நன்மை பயக்கும் வகையில் புடம்போடப் படும் என்ற நம்பிக்கையோடு அவரது சில கவிதைகள் எனக்குள் தந்த தாக்கத்தை முன்வைத்து வாசகர்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

முதலில் கவிதாவின் படைப்புலகப் பிரவேசம் பற்றி நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அவரது குழந்தைப்பருவம்முதல் நோர்வேயில்தான் நகர்தப் பட்டிருக்கிறது. பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளை எமது மண்ணிலிருந்து அனுபவித்தவரல்ல. ஆனாலும் அவரது கவிதைகளில் தென்படும் பெண்ணொடுக்குமுறை பற்றிய கவிதைகளை நோக்குமிடத்து, இந்தத் தேசத்தில் வளரும் எமது பெண் குழந்தைகள்கூட எமது சமூகக் கட்டுமானங்கள், கலாச்சாரம் என்பதன் பெயரால் திணிக்கப்படும் கருத்துச் சூழலுக்குள்ளும், அதன் தாக்கத்தினுள்ளும்தான் வளர்க்கப் படுகிறார்கள் என்பது தெளிவாகின்றது.

*உருண்டோடும் உலகத்தை*
*தவழ்ந்து, நடந்து*
*துள்ளியோடி*
*எட்டிப்பிடிக்க உன்னிய*
*என் கைகளில்*
*கலாச்சார வளையல்களை மாட்டி*
*வழங்காமல் செய்தனர்.*

என்று புதிதாய்ப் பூக்கவேண்டும் கவிதையில் குறிப்பிடுகின்றார். இந்தக் கவிதையில் புலப்படும் ஒவ்வொரு வரிகளும் பெண்ணொடுக்குமுறையின் கூரிய முனையை எடுத்தியம்புகின்றன. இதேபோல் பட்ட மரம் என்னும் கவிதையில் ஒடுக்குமுறையின் கொடுமைகளை உணர்ந்துகொண்ட ஒரு பெண் தானும் தனது கவிதைகளுமாய் மூலையில் முடங்கிப்போகும்படி நிர்ப்பந்திக்கப்படுவதையும், அதற்கு எதிராக பெண்ணின் உணர்வு எழுச்சி பெறுவதையும்வெளிப்படுத்துகின்றார்.

*தெரிந்ததையெல்லாம்*
*தெளிவாக எழுதிய*
*என் கைகள்*
*புரிந்ததையெல்லாம்*
*புரியாததுபோல்*
*நடப்பதுவே*
*நல்ல பெயர் தருமென்று....*

*மூலையில் முடங்கி*
*முடமாய் போனது*
*என் கைகள் மட்டுமல்ல*
*கவிதைகளும்தான்.*

.....................
.....................

*அடக்கி வைத்த என்*
*உயிர் அணுக்களை உசுப்பி*
*மெது மெதுவாய்*
*பசுமை என்னில்*
*துளிர் விடுவதையும்*
*எல்லைக் கோடுகளைத் துளைத்து*
*கிளைகள் தாண்டிப் படர்வதையும்*
*மகரந்தம் காற்றில்*
*மிதந்து செல்வதையும்*
*மொட்டுக்கள் விரிவதையும்*
*நான் ரசித்துக் கொண்டேன்.*

பெண்தான் கருவைச் சுமக்க வேண்டும் என்பது இயற்கை. அதை ஆணை சும என்று கேட்க முடியாது. அதேவேளை கருத்தடை அறுவைச் சிகிச்சையை ஆண்கள் செய்யக் கூடிய சூழலும், வசதியும் இருந்தும்கூட அதனையும் பெண்களே செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இருந்து கொண்டிருப்பது என்பது எந்த வகையிலும் பெண்ணின் உடலியல் சார்ந்த துன்பங்களில்கூட ஆண் பங்கெடுக்க தயாரில்லை என்பதையே வெளிப் படுத்துகின்றது. இதனை மிக எளிதாக கருக்கலைப்பு என்னும் கவிதையில்புலப்படு த்துகிறார்.

*நான்காம் முறையாய்*
*கருவுற்ற போதும்*
*கலைத்துவிட்டு*
*சோர்ந்த*
*உடலுடன்*
*கணவனுக்காய்க்*
*காத்திருந்தேன்*
..........................
..........................

*கருக் கலைப்புக்கள்*
*போதும் கண்ணே*
*நீயே போய்*
*கருத் தடையையும் செய்துவிடு.*
..............

பெண்ணியக் கருத்துக்களோடு மட்டும் நின்றுவிடாது சமுகத்திலுள்ள பன்முகப்பட்ட பிரச்சனைகள் பற்றியும் தனது கவிதைகளினூடாக பேச வருகிறார் கவிதா. தனக்கு மிகவும் அந்நியமாகிப்போன ஒரு சூழலில் தனது கனவுகளைத் தொலைத்து விட்டு வாழ்க்கைக்காகப் போராடும் ஒவ்வொருவரினதும் கனவுகள் கனவுகளாகவே தொலைந்து போகும் அவலத்தை புலம்பெயர்ந்த எமது சமுகத்தில் தரிசிக்கின்றோம். இதனை

*விடிவுகள்.........*
*இருள் வலைக்குள் சிக்குண்டன.*
*ஆதவனும் தொலைந்த*
*நாட்களிது.*
*வெறும் நிழல்களே இங்கு மீதம்*
.............................

*என் சோகத்துடன் பங்கெடுத்து*
*பனிக் கட்டிகளும் கண்ணீராகும்*
*இந் நள்ளிரவில்*
*நீராகிக் கரை தேடும்*
*என் கானல்கனவுகள்*

என கரை தேடும் கனவுகள் என்ற கவிதையில் கூறுகின்றார்.

இன்னமும் இலங்கைத் தீவில் எரிந்துகொண்டிருக்கும் தேசிய இனப் பிரச்சனை.
ஐக்கிய இலங்கைக்குள் எல்லா இனங்களும் சேர்ந்து வாழ்வதா, பிரிந்து வாழ்வதா என்பது இன்று சர்ச்சைக்குரிய கேள்விதான். பெரும்பான்மை மக்களுடன் இணைந்து வாழ முடியாதென்ற முடிவில் நின்றே ஈழவிடுதலைப் போர் ஆயுதப் போராட்டமாய்ப் பரிணமித்தது. இன்றைய கால கட்டத்தில் தனித் தேசிய இனமாய்பிரிந்து போவதென்பது சரியான தீர்வுதானா, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணமுடியாதா என்ற வாதப் பிரதிவாதங்கள் எழுந்தவண்ணம் இருக்கின்றன.

இன்னமும் முடிந்தபாடின்றிக் கிடக்கும் இந்தப் பிரச்சனை. இரு தாய்க்கு ஒரு குழந்தை என்று மன்னன் சாலமோன் தீர்ப்புக் கூறிய வழக்கை இங்கே இரு குழந்தைக்கு ஒரு தாய் என்று மறு பக்கமாய் முன்வைத்து விசனப்படுகின்றார் தீர்ப்பு என்னும் கவிதையினூடாக.

*தாயை.....*
*வெட்டென்கிறது ஒரு குழந்தை*
*வெட்டவும் விட மாட்டேன்*
*கொடுக்கவும் மாட்டேன்*
*என்கிறது ஒரு குழந்தை*

*ஒரு குழந்தைக்கும்*
*இரு தாய்மார்களுக்கும்*
*தீர்ப்புச் சொன்ன*
*சாலமா...*
*எழுந்து வா!*
.......

இயற்கையை இரசித்தும், நேசித்தும், அவற்றை மனித வாழ்வோடும், அவலங்களோடும், மகிழ்வோடும் உவமானமாய் எடுத்தியம்பவல்ல படைப்பாளியாய் பல கவிதைகளில் கவிதாவின் ஆற்றலை தரிசிக்க முடிகின்றது. அவற்றிற் சில....

*இலையுதிர் காலம்*

*மழையின்*
*தொடுதலிலும்,*
*காற்றின் மெட்டுகளுக்கு*

*இலைகள்*
*கூத்தாடுவதையும்*
*நீங்கள் ரசிக்கவில்லை?*

*என்றும்,*

*என் தேசம்*

*காதலுண்ட*
*கடல் வண்டுகள்*
*ஓயாது இசையமைக்கும்*
*தேன்துளியொத்தது*
*என் தேசம்.*

இப்படி பல வரிகளைத் தொட்டுச் சொல்லக்கூடியதாயுள்ளது.
கவிதாவின் நேர்த்தியான படிமங்களுக்கு இன்னொரு கவிதை சந்ததிகள் என்ற கவிதையாகும். இதன் அழகியலை மீண்டும் மீண்டும் என்னுள் சுவைத்துக் கொண்டேன்.

மனிதத்தைத் கொன்றொழித்துக்கொண்டிருக்கும் சுடுகுழல் மீதான வெறுப்பையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்தும் இரு கவிதைகள்.

*எதைப் பற்றியும்*
*சிந்தையில்லை.*
*இதன் இருதயம்*
*இரும்பு.*

*வெடிக்கவும்,*
*உயிர் பிரிக்கவும்*
*மட்டுமே*
*பழக்கப் பட்டது.*

*என்று துப்பாக்கி என்ற கவிதையிலும்,*

*துப்பாக்கியைத் தூர எறிந்த*
*எனது கைகள்...*
*எழுதுகோலைக் கம்பீரமாய்க்*
*கையில் எடுத்தது.*

என்று ஆயுத எழுத்து என்ற கவிதையிலும் சிலாகித்துச் செல்கிறார்.

இழப்புக்கள் கனமானவை. கொடூரமானவை. அதிலும் விடுதலைக் காற்றை எமது மண்ணும் மக்களும் நுகரவேண்மென்ற அர்ப்பணிப்போடு புறப்பட்ட போராளிகளை அதிகார மோகம் கொண்டு, நமக்குள் நாமே சகோதர வன்மம் தீர்த்துக் கொண்டதால் ஏற்பட்ட படுகொலைகளும், இழப்புகளும் சகித்துக் கொள்ளக்கூடியதல்ல. அப்படியானதொரு அபத்தமான இழப்புக்கு தனது தந்தையைப் பலி கொடுத்த கவிதாவின் இழப்பு ஈடு செய்ய முடியாததுதான். வெளிப்படையாய் இல்லையெனினும் இந்த இழப்பின் சோகத்தையும், அந்த போராளித் தந்தையின் விடுதலைவிதையாக தான் துளிர்த்து நிமிர்வதையும் திடமுடன் கூறுகின்றார் தொலைந்து போன உறவொன்று என்ற கவிதையில். இந்தக் கவிதையின் படிமங்களும், அழகியலும் மிக நேர்த்தியான வாசமொன்றை விதைத்துச் செல்வதை அனுபவிக்க முடிகின்றது.


*புல்லின் கீழ்*
*மீதமிருக்கும் பனித்துளியாய்*
*நானிருக்க*
*அதிகாலைக் கதிரவனாய்*
*என்னை*
*தட்டியெழுப்பும்*
*உன் நினைவுக் கதிர்கள்*


................................


*உன் விடுதலைக் கனவின்*
*விம்பங்களில்*
*வேர் படர்த்தி*
*விறைத்து நிற்கும்*
*விழுது நான்.*

"விமர்சனங்களே என்னை சிறந்த சிற்பியாக்கும்" என தனது முகவரியில் கவிதா கேட்டுக் கொண்டிருக்கிறார். ஆக்கபூர்வமாய் முன்வைக்கப்படும் விமர்சனங்களை சிரத்தையிலெடுத்து, கவிதைப் படைப்புலகில் சிறந்த சிற்பியாக முன்னேறுவாரென்ற நம்பிக்கையோடும்
தோழமையோடும்
○

கிடைக்கப்பெற்றோம்.
**ஊடறு** வெளியீடாக
வெளிவந்திருக்கும்
இரண்டு கவிதைத்
தெகுப்புக்கள்.







காலத்தின் தேவை கருதி ஒரு மறுபிரசுரம்

# தமிழன் என்று சொல்வது வெட்டிப் பெருமை

-ஆதவன் தீட்சண்யா-

நேர்காணல்: மினர்வா, நந்தன்
keetru.com

தன்னுடைய எழுத்து, இயக்கம் எல்லாம் மக்களுக்காகவே என்று இயங்கும் தமிழ் படைப்பாளிகளில் மிக முக்கியமானவர் ஆதவன் தீட்சண்யா. 'புறத்திலிருந்து' 'பூஜ்யத்திலிருந்து துவங்கும் ஆட்டம்' 'தந்துகி' என்னும் மூன்று கவிதை நூல்களையும், 'எழுத வேண்டிய நாட்குறிப்பின் கடைசி பக்கங்கள்' எனும் சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். கட்டுரையாக எழுத வேண்டிய ஒரு செய்தியை சிறுகதையாக எழுதுவதும், ஒரு நாவலுக்கான கருப்பொருளை ஒரு கவிதையில் பொருத்திச் செல்வதும், எழுத்தில் புதுப்புது வடிவங்களைப் பழகுவதும் ஆதவனுக்குக் கைவந்த கலை. 'புதுவிசை' இதழின் ஆசிரியராகவும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாநிலத் துணைச் செயலாளராகவும் செயற்படுகிறார்.

தோழர் ஆதவன் தீட்சண்யாவின் இந்த நேர்காணலின் தற்கால முக்கியத்துவம் கருதியும், உயிர்மெய் வாசகர்களுக்காகவும் மறுபிரசுரம் செய்ய நினைத்தோம். மிக நீண்டதும், பல பக்கங்களைக் கொண்டதுமான நேர்காணல் என்பதால் சில முக்கியமான பகுதிகளை மட்டும் பிரசுரிக்க எண்ணினால் எதைத் தவிர்ப்பது என்ற சங்கடம். ஆயினும் ஓரளவு தெரிவு செய்யப்பட்ட பகுதிகளை மட்டும் இங்கு தருகின்றோம். பூரண நேர்காணலையும் keetru.com இணையத்தளம் சென்று வாசகர்கள் வாசிக்கலாம்.

***ஒரு படைப்பாளி தனது படைப்பில் என்ன சொல்கிறாரோ, அதற்கு நேர்மையாக வாழ முடிகிறதா? அதற்கான சூழல் இங்கு இருக்கிறதா?***

எதை எழுதுகிறார்கள் என்பதைப் பொறுத்தது அது. ஒருவரது மனக் கிளர்ச்சிகள், அனுபவங்கள்தான் எழுத்தாகிறது. இந்த அனுபவங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையாகக் கிடைப்பதற்கு காரணமாக இந்தியச் சமூகத்தில் சாதியும் பாலினமுமே இருக்கிறது. எனவே எழுதும்போது அவர் தனக்கான அடையாளங்களை நிராகரித்துவிட்டு எழுதுகிறாரா அல்லது புது அடையாளங்களை உருவாக்கிக்கொண்டு எழுதுகிறாரா, பிறப்பின் அடிப்படையில் தன்மீது சுமத்தப்பட்டிருக்கிற அடையாளங்கள் பற்றி அவருக்கு என்ன மதிப்பீடு இருக்கிறது என்பதெல்லாம் படைப்புக்குள் வந்துவிடுகிறது. அதை அவரால் மறைக்க முடியாது. அதனால் "தான்" என்று எழுதும்போது அவர் தன்னை மட்டும் குறிப்பிடுகிறாரா அல்லது தான் சார்ந்த சமூகப் பிரிவையும் குறிக்கிறாரா என்பதைப் பார்க்க வேண்டியுள்ளது.

ஒரு குறிப்பிட்ட சமூகப்பிரிவை முன்நிறுத்தி "தான்" என்று எழுதுகிற எழுத்தாளர்களும் இருக்கிறார்கள். சாகும்வரை தனிநபராகிய தன்னை மட்டுமே முன்நிறுத்தி எழுதுகிறவர்களும் இருக்கிறார்கள். சொந்த அடையாளங்களைக் கொண்டாடுவது அல்லது மறைப்பது/திறப்பது என்ற எதிரெதிர் நிலைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து வாழ்வதற்கு விதிக்கப்பட்ட ஒரு சமூகத்தில் கலை இலக்கியவாதி மட்டும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது.

இரண்டு விஷயங்களை இந்த இடத்தில் குறிப்பிடலாமென்று நினைக்கிறேன். சமீபத்திய தீராநதி இதழில் நாகார்ஜுனனின் நேர்காணல் வெளியாகியிருந்தது. அதில் அவர் "என் அம்மா ஜெயகாந்தன் எழுத்தை விரும்பிப் படிப்பவர், என் தாத்தா வள்ளலாரைக் கரைத்துக் குடித்தவர், என் மாமா இன்னின்னாரோடு தொடர்புடையவர்" என்பதாகவெல்லாம் குறிப்பிட்டிருந்தார். அவரது வாசிப்பு, சிந்தனை, எழுத்து முயற்சிகளுக்கு ஒரு பாரம்பரிய வேர் இருப்பதை

நிறுவியிருந்தார். ஒரு வகையில் கருவிலே திருவுடையோனாகக் காட்டிக் கொள்ளும் முயற்சியும் இயல்பாக வந்து விடுகிறது. அதாவது, நாகார்ஜுனன் தன் அம்மா, தாத்தா, மாமாவின் தோள்மீது ஏறிநின்று பேசிக்கொண்டிருக்கிறார். நாங்கள் இப்பேர்ப்பட்ட பரம்பரையாக்கும் என்கிற கித்தாப்பு அவரையறியாமலே வெளிப்படுகிறது.



அதே இதழில் ஜீவசுந்தரி எழுதி பரிசல் வெளியீடாக வந்திருக்கும் மூவலூர் ராமாமிர்தத்தின் வாழ்க்கை வரலாறு நூலுக்கான விமர்சனமும் வெளியாகியிருக்கிறது. தன் காலத்தின் கலகக்காரராக வாழ்ந்த அவரது வாழ்க்கை இன்றைக்கும் பெரும் படிப்பினைகளைத் தரும் விதத்தில் ஜீவசுந்தரி எழுதியிருக்கிறார். ஆனால், "தமது முன்னோர்கள் தேவதாசிகளாக இருந்தனர், தங்களது குலப்பெருமை கொண்டாடத் தக்கதாக இல்லை" என்பதால் வெளியான புத்தகப் பிரதிகள் மொத்தத்தையும் ராமாமிர்தம் அம்மையாரின் தற்போதைய வம்சாவளியினர் வாங்கி விட்டதாகச் சொல்லப் படுகிறது. இப்போ விற்பனைக்குக் கிடைப்பது அவர்களால் திருத்தித் தரப்பட்ட பதிப்புதான். அவலமான தங்களது முன்னோரின் வாழ்க்கை இந்த சமூகத்தோடு பகிர்ந்துகொள்ளத் தக்கதல்ல என்கிற ஒரு அவமானவுணர்வு அவர்களை இந்த முடிவுக்கு இட்டுச் சென்றிருக்கிறது.

இதில் அவர்களின் தனிப்பட்ட அவமானம் எதுவுமில்லை. இந்த சமூகம் அவாமானப்படவேண்டிய விஷயம் அது. புத்தகத்தை மொத்தமாக விலை கொடுத்து வாங்கியதன்மூலம் இந்தத் தலைமுறை தன்னுடைய வேர்களை மறைத்துக்கொள்ள விரும்புகிறது. அதேசமயம் நாகார்ஜுனன் தன்னுடைய வேர்களின் பிரபல்யத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறார். அதை அகங்காரமாக அல்ல, வெகு இயல்பாகச் சொல்கிறார். அவர் பேசுவதிலிருந்து நாங்கள் கல்வி கற்ற தலைமுறையைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறார். அவர் சொல்லாமல் விட்ட விஷயம் என் அம்மாவும் தாத்தாவும் கல்வி கற்ற அதே நேரத்தில் யாரெல்லாம் கல்வி கற்கவில்லை என்பதைத்தான். இவர்களுக்குக் கல்வி கிடைக்கக் காரணமாயிருந்த அதே சாதிதான் மற்றவர்களுக்குக் கல்வி கிடைக்காமல்ப் போவதற்கும் காரணமாய் இருந்திருக்கிறது. மூவலூர் ராமாமிருதத்தின் வாழ்க்கை உள்ளது உள்ளபடியே புத்தகமாக வெளிவருவதை அவரது இன்றைய தலைமுறை அவமானமாகக் கருதுவதற்கும், அவர்களுடைய முன்னோர்கள் பட்ட கஷ்டங்கள் அனைத்துக்கும் சாதிதான் காரணமாக இருந்திருக்கிறது.

நாகார்ஜுனன் உலக அரசியல் விஷயங்கள் குறித்துப் பேசினாலும் அவர் சாதியின் தோள்மீது நின்றுதான் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் "தான்" என்றும், தன் அனுபவம் என்றும் பேசியது தன்னுடைய சாதி கொடுத்த அறிவைத்தான். நாகார்ஜுனன் தான் எழுதியதற்கு நேர்மையாக இருக்கிறார் என்றால் இந்த இடத்தில் எது நேர்மை என்ற கேள்வி வருகிறது. அதேபோல் ராமாமிருதம் அம்மையாரின் வாழ்க்கை வரலாறு வெளிவருவதைக்கூட மறைக்க விரும்புவதால் அவரது சந்ததியினரின் செயல் நேர்மையற்றதாகி விடாது.

***பொதுவாகவே தலித் எழுத்தாளர்களின் எழுத்துக்களில் வலியும் வேதனையும் கழிவிரக்கமுமே நிரம்பியிருப்பதாகச் சொல்லப் படுவதுண்டு. இதிலிருந்து மாறுபட்டு மிகுந்த கோபத்தோடு தனித்து ஒலிக்கிற குரல் உங்களுடையது. மற்றவர்கள் வலியை மட்டுமே கூறும்போது, வலிப்பதற்கான காரணத்தைக் கூறுவது உங்களது எழுத்து. பிற தலித் எழுத்தாளர்களிலிருந்து நீங்கள் வேறுபட ஆரம்பித்தது எப்போது?***

தலித் இலக்கியம் என்று ஒன்று தனியாகத் தோன்றுவதற்குக் காரணமே, "இதுவரை நீ எழுதிய எந்த இலக்கியத்திலும் என்னைப்பற்றி எதுவும் எழுதவில்லை" என்பதுதானே. இதில் அனைவருமே கோபத்தோடுதான் எதிர்ப்பக்குரல் எழுப்பியிருக்கிறார்கள். "என்னுடைய சேரிக்கு நீ வந்தது கிடையாது, உன் தெருவுக்குள் என்னை நுழையவிட்டதில்லை. நான் உன் தொழுவத்தில், உன் பண்ணையில் வேலை செய்த நேரம் போக என்னுடைய வாழ்க்கை என்ன, என்னுடைய கஷ்டங்கள் என்ன, என்னுடைய கொண்டாட்டங்கள், நம்பிக்கைகள் என்னென்ன என்று எதுவும் உனக்குத் தெரியாது. அப்படியிருக்கும்போது என்னைப்பற்றி நீ எழுதுவதாகச் சொல்வது வெறும் பம்மாத்து. அதில் எந்த நேர்மையும் கிடையாது. உனக்குத் தெரிந்ததை நீ எழுதிக்கொள். என் வாழ்க்கையை நான் எழுதிக் கொள்கிறேன்" என்ற மீறலில்தான் தலித் இலக்கியமே வருகிறது.

தலித் எழுத்துக்கள் எல்லாமே இப்படியிப்படித்தான் இருக்கும் என்று பொத்தாம்பொதுவாக வகைப்படுத்திவிட முடியாது. நிலவும் சமூக அமைப்பு எல்லா மட்டத்திலும் ஏற்றத்தாழ்வைக் கடைப்பிடிக்கிறது. சகமனிதனை ஒருபோதும் சமமாய்ப் பார்க்க அனுமதிக்காத அதன் அடிப்படை சாதியத்திற்குள் புதைந்து கிடக்கிறது. சமத்துவமின்மையை நியாயப் படுத்துவதாக சாதியடுக்கு அமைந்திருக்கிறது. இதை அம்பேத்கார் பன்மப் படிநிலை அடுக்கு என்கிறார்.

இந்த அடுக்கு குலையாமல் நீடிக்க ஒடுக்குமுறை கையாளப்படுகிறது. ஒரு தளத்திலோ ஒரு முனையிலோ இல்லாமல் ஒடுக்கு முறைஙகறது அரசியல், பண்பாடு, பொருளாதாரம், கலை, இலக்கியம்னு வாழ்க்கையோட எல்லா மட்டத்திலும் நிலவுது. நுட்பமாகவும், வெளிப்படையாகவும் பல்வேறு வடிவங்களில் நிலவுகிற சாதியடுக்கு முறையைப் புரிந்து கொள்வது, அதிலிருந்து விடுபடுறதுக்கு எத்தனிப்பது, அதை கலை இலக்கியப் படைப்பாக மாற்றி சமூகத்தின் மனசாட்சியோடு உரையாட வைப்பது- இதுதான் இப்ப தலித் படைப்பாளிகளோட முன்னுரிமைக் களம். இதுபற்றி ஒருவருக்கு என்ன புரிதல் இருக்கிறதோ அதைப் பொறுத்து அவரோட படைப்புகள் வரும். அதுவுமில்லாம, ஒருத்தர் என்னவாக இருக்கிறாரோ அதுவாகத்தானே வெளிப்பட முடியும்?

போன தலைமுறை வரைக்கும் இந்த வாழ்க்கையை சகித்துக்கொண்டுதானே வாழ்ந்தது? தங்களைத் துன்புறுத்தவும் அவமதிக்கவும் அவனுக்கு சலுகை இருக்கிறது என்றுதானே நினைத்திருந்தது? ஆனால் எல்லாக் கொடுமைகளையும் ஏத்துக்கிட்டதா அதுக்கு அர்த்தமில்ல. தனக்கு வலிப்பதை வெளியே சொல்வதற்கே இன்னொருத்தர்கிட்ட அனுமதி வாங்கவேண்டியிருந்த ஒரு சூழ்நிலையில் தன்னோட வலியை வெளியே சொல்வதே ஒரு மீறல்தானே? என்னை யார் அடித்தது, அதற்கு யார் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது, என்னை அடித்தால் நானும் திருப்பி அடிப்பேன் என்பதெல்லாம் அதற்கு அடுத்த குரல்தான்.

"யார் என் முகத்தின் மீது சிறுநீர் கழித்தது, யார் நான் வாழ்வதற்கான நிலத்தைப் பறித்தது, யார் நான் இறந்த பின்னரும் என் சுடுகாட்டை மறித்தது, யார் என் வீட்டுப் பெண்களை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கியது" என எல்லாமே தெரிந்திருக்கும்தான். ஆனால் அதை எழுதுவதற்கு அக எழுச்சி மட்டும் போதாது, புறச்சூழ்நிலையும் சாதகமாக இருக்க வேண்டும். அல்லது என் புறச்சூழலை அக எழுச்சியோடு இணைத்துக் கொள்ள வேண்டும். இடையறாத ஒரு processல் தான் நடைபெறும்.

உதாரணத்துக்கு திண்ணியம் கொடுமை. "எப்பேர்ப்பட்ட மாண்பும் நாகரீகமும் நிறைந்த சமூகமாயிருக்கிறது இது"ங்கிறதை வெட்டவெளிச்சமாய் அம்பலப்படுத்திய கொடுமை அது. இப்படிப்பட்ட கொடுமைகளை நிகழ்த்துறது மூலமா தன்னோட கீழ்மைகளை இந்த சமூகம் வெளிப்படுத்திக்கிட்டே இருக்கு. எனவே "எனக்கு இந்தக் கொடுமைகள் நடைபெறுகிறது" என்பதை வெளியே சொல்வதும் புலம்புவதும் எனக்கு அவமானம் கிடையாது. அது இந்த சமூகத்திற்கான அவமானம்.

"மலத்தைத் தின்கிற நாயும் பன்றியும்கூட ஒருநாளும் தன்னோட மலத்தைத் தின்னாது. ஆனால் திண்ணியத்தில் ஒரு தலித் வாயில் மலத்தைத் திணிச்சிட்டீங்களே" என்று புலம்பி ஒருத்தர் கதையோ கவிதையோ எழுதினால் அது வெறும் புலம்பல் அல்ல. இந்த சமூகத்தின் மீது வாசிக்கப் படும் குற்றப் பத்திரிகை. இதனால் இந்த வகைமை எழுத்துக்களும் தேவைதான்.

அதே நேரத்தில் இப்ப திண்ணியம் வழக்கில் தீர்ப்பு வந்திருக்கு. ஆயிரத்தெட்டு வியாக்கியானங்கள் சொல்லப்பட்டாலும் தீர்ப்போட சாரம் சாதி வெறியர்களுக்கு சாதகமானதுதான். அப்ப, இனிமேல் யார்வேண்டுமானாலும் எவன் வாயிலும் எதை வேண்டுமானாலும் திணிக்கலாமா? அப்போதும் கோர்ட் இதே மாதிரித் தீர்ப்பு வழங்குமா? ஒருத்தன் வாயில மலத்தைத் திணிச்சதை உங்களால சகஜமா எடுத்துக்க முடியும்னா ஊறுகாய் மாதிரி கொஞ்சூண்டு மலத்தையும் உங்க சாப்பாட்டுத் தட்டில வச்சுக்குவீங்களா? என்று கேட்கிற எழுத்தும் தேவை.

அப்படி எழுதுவதற்கு உங்களுக்கு இந்த சமூகத்தின்மீது எந்தப் பிரமைகளும் இருக்கக்கூடாது. "நான் தலைமுறை

**செய்தி:**
**திருச்சி மாவட்டம் திண்ணியம் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாயில் மலம் திணித்தது தொடர்பான வழக்கில் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.**

தலைமுறையாக அடி வாங்கிக் கொண்டிருக்கிறேன். இதற்கு பார்ப்பனீய ஆதிக்கமும், சாதிய அடுக்குமுறையும்தான் காரணம்" என்பதுபோன்ற வரலாற்று, அரசியல் காரணங்களைப் பயிலும்போது பிரமைகளை உதிர்த்துவிட்டு வாழ்வின் மூர்க்கத்தை எதிர்கொள்கிற- அதை அப்படியே எழுத்தில் முன்வைக்கிற ஒருவராக எவரொருவரும் வெளிப்படக்கூடும்.

இடதுசாரி இயக்கத்தோடு எனக்குக் கிடைத்த தொடர்புகள், போராட்ட அனுபவம் ஆகியவற்றிலிருந்து உருவான விமர்சனப் பார்வையும் புரிதலும் எனது எழுத்துக்களை வேறொரு வகைமையாக மாற்றியிருக்கலாம். எப்படியாயினும் எனக்கு முன்பு சாதி அடுக்குமுறைக்கு எதிராக இயங்கிய- எழுதிய எல்லோரது தோள்மீதும் ஏறி நிற்பதால் நான் ஒருவேளை உங்களுக்கு உயரமாகத் தெரியலாம்.

பார்ப்பன எதிர்ப்பை உங்கள் படைப்புகளில் உக்கிரமாக வெளிப்படுத்தி வருகிறீர்கள். நீங்கள் சார்ந்துள்ள இயக்கங்களில், சக எழுத்தாளர்கள் வட்டத்தில் நீங்கள் எப்படி பார்க்கப் படுகிறீர்கள்?

இங்கு உடலுழைப்பில் ஈடுபடுபவர்கள் எல்லோருமே பார்ப்பனரல்லாதார்தான். (அதையும் வடிகட்டிப் பார்த்தால் தலித்துக்கள்தான்) தலைமுறை தலைமுறையாக இயற்கையோடு இயைந்தும் மல்லுக் கட்டியும் பெற்ற பாரம்பரிய அறிவைக் கொண்டு நிகழ்த்தப்படுகிற அவர்களது உழைப்பினாலேதான் சமூகத்தின் தேவைகள் முழுவதும் நிறைவேற்றப் படுகிறது. உடலுக்கு வெளியே மூளையை வைத்தால் எவ்வளவு விகாரமாக இருக்குமோ அந்தளவுக்கு விகாரமானதுதான் உடலுழைப்பையும் மூளை உழைப்பையும் பிரிக்கிறதும்கூட. பார்ப்பனர்கள் இப்படி மொத்த சமூகத்தையும் விகாரப்படுத்தி விட்டார்கள்.

உடலுழைப்பை அறிவிலிருந்து பிரித்ததோடு, உடலுழைப்பு அனைத்தையும் தீட்டுக்குரியதாகவும் அறிவித்தார்கள். விவசாயம் செய்த பார்ப்பன அண்ணன் தம்பி இருவரும் கொடுத்த காணிக்கையை- சாஸ்திர விரோதமாய் சம்பாதித்த பணம் என்று கூறி கும்பகோணம் சங்கர மடத்துக்காரர் (சிருங்கேரி மடத்தோட கிளை. கும்பகோணத்தைத் தவிர அதற்கு தமிழ்நாட்டில் வேறெங்கும் கிளைகள் கிடையாது. காஞ்சிமடம் லிஸ்டிலியே கிடையாது) ஏற்க மறுத்த விவகாரத்தை காந்தியே அம்பலப்படுத்தி கண்டித்தது உங்களுக்குத் தெரியும்.

விளைகிற தானியம் தவசமெல்லாம் புனிதம், அதை விளைவிக்கிற விவசாயமும், விவசாயியும் தீட்டுன்னா அதை எப்படி ஏத்துக்க முடியும்? அப்பதான், புனிதம்னு நீ கொண்டாடுற உன் அறிவும் உன் தொழிலும் உன் வயிற்றை மட்டுமே வளர்க்கிறதுக்கு உதவுற குப்பை...

எங்ககிட்ட இருக்கிற அறிவுதான் இந்த உலகத்தையே வாழவைக்கிறதுன்னு பிரகடனம் செய்ய வேண்டியிருக்கு. அவங்களோட மந்திரத்தில மாங்காய்கூட வராதுங்கறது எல்லாருக்கும் தெரிந்த உண்மை.

பார்ப்பனர்களோட பிழைப்புக்கூடமாய் இருக்கிற கோயிலைக் கட்டினதும், அதுக்குள் இருக்கிற சாமி சிலைகள் செதுக்கினதும், பூசைக்கான தேங்காய் பழங்களை விளைவிக்கிறதும், அவர்கள் கையிலே பிடித்தாட்டுகிற மணியை செய்வதும்கூட பார்ப்பனரல்லாதார்தான். இந்த சமூகத்தோட அடிப்படைச் செயல்பாடாய் இருக்கிற உழவும் தொழிலும் இவர்களால்தான் வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது. கரத்தாலும் கருத்தாலும் உழைப்பவர்கள் இவர்கள்தான். எனவே உழைக்கும் மக்களோட இயக்கம்கிறது இவர்களுக்கானதுதான்.

நான் கல்வி கற்க ஆசைப்படும்போது, "நீ படிக்கப் போய்விட்டால் எனக்கு அடிமை வேலை செய்வது யார், என் பிணத்தை யார் தூக்குவது, என் துணியை யார் துவைப்பது, என் கழிவறையை யார் சுத்தம் செய்வது" என்று அவர்கள் கேட்கிறார்கள். இதையெல்லாம் நான் ஏன் செய்யவேண்டும் என்று கேள்வி கேட்டால் அவர்கள் சாதி என்கிற விஷயத்தைத்தான் மறுபடியும் பேசுகிறார்கள். இந்தக் கேள்வியின் ஆதாரமூலமாக பார்ப்பனர்களாக இருக்கிறார்கள். அதனால் அவர்களை எதிர்த்துப் பேசவேண்டிய சூழலையும் அவர்கள்தான் உருவாக்குகிறார்கள்.

என்னைப் பார்த்து ஒருவன் உனக்கு அறிவில்லை என்று சொன்னால் அதற்கு உடனடியாக நான் பதில் சொல்லியாக வேண்டியிருக்கிறது. மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று நான் யோசித்துக் கொண்டிருக்க முடியாது. நான் ஒடுக்கப் படுகிறேன் என்று கருதும்போது, என்னை ஒடுக்குபவனைப் பார்த்து நான் கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. அந்தக்கேள்வி ஒரு குறிப்பிட்ட சாதிக்கு எதிரான கேள்வியாக இருப்பதற்கு நான் எந்தவிதத்திலும் பொறுப்பாளியல்ல. நான் கேள்வி எழுப்புவதை சகித்துக்கொள்ள முடியாமலும் கேள்விகளை எதிர்கொள்ள முடியாததாலும் என்மீது ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்கானது என்ற வகையில் இடதுசாரி இயக்கம் என் பாடுகளுக்கு செவிமடுக்கும், எனக்காகப் போராடும், போராட வேண்டும் என்றும் கருதுகிறேன்.

தமிழ்நாட்டில், இந்தியாவில் இடதுசாரி இயக்கங்கள்தான் ஒடுக்கப்பட்டவர்களைப் பார்த்து நீங்கள் ஒடுக்கப்படுகிறீர்கள் என்று முதலில் புரிய வைத்தன. தலித் அமைப்புகள் என்று தனியாக உருவாவதற்கு முன்பிருந்தே இடதுசாரி இயக்கங்கள் ஒடுக்கப் பட்டவர்களுக்காகப் பணியாற்றி வருகின்றன. அடிப்படை பாட்டாளி வர்க்கமாக இருக்கிற தலித்துகளுக்காக போராடுவதைத்தவிர அவற்றுக்கு வேறு வழியுமில்லை.

நிலவும் அசமத்துவமான சமூக அமைப்பை மாற்றியமைக்கப் போராடுவதுதான் இடதுசாரி மனோபாவம் என்றால்



மற்றெவரைக் காட்டிலும் இந்த சமூகத்தை உடனடியாய் மாற்றியமைக்க வேண்டிய தேவை தலித்துகளுக்குத்தான் இருக்கிறது. அதனால்தான் அம்பேத்கரை இந்தியாவின் மிகச்சிறந்த இடதுசாரித் தலைவராக நான் கருதுகிறேன். அவர் உருவாக்கித் தந்திருக்கும் சாதி ஒழிப்பிற்கான பாதையில் இடதுசாரி இயக்கங்கள் மட்டுமே மக்களைத் திரட்ட முடியும் என்று நம்புகிறேன்.

இப்படி இருக்கும்போது பார்ப்பனர்களுக்கு எதிராக நான் எழுதுவதை இயக்கம் எப்படித் தவறாக எடுத்துக்கொள்ளும்? இதைத்தான் எழுத வேண்டும் என்று தனிப்பட்ட முறையில் யாரும் என்னிடம் கூறுவது கிடையாது. படைப்பு என்பது தனிநபர் செயல்பாடு. இடதுசாரித் தோழர் ஒருவர் ஓட்டல் வைத்திருந்தால், அவர் தினமும் "சாம்பார் நல்லா இருக்குதா" என்று கட்சி அலுவலகத்தில் போய்க் கேட்டுவிட்டு தொழில் நடத்துவதில்லை. அதேபோல் நானும் என்னுடைய கவிதையை யாரிடமும் கொண்டுபோய் கருத்துக் கேட்டுவிட்டு வெளியிடுவதில்லை.

இயக்கத்தைப் பற்றித் தெரியாதவர்களும் அதற்குள்ளிருந்து இயங்காதவர்களும் அவர்களாகவே அனுமானத்தில் எதையாவது சொல்வது இங்கொன்றும் புதுசல்ல. கட்சி அலுவலகத்திலிருந்து ஒவ்வொரு எழுத்தாளனையும் ஒரு கமிஸார் கண்காணித்துக் கொண்டிருப்பதாய் குற்றம் சாட்டுவதெல்லாம் ரசமான கற்பனைதான். எழுத்து என்பது தனியொருவனின் அனுபவம், அவன் மீதான வன்முறைகள், அவனுக்குக் கிடைக்கிற சுதந்திரம் சார்ந்த விஷயம். இதில் எந்த இயக்கமும் தலையிடுவதில்லை. இந்த சுதந்திரமும், இயக்கம் மானசீகமாய்த் தருகிற தைரியமும்தான் என் எழுத்தின் காத்திரத்திற்குக் காரணமாக இருக்கிறது.

***ஆரியத்துக்கு மாற்றாக திராவிட இயக்கங்கள் தமிழக வரலாற்றை முன்வைக்கின்றன. ஆனால் தமிழ் மன்னர்களின் வாழ்க்கையை, தமிழ் வரலாற்றை உங்களது படைப்புகள் பகடி செய்கின்றன.***



***ஆரிய வரலாற்றுக்கு மாற்றாக தமிழக வரலாறு முன்னிறுத்தப்படுவதை நீங்கள் ஆதரிக்கவில்லையா?***

ஆரியர்கள் வெளியில் இருந்து வந்தவர்கள் என்று ஆயிரம் சான்றுகளை நிறுவிய பிறகும், சங் பரிவாரத்தினர் "இல்லையில்லை, ஆரியர்கள் இந்த மண்ணின் பூர்வகுடிகள்" என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். என்.எஸ்.ராஜாராம் போன்ற போலி ஆய்வாளர்களோட சப்பைக்கட்டும் இதற்கு உண்டு. அவர் மித் ஆஃப் ஆரியன் இன்வேஷன் என்று ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார். இன்னும் இவரைப் போலவே பல டகால்டிகளும் உண்டு. எனவே ஆரியர்கள் வெளியில் இருந்து வந்தவர்கள் என்று சொல்வதற்கு உங்களுக்கு ஒரு அரசியல் நிலைப்பாடு தேவைப்படுகிறது. அதாவது உண்மையான வரலாற்றை தேடி அறிவது என்பதுதான் அது.

ஐதராபாத்தை மையமாகக் கொண்டு செயல்படுகிற ஒரு ஆய்வமைப்பு, இந்திய உயர்சாதி ஆண்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் டி.என்.ஏ மூலக்கூறுகளில் ஒற்றுமை இருக்கிறதாக அறிவிச்சிருக்கு. ஆனால் இப்படியான ஒற்றுமை பெரும்பாலான உயர்சாதிப் பெண்களுக்கில்லை. புதுதில்லி அறிவியல் இயக்கத்தலைவர் பிரபிர் புர்கயஸ்தா இதுபற்றி மார்க்ஸிஸ்ட் கட்சியோட பத்திரிகையான பீப்பிள்ஸ் டெமாக்ரசியில் இரண்டு கட்டுரைகள் எழுதியிருக்கிறார். ஆரியர்கள் குறைந்த அளவிலான பெண்களுடன்தான் இங்கு வந்தார்கள், அவர்கள் இந்தியப் பரப்பிலிருந்த பூர்வகுடிப் பெண்களை பலவந்தமாய் சிறைப்பிடித்துக் கொண்டார்கள் என்றும், அதனாலேயே பிற்காலத்தில் ஆரியர்கள் தங்கள் வீட்டுப் பெண்கள் உட்பட எல்லாப் பெண்களையும் தீட்டுக்குரியவர்களாகவே அறிவித்தார்கள் என்றும் ஏற்கனவே வெளியான ஆய்வுகளுக்கு வலு சேர்ப்பதாய் இருக்கிறது இந்த டிஎன்ஏ ஆய்வு.

திராவிடர்களும் வெளியில் இருந்து வந்தவர்கள் என்றுதான் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வந்த காலம்தான் வேறுபடுகிறது. இவர்கள் ஆரியர்களுக்கு முன்பே வந்தவர்கள். திராவிடர்களை தமிழர்களின் மூதாதையர்களாகக் கொள்ள முடியுமா என்கிற ரீதியில் ஆய்வுகள் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. அம்பேத்கரும் இந்த மண்ணின் பூர்வகுடிகளாக நாகர்களைத்தான் குறிப்பிடுகிறார்.

உலகம் முழுவதுமே சமூகக் காரணங்களால் மக்கள் இடம்பெயர்வது நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஆரியர்களும் அப்படித்தான் ஒரு நெடும் பயணத்தின் வழியாக இங்கு வருகிறார்கள். இங்கிருக்கிற பூர்வ குடிகளை அவர்களது தோற்றத்தைக் கொண்டு கருப்பர்கள், சப்பை மூக்கர்கள், ஆண்குறி வழிபாட்டாளர்கள்னு இழித்தொதுக்குகிற வேலை அப்போதே தொடங்கிருச்சு. பூர்வ குடிகளிடமிருந்து தங்களை தனித்துக் காட்டிக் கொள்ளவும், தங்களது இனத் தூய்மையைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஆரியவர்த்தம் மாதிரியான தனித்த குடியிருப்புகளை உருவாக்குறாங்க. பூர்வ குடிகளோடு பழகுவது தீட்டுக்குரியதா அறிவிக்கப்படுது. முதன்முதலில் இந்தியாவை ஒரு மூடுண்ட சமூகமாக மாற்றியவர்கள் ஆரியர்கள்தான் என்ற முத்துமோகனின் குற்றச்சாட்டு முற்றிலும் உண்மை.

"ஒதுக்குவதும் ஒதுங்குவதும்" என்கின்ற பார்ப்பனியத்தின் ஆணிவேர் ஆரியத்திற்குள் பதுங்கியிருக்கிறது. ஆனாலும் இனக்கலப்பு தவிர்க்க முடியாததாகிறது. வருணம் வருகிறது. இப்போ வருணத்தூய்மை என்கின்ற ஒரு புதுவகை முடாக்கு அறிமுகமாகிறது. வருணக்கலப்பையும் தவிர்க்க முடியாதபோது சாதி வருகிறது. சாதிக்கலப்பைத் தடுக்க தீண்டாமை வருகிறது. இப்படி தொடர்ந்து சமூகத்தை இணக்கம் காண முடியாத கூறுகளாக பிளக்கிற ஏற்பாடுகளுக்குப் பின்னே ஆரிய மனநிலைதான் இயங்குகிறது.

இந்த வருணத்தையும் சாதியையும் தமிழ் மண்ணுக்குக் கூட்டிவந்து கட்டிக் காப்பாற்றும் வேலையில் தமிழ் மன்னர்களும் ஈடுபட்டிருந்தார்கள் என்ற உண்மையை நாம் எப்படி நிராகரிக்க முடியும்? வர்ண அமைப்பை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொன்ன மன்னர்கள் யாரையாவது தமிழ் மரபிலிருந்து நீங்கள் காட்ட முடியுமா? வருண அமைப்பை ஒப்புக் கொண்டவர்களை என்னுடைய மன்னன் என்று நான் ஏன் கொண்டாட வேண்டும்? வடக்கேயிருந்து பார்ப்பனர்களை அழைத்துவந்து வளமான பகுதிகளில குடியமர்த்தி வைத்தவர்களே தமிழ் மன்னர்கள்தானே? அந்தப் பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டுத்தானே தலித்துகளை ஊருக்கு வெளியே ஒதுக்கி வைத்தார்கள்? சாதியைத் தாங்கிப் பிடிக்கிற, பெண்களை இரண்டாம்பட்சமாக போகப்பொருளாக நடத்துகிற ஒரு மன்னனை அவன் தமிழன் என்பதாலேயே நான் ஏன் தாங்கிப் பிடிக்க வேண்டும்?

தமிழன் என்ற பொது அடையாளத்தோடு ஒன்றுபடுவது, பேசுவதற்கு உவப்பானதாக இருக்கலாம். தமிழன் என்ற பொது அடையாளத்தை வைத்துக்கொண்டு சாலையில் ஒரு தலித் சுதந்திரமாக நடந்துவிடவோ, மற்றவர்களுடன் சேர்ந்து சாப்பிடவோ, மற்ற சாதிகளில் திருமணம் செய்துகொள்ளவோ முடியுமா? ஹரியானாவில் கொல்கிறார்கள். ஆந்திராவில் சுண்டூரில் கொல்கிறார்கள். பீகாரில் தலித்துகளைக் கொல்ல தனிப்படையே இருக்குது. கயர்லாஞ்சியில் நடந்த கொடுமை நாடறியும். இதிலிருந்து தமிழ்நாடு எந்தவிதத்தில் மாறுபட்டிருக்கு? தமிழன் எந்தளவிற்கு சாதி வித்தியாசம் பாராமல், தீண்டாமையை கைக்கொள்ளாமல் சமத்துவம் பாராட்டுகிறவனாய் இருக்கிறான். இந்த நாட்டில் எங்கேயிருந்தாலும் எங்கள் உயிரும் உடைமையும் மசுருக்கு சமானமாகக்கூட மதிக்கப்படலேன்னா தமிழன் அல்லது இந்தியன் என்கிற வெட்டிப் பெருமையை நானெதற்கு சுமந்து திரியவேண்டும்?

தமிழ்நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட வடிவங்கள்ல தீண்டாமை கடைப்பிடிக்கப்படுது. ஒரு அரசியல் விருப்பறுதியோட அரசாங்கம் செயல்பட்டா இதையெல்லாம் முடிவுக்கு கொண்டுவர முடியும். ஒரு தலித்தைக் கூட்டிப்போய் உன் வீட்டில் விருந்து வை அல்லது ஒரு தலித் வீட்டுக்குப் போய் நீ சாப்பிடுன்னு ஒரு அரசாங்கம் உத்தரவு போட வேண்டியதில்லை. ஆனால் பொது இடத்தில் நடமாடவும், சைக்கிளேறிப் போகவும், செருப்புப் போட்டுக் கொள்ளவும், தோள்ல துண்டு பொட்டுக் கொள்ளவும்கூட ஒரு தலித்தை அனுமதிக்க மாட்டேன்னு அட்டூழியம் பண்ணுகிற சாதி வெறியன்களை சுளுக்கெடுக்கிறது அரசாங்கத்தோட வேலைதானே? ஆனால், அரசு நிர்வாகத்துல இருக்கிற அதிகாரிகள், காவல்துறையினர், நீதிபதிகள் என்று இவங்களெல்லாம் சாதியைக்கூட தாண்டாதவங்களா இருக்கிறப்ப ஒரு தலித்தின் உயிர் எந்த நேரத்திலும் பறி போகக்கூடியதாயிருக்கிறது.

நடப்பிலிருக்கிற வன்கொடுமைத் தடுப்புச் சட்டங்களை அமல்படுத்துகிற பொறுப்பு சாதிவெறியர்களிடமே ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் அந்தச் சட்டங்களைக் குற்றுயிராக்கி குடலறுத்துக் கிடத்தியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ஆந்திராவிலோ, பீகாரிலோ எங்கே பிறந்திருந்தாலும் தலித்தாக இருப்பதால்தான் கொடுமைக்கும் அவமானத்துக்கும் ஆளாகிறேன் எனும்போது, மொழியினால் எனக்கு என்ன நன்மை கிடைக்கிறது? குறிப்பிட்ட பூகோள எல்லைக்குள் பிறப்பதால் என்னை சுதந்திரமான மனிதனாக இந்த சமூகம் ஒப்புக்கொள்ளுமா? நான் குறிப்பிட்ட மாநிலத்தை சேர்ந்தவன், குறிப்பிட்ட மாவட்டத்தை சேர்ந்தவன், குறிப்பிட்ட மொழியைப் பேசக்கூடியவன் என்பதால் எனக்கு எந்த சமூக அந்தஸ்தும் கிடைப்பதில்லையே.

காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை மொழி, உணவு, உடை, மதம், நம்பிக்கைகள் என எல்லாமே வேறுபடுகிறது. எனக்கு கீழே இன்னொரு சாதி என்ற உணர்வு மட்டும்தான் எல்லோரையும் ஒன்றுபடுத்துகிறது. இந்த வேற்றுமையில் ஒற்றுமைதான் இந்தியா என்றால், இந்தியன் என்கிற தேசியக் கோட்பாட்டையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழன் என்கிற பொது அடையாளத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழன் என்கிற பொது அடையாளத்தை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது? தமிழன் என்கிற பொது அடையாளத்தை மட்டும் முன்னிறுத்தி மற்ற அடையாளங்களைத் துறப்பதில் எனக்கு எந்த மனத் தடையும் கிடையாது. ஏனெனில் எனக்கு "தீண்டத்தகாத சாதி" என்ற அடையாளத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. இதைத் துறப்பதில் எனக்கு எந்த சிரமமும் இல்லை. "நீங்களும் அதேமாதிரி துறக்கத் தயாராக இருக்கிறீர்களா" என்பதுதான் எனது கேள்வி. உங்களுக்கு "தமிழன்" என்ற அடையாளத்தைத் தவிர தொடத்தக்க ஜாதி, ஆண் போன்ற மீதி அடையாளங்கள்தான் முக்கியமாக இருக்கின்றன. அதிகாரமிக்க உனது அடையாளங்களை நீ துறக்கத் தயாராக இருந்தால், தமிழன் என்கிற பொதுக்குடையின்கீழ் ஒன்று படுவதற்கு எனக்கு எந்த மனத்தடையும் இல்லை.

**சாதி உணர்வோடு இருந்ததால் தமிழ் மன்னர்களின் வரலாற்றை நிராகரிப்பதாகக் கூறுகிறீர்கள். நால் வருணத்தை முன்னிறுத்துவதுதான் கம்பராமாயணம். பெரியார் அதை எரித்தபோது, கம்யூ னிஸ்ட் தலைவர் ஜீவா ஊர்தோறும் அதை எடுத்துச் சென்று அதற்கு ஆதரவாகப் பேசினார். இதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

60வகையான ராமாயணம் இருக்கிறது. வால்மீகி ராமாயணம்தான் ஆதி. வால்மீகியும்கூட அப்பகுதி மக்களிடம் வாய்மொழியாக புழக்கத்திலிருந்த ஒரு கதையை தன் மொழியில் எழுதியிருக்கக்கூடும். பத்தாயிரம் பாடல்களைக் கொண்ட வால்மீகி ராமாயணம் பின் வந்தவர்களின் இடைச்செருகல்களால் உப்பி வீங்கி இன்று 24ஆயிரம் பாடல்களைக் கொண்டதாக இருக்கிறது. கம்பரும் தன் பங்குக்கு கொஞ்சம் அரைத்து ஊற்றியிருக்கிறார்.

இவர்களெல்லாம் சேர்ந்துதான் வடக்கே அயோத்தியைச் சுற்றி நடந்ததாகக் கூறப்படும் ஒரு கதையை நகர்த்தியும் புஷ்பக விமானத்தில் ஏற்றியும் தென்னாட்டுக்குக் கூட்டி வந்தார்கள். போதாக்குறைக்கு கடலிலும் நீந்தவிட்டு கரையேறத் தோதாக பாலமும் கட்ட வைத்தார்கள். வேலைவெட்டி இல்லாத பண்டிதர்களும் புலவர்களும் கம்பராமாயணத்தின் எல்லாக் கதாபாத்திரங்களையும் தெருத்தெருவாய் இழுத்துவந்து பட்டிமன்றங்கள் நடத்தி நாறடித்து ராமாயணம் ஏதோ நம்மூர் கதை என்பதைப்போலவே மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

இன்னொரு பக்கம் ஆய்வாளர் எஸ்.ராமச்சந்திரன் சொல்வதைப்போல, ராமன் ஒரு கற்பனைப் பாத்திரம் என்று வாதாடப் புகுந்தவர்கள் ராவணனை திராவிடன் என்றும் ஆரியத்தை எதிர்த்த உண்மையான மாவீரன் என்றும் கொண்டாடத் தொடங்கிய அபத்தமும் இங்கு நிகழ்ந்தது. ராமன் கற்பனை என்றால் ராவணனும் கற்பனைதான் என்கிற குறைந்தபட்சப் புரிதலையும் கைவிட்டிருந்தனர்.

இன்னும், கம்பராமாயண வரிகளைப் பிழிந்து, சோறு - குழம்பு - சொர்க்கம் - நரகம் - சோசலிசம் - சூயஸ் கால்வாய் எல்லாவற்றையும் கொண்டு வருகிறதொரு ஏற்பாட்டில், பூதக்கண்ணாடி வைத்தலையும் கூட்டமொன்றும் இருக்கிறது. ராமாயணம் முன்வைக்கிற சமூகவியல் கருத்துக்களை உள்வாங்காமல் கம்பனின் மொழி ஆளுமைக்காகவும், கற்பனைக்காகவும் ராமாயணத்துக்குள் புகுந்த ஜீவா கடைசியில் கம்பனை விட்டுவிட்டு ராமனைப் பற்றிக் கொண்டாரென்ற குற்றச்சாட்டு உண்டு. 13வது ஆழ்வார் என்ற கேலிக்கும்கூட ஆளாகினார். ராமாயணத்தை எரித்ததற்காக பெரியாரோடு ஜீவாவுக்கு எந்தளவுக்கு முரண்பாடு இருந்ததோ அந்தளவுக்கு இவ்விசயத்தில் ஜீவாமீது எனக்கிருக்கிறது.

**எழுத்தாளர்கள் சாதிய மனோபாவத்தோடு இயங்குவதாக குட்டி ரேவதி சமீபத்தில் ஒரு கட்டுரையில் எழுதியிருந்தார். நீங்கள் இந்த கருத்தோடு எந்தளவிற்கு உடன்படுகிறீர்கள்?**

நமக்கு சாதியைத் தவிர வேறெதுவும் தெரியாது என்பதுதான் உண்மை. ஆனால் நாம் அதை மறைக்கப் பார்க்கிறோம். பெரிய பெரிய விசயங்களாகப் பேசி நமக்குள் இருக்கும் சின்னத் தனங்களை மறைத்துக்கொண்டு தப்பியோடும் எத்தனிப்பிலேயே முனைப்பு காட்டுகிறோம். குட்டி ரேவதி அதை வெளிப்படையாக எழுதியிருந்தார். "தமிழன்" என்கிற பொது அடையாளத்தோடு எல்லோரும் ஒன்றுபட வேண்டும் என்று சொல்லப் படுவதைப்போல், பெண் விடுதலை குறித்துப் பேசும்போது, அனைத்துப் பெண்களும் ஒரே குடையின்கீழ் ஒன்றுபட வேண்டும் என்ற கருத்து கூறப்படுகிறது.

எல்லாப் பெண்களும் ஒரே பிரச்சனையைத்தான் சந்திக்கிறார்களா, ஒரு பார்ப்பனப் பெண்ணுக்கு உள்ள பிரச்சனைகளும், தலித் பெண்ணுக்கு உள்ள பிரச்சனைகளும் ஒன்றா என்ற கேள்வி இந்த இடத்தில் வருகிறது. சில பொதுத் தன்மைகள் இருக்கலாம். மற்றப்படி ஒப்பிடமுடியாத வித்தியாசங்கள் நிறைய உண்டு.

கிராமத்தைச் சேர்ந்த பெண்ணுக்கும், நகரத்தைச் சேர்ந்த பெண்ணுக்கும் ஒரேமாதிரியான பிரச்சனைகள் இருப்பதில்லை. கிராமத்தில் ஒரு பெண்ணை அவளது கணவன் அடிப்பானானால் அவளால் திருப்பி அடிக்க முடிகிற அளவுக்கு மனரீதியாக காத்திரமாகத்தான் இருக்கிறாள். அப்படி திருப்பியடிக்க முடியாவிட்டால் அவனை நிலைகுலைய வைக்கிற அளவுக்கு அவளால் கடுமையாக ஏச முடிகிறது. கிராமப்புற வாழ்க்கையில் ஆணின் உழைப்பையும் அவனது வருமானத்தையும் மட்டுமே சார்ந்திராமல் பெண் அடிப்படையிலேயே தன் சுய உழைப்பில் வாழ்கிறவளாகவும் இருக்கிறாள். இன்னும் சொல்வதானால் அவளது உழைப்பை நம்பியே முழுக் குடும்பமும் வாழ்கிற நிலைமையும்கூட உண்டு. எனவே அவள் வாழ்க்கையை எதிர் கொள்வதற்கான தன்னம்பிக்கையும் தன்மதிப்பும் உடையவளாயிருப்பதும் இயல்பானதுதான்.

படித்த நடுத்தர வர்க்கத்து ஆண் இன்று தன்னை வெகு நாகரீகமாகக் காட்டிக்கொள்வதற்கு அதிகம் மெனக்கெடுகிறான். ஒரு கண்ணியவான் போன்ற தோற்றத்தில் தனது கொடுக்குகளையும் கோரப் பற்களையும் மறைத்துக்கொள்ள விரும்புகிறான். அதனால் அவனால் பெண்ணை அடிக்கவோ, நேரடியாக ஆதிக்கம் செலுத்தவோ முடியவில்லை. என்ன சார் படிச்சவங்களா இருக்கீங்க, இப்படி இன்டீசன்டா நடந்துக்கிறீங்களேன்னு தன்னை யாரும் சொல்லிவிடக் கூடாதுங்கறதுல கவனமா இருக்கிறான்.

ஆனால் அதுக்காக ஆண் என்கிற அகங்காரத்தையோ, பெண் தனக்குக் கீழ் என்கிற இளக்காரத்தைரயோ கை விடவும் அவன் தயாரில்லை. எனவே பெண்ணை அடிமைப்படுத்தவும், தான் அவளைவிட மேல் என்று உணர்த்துவதற்கும் மொழியின் துணையோடு பல நுட்பமான வழிமுறைகளைக் கையாள்கிறான். அந்த நுட்பங்களைப் புரிந்துகொண்டு அதை மொழிரீதியாகவே பெண்கள் எதிர் கொள்கிறார்கள். ஊமைக்குத்து விட்டு உள்காயம் ஏற்படுத்துகிற ஒரு தாக்குதல் முறையை பெண்கள் மொழிக்குள்ளிருந்து கண்டெடுத்திருக்கிறார்கள். ஆண்களின் நுட்பமான பின்னல்களுக்குள் சென்று பெண்கள் பேசுகிறார்கள் என்றுதான் கருதுகிறேன். ஆனாலும் இவர்கள் எழுதும் பிரச்சனை உலகம் முழுக்க உள்ள பெண்களின் பிரச்சனை அல்ல என்று சொல்லத் தோன்றுகிறது.

யோனி என்கிற வார்த்தையை எழுதிவிட்டால் அது ஏதோ பெரிய புரட்சி என்று இங்கு மதிப்பிடப் படுகிறது. இது நகரம் சார்ந்த நடுத்தரவர்க்க மனோநிலை. அவளுடைய படிப்பும் நாசூக்கும் யோனி என்கிற வார்த்தையை தன் சக மனிதர்களுடனான உரையாடலில் பேசுவதற்கு அவளுக்கு பெரிய மனத்தடையை உருவாக்கியுள்ளது. அதனால் அந்த ஒரு வார்த்தை ஒரு பெரிய கலகக் குரலாக நமக்கத் தெரிகிறது. ஆனால் கிராமத்திலோ நகரத்திலோ ஒரு அடித்தட்டு பெண் ஒரு நாளைக்கு நூறுமுறை அந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறாள். இதற்காக "நானும் கலகக்காரி" என்று அவள் தோள் தட்டிக் கொள்வதில்லை. "இதையெல்லாம் சாராம்சப் படுத்தித்தான், பெண் விடுதலை, பாலின் சமத்துவம் என்பனவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்." என்று குட்டி ரேவதி சொல்வதாக நான் புரிந்து கொள்கிறேன். பெண் விடுதலை என்ற குடையின்கீழ் ஒரு பார்ப்பனப் பெண்ணை ஒரு தலித் பெண் உரசிக்கொண்டு நிற்க முடியுமா என்ற அவரது கேள்வி இன்னும் யாராலும் எதிர் கொள்ளப் படாமல்த்தான் இருக்கிறது.

**பெண்ணடிமைத்தனம், சாதி அடக்குமுறைகளைத் தக்க வைப்பதில் நமது சமூக, குடும்ப அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது?**

நம் சமூக அமைப்பில் நாம் என்னவாக வளர்க்கப் படுகிறோம்? "இந்தியன் என்ற உணர்வோடு" என்றால் அது மிகவும் செயற்கையானது. வேறு ஏதாவது நாட்டுக்குச் சென்றால் ஒருவேளை இந்தியன் என்ற உணர்வு நமக்கு வரலாம். அதுவும் தங்கியுள்ள அந்த நாட்டைச் சேர்ந்தவர் அல்ல என்பதால் இந்தியன் என்று சொல்லிக்கொள்ள

வேண்டியிருக்கிறது. இது தேவையை ஒட்டி உருவானது.

ஆனால் பிறப்பிலிருந்தே குறிப்பிட்ட சாதியின் நம்பிக்கைகளுக்கும், வழமைக்கும் ஏற்றவாறுதான் வளர்க்கப்படுகிறோம். இதிலும் பெண் கூடுதல் கவனத்தோடு வளர்க்கப்படுகிறாள். ஒவ்வொரு கணமும் சாதியாக வளர்க்கப்பட்டு சாதியாகத்தான் வாழ்கிறோம். முதலில் நான் இந்தியன் பிறகு தமிழன் என்பதெல்லாம் மிக மிக அயோக்கியத்தனமான வார்த்தைகள்.

நான் சைவம், நான் அசைவம் என்று உணவில் வேறுபடுவதில் தொடங்கி உடை, உணர்வுகள் அனைத்தையும் சாதிதான் தீர்மானிக்கிறது. நல்ல குடும்பம் என்கிற நம் வரையறையே அப்படித்தானே இருக்கிறது. "அப்பா, அம்மாவிற்கு பிடித்த பையனாக, அல்லது அவர்கள் சொல்கிறவனை திருமணம் செய்துகொண்டு குனிந்த தலை நிமிராத பெண்கள் இருந்தால் அது நல்ல குடும்பம். ஆச்சாரம் கெடாத குடும்பம்." "நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்." அதாவது பல்கலைக்கழகம் எப்படி ஒரு மோசமான தயாரிப்பை வெளியே அனுப்புகிறதோ அப்படித்தான் குடும்பமும் அனுப்புகிறது.

சாதியை வலுவாக, மிக நுட்பமாக பாதுகாக்கக்கூடிய இடம்தான் குடும்பம். என் பையன் அமெரிக்கா போனாலும் இங்க வந்து நான் பார்க்கிற பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணுவான் என்று உறுதியாக சொல்ல முடிவது சாதியால்தானே? உண்பது, வாழ்வது, உணர்வது தொடங்கி, நான் இன்று உண்டதை நாளை ஒருவன் அள்ளுவான் என்பது வரைக்கும் சாதிதானே தீர்மானிக்கிறது? "இறந்த பிறகு எரிப்பதா, புதைப்பதா? எந்த சாதிக்காரன் குழி வெட்டுவது?" என்பதையும் அதே சாதிதான் தீர்மானிக்கிறது.

"நான் ஒடுக்குகிற சாதியில் பிறந்திருக்கிறேன், நான் பெண்ணை ஒடுக்குகிற ஆணாக இருக்கிறேன். இது குறித்து நான் குற்றவுணர்ச்சி கொள்கிறேன்" என்பது மாதிரியான எந்த எழுத்தும் இதுவரை வரவில்லை. சுஜாதா "சிவாஜி" திரைப்படத்தில் "அங்கவை, சங்கவை இருவரும் கறுப்பு" என்று எழுதுகிறார். அவர் பார்த்த பெண்கள் வெள்ளைத்தோல் உடையவர்கள். எனவே கறுப்பாக இருப்பவர்களை அவரால் எளிதாக அவமானப்படுத்த முடிகிறது.

இதைச் சொல்கிற அதிகாரத்தை சுஜாதாவிற்கு அவரது ஜாதிதானே தந்தது? எங்கள் ஜாதிப் பெண்கள் வெள்ளைத்தோல் உடையவர்கள் என்று அவர் சொன்னால் அதுவும் ஜாதித் திமிர்தானே? அவர் பார்வையில் பெண்கள் வெறும் தோல் சம்பத்தப் பட்டவர்கள் என்றுதானே அர்த்தம்? இந்தப் பார்ப்பனக் கிழடின் வக்கிரத்தை, துவேஷத்தை எதிர்த்துப்பேச எந்த வெள்ளைத் தோலிகளும்/ தோழிகளும் முன்வராமல் இருப்பதற்கும் சாதிதானே காரணமாயிருக்கிறது? அவர்களுக்கும் சாதியை விட்டால் வேறு எதுவும் தெரியாது.

திப்புசுல்தான் மலபார் கவர்னருக்கு எழுதிய கடிதம் ஒன்றை சமீபத்தில் வாசித்தேன். "உங்கள் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்கள் சிலர் மேலாடை அணியாமல் இருக்கிறார்கள் என்று படித்தேன். அதற்குக் காரணம் வறுமையா, வேறு ஏதாவதா? வறுமை எனில் அதைக் களைய வேண்டியது உங்கள் பொறுப்பு. மத நம்பிக்கைதான் காரணம் எனில் அந்த நம்பிக்கையின் வேர் பாதிக்காமல் பக்கவமாக எடுத்துச்சொல்லி ஆடை அணிய வைக்க வேண்டும்."

மேலாடை அணியும் உரிமை மறுக்கப்பட்டிருந்தது நாடார், பறையர் போன்ற தாழ்த்தப்பட்ட பெண்களுக்கத்தான். ஒருவேளை தங்கள் மதப் பெண்களைப்போல இவர்களும் குப்பாயம் அணிய வேண்டும் என்றுகூட திப்புசுல்தான் விரும்பியிருக்கலாம். அது எல்லாமே இரண்டாம் பட்சம். ஆனால் இங்குள்ளவர்கள் வேறு ஒருவன் சுட்டிக் காட்டியும் திருந்தாதவர்களாய்த்தானே இருந்திருக்கிறார்கள் என்பதே முக்கியம்.

நூறு வருடங்களுக்கு முன்பு நாடார் பெண்ணுக்கு மேலாடை அணியும் உரிமை தேவைப்பட்டது. இன்றைக்கு அவளுக்கு வேறு உரிமைகள் தேவைப் படுகின்றன. கேரளாவில் ஈ.கே.நாயனார் முதல்வராயிருந்தபோது, நிதியை கிராமங்களுக்கு ஒதுக்கி அந்தக் கிராம மக்களே தங்கள் தேவைகளை முடிவு செய்து நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற திட்டம் கொண்டு வரப்பட்டது. மாநில அளவிலான இந்தத் திட்டத்துக்கு வழி காட்டியவர் தோழர் இ.எம்எஸ். ஒரு கிராமத்தில் ஆண்கள் அனைவரும் கூடிப்பேசி தெருவிளக்குகள் அமைத்தார்கள். அன்றிரவே அந்தக் கிராமத்துப் பெண்கள் அந்த விளக்குகளை உடைத்தெறிந்தார்கள்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் இரவில் வெளிச்சம் அதிகம் இருந்தால் பெண்களால் தங்களின் இயற்கைத் தேவைகளுக்காக வெளியில் செல்ல முடியாதென்பதால்தான் தெருவிளக்குகளை உடைத்து விட்டதாகத் டிதரிவித்தார்கள். இதைத் தெரிந்துகொண்ட இ.எம்.எஸ். அந்தக் கிராம சபைக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் "உங்கள் கிராமத்தில் முதலில் கட்டப்பட வேண்டியது கழிப்பிடம்தான். சபையில் ஆண்கள் மட்டுமே எல்லா முடிவுகளையும் எடுப்பதால் நம்மால் பெண்களின் பிரச்சனைகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. நாம் ஆண்களின் சபையாக சமூகத்தை வைத்திருக்கிறோம். எனவே அடுத்த கூட்டத்தில் இருந்து பெண்களையும் கலந்து பேசுங்கள். அவளால்த்தான் அவளது தேவைகளைப் பேச முடியும்" என்று எழுதினார்.

குடும்பத்தை எடுத்துக்கொண்டால் அங்கும் கணவன்தான் முடிவெடுக்கிறான். பெண்ணுக்குப் பங்கில்லாத அந்த முடிவை குடும்பத்தின் முடிவாக எடுத்துக்கொள்ள முடியாது. இந்தப் பெண்களின் நிலையைப்போல்த்தான் தலித்துகளின் நிலையும். இந்தியச் சமூகத்தில் இதுவரை முடிவெடுக்கும் இடத்தில் தலித்துகள் இருந்ததில்லை. அதிகாரத்திலும் அவர்கள் இல்லை. அப்படியானால் ஆதிக்க சக்திகள் எடுக்கும் முடிவுகள் தங்கள் ஆதிக்கத்தை தக்க வைத்துக் கொள்வதாகத்தானே இருக்கும்? நம் சமூகம் சாதியால் மட்டுமே பின்னப் பட்டிருக்கிறது என்பதைத்தான் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது.

**படித்தவர்களிடம் சாதிய உணர்வு இருக்கிறதா, அதை அவர்கள் எப்படி வெளிப்படுத்துகிறார்கள்?**

இப்போதெல்லாம்
யாரைப் பார்த்தாலும் "இப்பல்லாம் யார் சார் சாதி பாக்கிறா" என்றும், பெண்விடுதலை குறித்து பேச்சு வரும்போது,
"இப்பல்லாம் எந்தப் பொம்பிளை கஷ்டப்படறா ஆம்பிளைங்கதான் கஷ்டப்படறாங்க" என்றும் சொல்லும் ஒரு மேம்போக்கான போக்கு தென்படுகிறது. வெகுஜனப் பத்திரிகைகள் இந்தக் கேவலத்தை தொடர்ந்து செய்து வருகின்றன.

"நானெல்லாம் ரொம்ப சோஷியல் சார், சாதியெல்லாம் பார்க்கிறதில்லை" என்று சொல்பவர்களுக்கும் சாதியைத் தவிர வேறு எதுவும் தெரியாது என்பதுதான் உண்மை. பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் அவனால் எந்த இடத்திலும் சாதியைக் கைவிட முடியவில்லை. பொது இடங்களில் அதை வெளிப்படையாகக் கொண்டாட முடியவில்லை அவ்வளவுதான். "நான் உயர்ந்தவன், நீ என் அருகில் உட்காரவோ, என் எதிரே நிற்கவோ கூடாது" என்று பேச வைத்ததுதான் தீண்டாமை. அந்தத் தீண்டாமையை வெளிப்படையாகக் கடைப்பிடிக்க முடியவில்லையே தவிர சாதியை எந்த இடத்திலும் யாரும் கை விடவில்லை.

"சாதி என்பது ஒருவன் திருமணம் செய்து கொள்வதற்கான எல்லை" என்று முத்துமோகன் குறிப்பிடுவார். தன் அல்லது தன் குடும்பத்தாரின் திருமணத்தை இந்த சாதிய எல்லையைக் கடந்து செய்யாத வரைக்கும் அவன் சாதியைக் கடந்து விட்டதாகக் கூறுவதை ஏற்க முடியாது. சொந்த சாதிக்குள்ளேயே மறுபடியும் மறுபடியும் திருமணம் செய்து கொள்வதால் சொந்த சாதியைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள். அதில் ஒரு செங்கல்கூட விழுந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள்.

சாதியைக் கைவிடாமலேயே நாள் முழுவதும் வெளியே சமதர்மவாதியாக உலவுவதற்கான எல்லா வாய்ப்புகளும் நமக்கு இப்போ இருக்கிறது. பள்ளியில் எல்லா சாதி மாணவர்களும் அருகருகே அமர்ந்திருப்பதாலேயே சாதியை இழந்து விட்டதாக சொல்ல முடியாது. ஒரே அலுவலகத்தில் வேலை பார்ப்பதாலோ, ஒரே மேசையில் சாப்பிடுவதாலோ ஒருவர் சாதியைக் கைவிடவேண்டிய எந்த அவசியமும் இல்லை. தீண்டாமையை வெளிப்படையாக கடைப்பிடிக்கப்பட முடியவில்லையே என்ற ஆதங்கத்தோடுதான் இதுவும் நடக்கிறது.

சொந்த சாதி ஆளாகவே வீட்டிலிருந்து கிளம்பி, சொந்த சாதி ஆளாகவே வேலை செய்து, சொந்த சாதி ஆளாகவே கொண்டுசென்ற உணவை உண்டு, கையில் இருக்கும் பாட்டிலில் தண்ணீர் குடித்து சொந்த சாதி ஆளாகவே மாலையில் வீடு திரும்பி விடலாம். கண்டம் விட்டு கண்டம் சென்றவன் மட்டுமல்ல, கோள் விட்டுக் கோள் செல்பவனும் சொந்த ஊருக்குத் திரும்பி வந்து, அதே சாதியைச் சேர்ந்த, படித்த, அழகான, சிவந்த நிறமும், நீண்ட கூந்தலுமுடைய பெண்ணைத்தானே திருமணம் செய்து கொள்கிறான்?



தீண்டாமையைப் பழைய வடிவங்களில் பார்க்க முடியவில்லையே தவிர அதை முழுமையாக அவன் கைவிட்டுவிடவில்லை. "உயிரே போனாலும் நான் கடையில் சாப்பிடுவதில்லை" என்பார்கள் சிலர். "கடையில் சாப்பிடுவேன் ஆனால் நான்வெஜ் சாப்பிடுவதில்லை" என்பார்கள் சிலர். இதெல்லாம் என்ன? ஆட்டுக்கறி கேட்டால் மாட்டுக்கறியைக் கொடுத்து தன்னுடைய சாதிப் புனிதத்தைக் கெடுத்து விடுவார்கள் என்ற பயம்தானே? இப்படி மிக நுட்பமாக பல உத்திகளை வகுத்து தன்னுடைய சாதிப் புனிதத்தைக் காப்பாற்றும் பணி தொடரத்தான் செய்கிறது.

வெண்டைக்காயில் எத்தனை விதையிருக்கிறது என்றோ, எட்டுக்கால் பூச்சிக்கு எத்தனை கால் என்றோ ஆய்வு செய்து ஆய்வாளர் பட்டம் பெறுகிற படிப்பாளிகளும் இன்றும் அம்பேத்கர் குறித்து ஆய்வு செய்ய முன்வருவதில்லை.

அவர் ஒரு பொருளாதார ஆய்வறிஞர். அவரது முதல் ஆய்வே பொருளாதாரம் பற்றியதுதான். பார்ப்பனீயத்தை அம்பலப் படுத்துவதற்காக சமஸ்கிருதத்தைப் பயின்று பல மூல நூல்களை வாசித்தவர். இந்தியாவிலிருக்கும் எல்லா மதங்களின் கோட்பாடுகளையும் நுணுகிக் கற்றவர். பௌத்தத்தில் கரை கண்டவர். பத்திரிகையாளர். மிகச்சிறந்த நாடாளுமன்றவாதி.

அவரது கட்டுரைகளில் ஒரு பத்தியில் குறிப்பிடும் மேற்கோள்களையும், அடிக்குறிப்புகளையும் புரிந்துகொள்ள நீங்கள் இன்னும் பத்து நூல்களைப் படிக்க வேண்டியிருக்கும். ஆனாலும் அவரது பன்முகப்பட்ட ஆளுமையையும் மேதமையையும் அறிவுலகத்துக்கு வழங்கிய கொடைகளையும் தொட்டுப் பார்க்கவும் அருவருப்புக் கொண்டுள்ளனர். அவரது ஆய்வு முறைமைகளைத் தொடர்ந்து சென்று ஒரு புதிய சிந்தனைப் பள்ளியை வளர்த்தெடுக்காமல் போனதற்குக் காரணம் இந்திய படிப்பாளிகளும் ஆய்வாளர்களும் கடைப்பிடிக்கிற தீண்டாமைதானே? இதே கதிதான் புலேவுக்கும் அயோத்தி தாசருக்கும் நேர்ந்திருக்கிறது. அவர்களை முன்வைத்து நடந்த ஆய்வுகளெல்லாம் தலித்துகள் மேற்கொண்டதுதானேயன்றி தலித்தல்லாதவர்களால் அல்ல.

## ஒரு கவிதாமரத்தின் இறப்பு

சாரங்கா (லண்டன்)

தலையணைகளைச் சரிப்படுத்துகிற
வழமையான ஒரு காலைப் பகலில்
கிளைத்திருந்த துளிர்கள்
யாவையும் தொலைத்திருக்கும்
கவிதாமரம் மனசிடறிற்று.
மஞ்சளாகி
மூத்துதிரா அதன் திடீர் மரணம்
உன்னால்
என் மோதிரவிரலில் ஏற்பட்டிருந்த
பொன்விலங்கினால் நிகழ்ந்தது.

ஒரு அழகிய நதி
குதியல் தொலைத்து
குளமாகிய
அதே கணத்தில் இருந்து தான்
என் கழுத்தில் ஆடுகிறது
உன்னால் இடப்பட்ட மூன்று முடிச்சு.

யாருமருகற்ற பொழுதுகளில்
நினைவுகள் குலுங்கிச்
சரிகின்றன,
நீளவானில் வெடித்துதிருகிற
நட்சத்திரவால்களின் துரதிஷ்டத்தோடு.

கனவுகளின் மீதேறியிருந்த
வானவில் துகில்
வர்ணம் தொலைத்துள்ளதில்
கனவுகளும்
மீத வெற்று நனவுகளோடு
சேர்ந்துருள்கின்றன,
இருளில் பிணைதலுற்ற
இரு பாம்புகளாய்.

எனினும்
முன்பொருநாளில்
மனசு தேங்கிய
பச்சிலைகளின் வாசத்தில் மயங்கி
விழிமூடிக் கிடக்கிறேன்,
வாயில் மணி
உன் விரல் தொட்டு
அழும் வரைக்கும்.

நன்றி: **மை** கவிதைத்தொகுப்பிலிருந்து



## இருண்ட மண்

இருளுக்குள் ஒரு தேசம்
புரள்கிறது

புல்வெளியாய், பூவனமாய்
காடுகளாய், கழனிகளாய்
பரிணாமம் பற்பல
பெற்றிருந்த போதும்
'சூரியனின்' பார்வைகள்
துயர்துடைக்க வரவேயில்லை

வரண்ட வாழ்வினில்
கொழுந்துவிட்டெரியும்
துயரங்கள்...

'பொன்னுமணி'களையும்
'தங்கவேல்'களையும் விழுங்கியே
பொன் கொழிக்கிறது இம்மண்.
முதலாளியர் கைகள்
செழிக்கின்றன
முதலானவர் வயிறுகள்
வரள்கின்றன

வாழ்வு
விரக்தியின் விஸ்ருபத்தை
தரிசிக்கிறது!

வே.சசிகலா
கெலிவத்தை

நன்றி:
**இசை பிழியப்பட்டட வீணை**
கவிதைத்தொகுப்பிலிருந்து


# தேன் தமிழோசை - ஒலசுண்ட்

*Radio Tamil - Ålesund*










# தேன் தமிழோசை - பேர்கன்

*Radio Tamil - Bergen*

# GÅ IKKE GLIPP AV DE FERSKE NYHETENE FRA DITT DISTRIKT.

Bli fast leser!


- Bestill abonnement!

Tlf. 70 12 00 00

- Send SMS med kodeord AVIS til 901 20 901

eller bestill på smp.no

Sunnmørsposten


உயிர்மெய்